நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள்: இருபது+IV=24

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 13 சனிக்கிழமை (27.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 121

# ஒஸ்லோ அறிக்கையைப் பின்பற்ற வேண்டிய கடப்பாடு ஐ.தே.கவுக்கு இல்லை - ரணில்

## புலிகளே அதை முதலில் கைவிட்டனர் என்றும் அவர் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 27

"எனது தலைமையிலான ஐ.தே.கட்சி அரசுதான் புலிகளோடு இணக்கம் கண்டு ஒஸ்லோ அறிக்கையை (Oslo Communique)வெளியிட்டது என்பது உண்மை தான். ஆனால் எதிர்காலத்தில் அமையக்கூடிய ஐ.தே.க. அரசுக்கு அத்தகைய உடன்பாட்டை மதித்துச் செயற்படவேண்டிய கடப்பாடு ஏதும் கிடையாது. ஏனெனில் அந்த இணக்கத்தின் மற்றத் தரப்பான விடுதலைப் புலிகள் இயக்கம் அதிலிருந்து முதன் முதலில் - நேரத்தோடு - வெளியேறிவிட்டது. அந்த நிலையில் அந்த உடன்பாட்டு ஏற்பாட்டைத் தொடர்ந்து கடைப்பிடித்துப் பின்பற்றவேண்டிய கடப்பாடு ஏதும் மற்றைய தரப்பான ஐ.தே.க. அரசுக்குக் கிடையாது."

- இப்படி வெளிப்படையாக - வெட்ட வெளிச்சமாக - அறிவித்திருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.

கொழும்பில் தமது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைத்து 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளுக்கு நேற்று வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

2001ஆம் ஆண்டின் முடிவில் இருந்த சூழ்நிலையில் உடனடியாக அந்தக் கோர யுத்தத்தை நிறுத்த வேண்டிய தேவை இருந்தது. நாம் சமயோசிதமாகச் செயற்பட்டு அதை நிறுத்தினோம்.

அதன்பின்னர் இடம்பெற்ற சமாதானப் பேச்சுகளின் போது ஒஸ்லோ இணக்கப்பாட்டின்

(19ஆம் பக்கம் பார்க்க)

## தபால் மூலம் வாக்களிப்பு; தவறியோருக்கு மீண்டும் சந்தர்ப்பம்

கொழும்பு,மார்ச்27

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பைப் பயன்படுத்தத் தவறியோரின் வாக்குகள் ரத்துச் செய்யப்படமாட்டாதென தேர்தல்கள் செயலகம் தெரிவித்தது.

கடந்த வியாழன், வெள்ளிக் கிழமைகளில் தபால் மூலம் வாக்களிக்க முடியாது போனோருக்கு ஏனைய வாக்காளர்களைப் போல வாக்களிக்க வசதியாக வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல்கள் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குலதுங்க குறிப்பிட்டார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வணிகர் கழகத்தின் 3 நாள் கண்காட்சி இன்று ஆரம்பமாகிறது

### நூறுக்கும் அதிகமான தெற்கு நிறுவனங்கள் பங்கேற்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 27

யாழ்ப்பாணம் வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி இன்று கோலாகலமாக ஆரம்பமாகின்றது. தொடர்ந்து மூன்று நாள்களும் வேம்படி, யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றில் கண்காட்சி இடம் பெறும்.

இன்று காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா கண்காட்சியை வைபவரீதியாகத் திறந்துவைப்பார்.

இக்கண்காட்சியில் நூறுக்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள் பங்கேற்கின்றன.

இக்கண்காட்சி காலை 9 மணி முதல்

(20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.நகரில் இந்திய 'விஸா' அலுவலகம்; இந்திய அதிகாரிகள் நேற்று ஆராய்வு

### அரச அதிபர் கணேஸுடன் பேச்சு

யாழ்ப்பாணம்,மார்ச்27

யாழ்ப்பாணத்தில் 'விஸா' அலுவலகம் அமைப்பதற்கு சாத்தியமான இடங்கள் தொடர்பாக யாழ்.வந்த இந்திய அதிகாரிகள் ஆராய்ந்தனர்.

இந்திய தூதரக ஆலோசகரான சந்தோஸ் ஜா அவரது உதவியாளர் வினய்குமார் ஆகியோர் கொண்ட குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

யாழ்ப்பாணத்தில் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள 'விஸா' அலுவலகத்துக்கான இடத்தைத் தெரிவு செய்வதற்காக யாழ். அரச அதிபர் கே.கணேஸுடன் குழுவினர் ஆராய்ந்தனர்.

ஏற்கனவே யாழ்.அரச அதிபரால் இனங்காணப்பட்ட இடங்களை அவர்கள் பார்வையிட்டனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடு விமான ஓடுபாதை அரசின் விமான சேவைகளுக்கு

### பயிற்சி நிலையம் அமைக்கவும் திட்டம்

கொழும்பு,மார்ச்27

கிளிநொச்சியில் புலிகளால் அமைக்கப்பட்ட இரணைமடு விமான ஓடுபாதையை விமான சேவைக்குப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

யுத்தத்துக்குப் பின்னரான வடபகுதி அபிவித்தித் திட்டத்தின் கீழ் இந்த விமான ஓடுபாதையை உள்ளடக்கி விமான சேவைக் கட்டடத் தொகுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியில் விமான சேவை பயிற்சி நிலையம் ஒன்றுடன் ஆய்வு நிறுவனம் ஒன்றும் அடங்கும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஒருவர் கூறினார்.

(அ-சி)

## எதிரணி எம்.பிக்களுக்கு விலக்கப்பட்ட பாதுகாப்பை வழங்க நீதிமன்று பணிப்பு

கொழும்பு,மார்ச் 27

எதிர்க்கட்சியைச் சேர்ந்த 18 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் 24 மணி நேரப் பாதுகாப்பை வழங்குமாறு உயர் நீதிமன்றம், பொலிஸ் மா அதிபருக்கு நேற்று உத்தரவிட்டது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் தமக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய உட்பட 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொண்ட வேளையிலேயே இந்த உத்தரவைப் பிறப்பித்தது உயர் நீதிமன்றம்.

ஆகக் குறைந்தது இரண்டு உத்தியோகத்தர்களையாவது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்கு வழங்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்ட உயர்நீதிமன்றம் 24 மணிநேர பாதுகாப்பை வழங்குமாறும் பணித்தது.(அ-சி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வைரவப்பிள்ளை வடிவாம்பிகை



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், ஊரெழு மேற்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு வைரவப்பிள்ளையின் மனைவி வடிவாம்பிகை (24.03.2010) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

ஊரெழு மேற்கு,
ஊரெழு (95948)

## கந்தையா ஜேம்சன் பவசிங்கம்

(முன்னாள் காசாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஜேம்சன் பவசிங்கம் நேற்று (26.03.2010) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி கிருபா பவசிங்கம் (முன்னாள் ஆசிரியை, மானிப்பாய் இந்துக்கல்லூரி) அவர்களின் அன்புக் கணவருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி கிருபா பவசிங்கம்.

'குமார வாசா',
டச்சு வீதி, உடுவில் மேற்கு. (94811)

## சிதம்பரப்பிள்ளை மகாதேவன்



காரைநகர், முல்லைப்பிலவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை மகாதேவன் நேற்று (26.03.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்வமலரின் அன்புக் கணவரும், குகதாசன் (கனடா), யோகராசா (கனடா), மகாலட்சுமி (அவுஸ்திரேலியா), புஸ்பராணி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
செல்வமலர் (மனைவி),
பிள்ளைகள்.

முல்லைப்பிலவு,
காரைநகர். (94932)

## சாட்டி ஆலயத்தை நோக்கி இன்று தவக்கால யாத்திரை

குருநகர்,மார்ச் 27

ஊர்காவற்றுறையில் உள்ள கத்தோலிக்க மக்கள் இன்று சனிக்கிழமை தவக்காலப் பாதயாத்திரையைச் சாட்டி மாதா கோயிலை நோக்கி மேற்கொள்ளவுள்ளார்கள்.

இப்பாத யாத்திரை ஊர்காவற் றுறை, கரம்பொன், நாரந்தனை ஆகிய இடங்களில் இருந்து இன்று காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இத்தவக்காலப் பாதயாத்திரையில் பங்குபற்றவுள்ள மக்களுடன் ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனைப் பங்குகளைச் சேர்ந்த பங்குக் குருக் களும் இணைந்துகொள்வர். (50-51)

## முதியோர், மாற்று வலுவடையோர் சங்கங்களின் கூட்டம் இன்று

நவாலி,மார்ச் 27

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முதியோர் சங்கங்களினதும் மாற்று வலுவுடையோர் சங்கங்களினதும் கூட்டம் இன்று சனிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

முதியோர் சங்கங்களின் கூட்டம் காலை 9 மணிக்கும், மாற்று வலுவுடையோர் சங்கங்களின் கூட்டம் மு.ப 10.30 மணிக்கும் இடம் பெறும் என்று சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார். (ஒ-100)


### வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் வசிக்கக் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உடன் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0776513886, 0774244253

### தேவை

★ ரைப்செற்றிங், பிறின்ரிங் அனுபவமுள்ள பெண்
★ Ms office, Graphics Design கற்பிக்கக் கூடியவர்கள்.

APTECH COMPUTER STUDIES
Ampalavanar Street,
Uduvil, Chunnakam.
தொ.பே: 0771726642


# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

(ஆயுள்வேத வைத்தியர்)

கல்வயலைப் பிறப்பிடமாகவும், மடத்தடி கிழக்கு, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுப்பிரமணியம் நேற்று (26.03.2010) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம்-செல்லாச்சி தம்பதியரின் புதல்வனும், அமரர் தங்கமுத்துவின் பாசமிகு கணவரும், சண்முகலிங்கம், நடராசலிங்கம், அருளானந்த பூபதி, காலஞ்சென்ற விமலேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் விசாலாட்சி, அமரர் நடராசா, சிவப்பிரகாசம், கோவிந்தசாமி (இந்தியா), சின்னத்தம்பி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்வரத்தினம், காலஞ்சென்ற தியாகராசா, தனலட்சுமி, சோதிமலர் ஆகியோரின் பாசமிகு மாமனும், அமுதவல்லி, சுந்தரவல்லி, கேதீஸ்வரி, சிறிகாந்தன் (யாழ்.பல்கலைக்கழக கலைப் பிரிவு 2ஆம் வருட மாணவன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2010) சனிக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/566211)

## வைத்திலிங்கம் சிவபாதம்

(பண்டத்தரிப்பு பிரிஷ் ப.நோ.கூ.சங்க முன்னாள் காசாளரும், வடபிராந்திய கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க முன்னாள் செயலாளரும்)



மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது இவான் வீதி, தொல்புரம் கிழக்கு, சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவபாதம் (25.03.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-பராசக்தி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற செல்லையா- தங்கமுத்து தம்பதியரின் மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், முருகதாஸ் (நியூ வி.எம்.கே. ஜூவலறி ஊழியர், சாவகச்சேரி), சங்கரதாஸ் (பிரான்ஸ்), கபில்தாஸ் (கஜன்முகன் ஹாட்வெயர்), கேசவதாஸ் (யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம், வர்த்தகப்பிரிவு-2011) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10.30 மணியளவில் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
சி.முருகதாஸ் (மகன்),
(நியூ வி.எம்.கே. ஊழியர், சாவகச்சேரி)
தொ.பே: 077 9000396

இவான் வீதி,
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

## சுவாம்பிள்ளை மலக்கியாஸ்

(இளைப்பாறிய அதிபர், யா/நாவாந்துறை றோ.க.த.க வித்தியாலயம்)



விடத்தல்தீவைப் பிறப்பிடமாகவும், நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாம்பிள்ளை மலக்கியாஸ் 26.03.2010 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை-எலிசபேத் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்- விக்றோறியா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மரியமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற டக்ளஸ் நியூட்டன் (பிரான்ஸ்), டெனிஸ்கனிசியஸ், மேரி மேசிடஸ், டொறிஸ் (அமெரிக்கா), அன்ரனிஸ்ஸ்ரீபன் (சுவிஸ்), அன்ரனிஸ்காந்தன் (பிரான்ஸ்), எமிலிஅஞ்சலா, கிளமன்யூட் (பிரான்ஸ்), றெஜிஇராஜேஸ்வரன் (இந்தியா), அருட்சகோதரி விக்ரறின் செல்வதி (திருக்குடும்ப கன்னியர் சபை), றஜனி செல்வகுமாரி, செல்வநாயகி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுமதி (பிரான்ஸ்), சாந்தி டென்சிங் (அமெரிக்கா), ஜெயா (சுவிஸ்), பிறேமினி (பிரான்ஸ்), யூஜின், வதனா (பிரான்ஸ்), மேரி (இந்தியா), புஸ்பராசா, அகிலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அருட்சகோதரி மேசிடஸ் (திருக்குடும்ப கன்னியர் சபை) அவர்களின் பாசம் நிறைந்த அத்தானும், காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை, சந்தியாப்பிள்ளை (ஓய்வு பெற்ற அதிபர்), காலஞ்சென்ற லூர்த்தம்மா, காலஞ்சென்ற செசிலியா, அடைக்கலம் (ஓய்வு பெற்ற அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், யூலியா, யூலியஸ், யுஸ்ரினா (பிரான்ஸ்), டிலானி, டிலைக்சனா, டிசாந்தி, டொறின், டொறிங்ரன், டொறின்சி, றெக்சன் (அமெரிக்கா), பேட்சன் (பிரான்ஸ்), பேட்சலா, யூட்சலா, ஷகானு, மெஸ்வின் (பிரான்ஸ்), யூலின், மர்வின் (பிரான்ஸ்), ஸ்ரெபி (சுவிஸ்), தேவமலர், விக்ரோறியா, றெஜினா (இந்தியா), நியனிஸ் பெமக்ஸ்சன் ஆகியோரின் அன்புப் பேரனும், கேவினா எப்சியின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் விசுவாசிகளின் வழக்கப்படி இறுதி நல்லடக்க ஆராதனைகளுக்காக இன்று (27.03.2010) சனிக்கிழமை மாலை 4 மணிக்கு அவருடைய இல்லத்தில் இருந்து நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

இல. 13, கோயில் ஒழுங்கை,
நாவாந்துறை, யாழ்ப்பாணம். (94809)


# டச்வுட் யாழ்ப்பாணத்திற்கு வந்துவிட்டது

முதலீட்டு சபையினரால் அங்கீகரிக்கப்பட்டு கொழும்பு மூலதன பரிமாற்று நிறுவனத்தில் பட்டியலிடப்பட்டு ISO தரச்சான்றிதழ் பெறப்பட்ட ஒரு நிறுவனமே டச்வுட். இலங்கையிலும், தாய்லாந்திலும் இயங்கும் இந்த நிறுவனம் பிராந்தியத்தின் மிகச் சிறந்த நிறுவனமாக காணப் படுகிறது. காடு வளர்ப்பு தொடர்பான சூழலியல் மற்றும் முகாமைத்துவ தரத்தைப் பெற்றுள்ளது. சிறந்த பலனைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு மரமும் இலக்கமிடப்பட்டு உயரம், விட்டம், செழுமை, வளர்ச்சி வளத்தேவைகள் என்பன பராமரிப்பாளர்களால் ஆராயப் படுகின்றது. 10 நாடுகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள இந்நிறுவனம் 2015 ஆம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் பிரதான 1000 நிறுவனங்களில் ஒன்றாக வேண்டுமென்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் உன்னத வரவேற்பை பெற்றுள்ள வாசனைத் திரவியங்களில் ஒன்றான சந்தனக்கட்டையின் பாவனையானது 4000 வருடங்களுக்கும் அப்பால் செல்கிறது. சவர்க்காரம், நறுமணப்புகை, மருந்து வகைகள் என்பன ஆதிகாலத்திலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. இது எண்ணெய் உற்பத்திக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ''சன்ட்டலம் எல்பம்'' மேற்கு இந்திய சந்தனக் கட்டை என அழைக்கப்படுகின்றது. இதில் தயாரிக்கப்படும் எண்ணெய் நறுமணம் காரணமாக அதிக விலைபோகின்றது.

## 16 வருடங்களில் எனது இலாபம் என்னவாக இருக்கும்?

| சந்தனக் கட்டை மரங்களின் எண்ணிக்கை | ஆரம்பச் செலவு ரூபா | திட்டமிடப்பட்ட அறுவடை பெறுமதி ரூபா |
|---|---|---|
| 6 | 99,000 | 3,000,000 |
| 12 | 195,000 | 6,000,000 |
| 25 | 385,000 | 12,500,000 |
| 50 | 732,000 | 25,000,000 |
| 100 | 1,397,000 | 50,000,000 |
| 200 | 2,662,000 | 100,000,000 |

டச்வுட் இன்வெஸ்ட்மென்ட் PLC
02ஆம் தளம், பிரின்ஸ் ஆல்பிரட் டவர்,
இல. 10, ஆல்பிரட் ஹவுஸ் காடன்ஸ்,
கொழும்பு-03, ஸ்ரீலங்கா.
தொலை பேசி: +9411 7 444 888
தொலை நகல்: +9411 4 721 449
உடனடி அழைப்பு: +94 714 299 299/ +94 773 668 008
ஈமெயில்: investments.lk@touchwood.com
இணையதளம்: www.touchwood.lk

TOUCHWOOD

• ஸ்ரீலங்கா • ஹொங்கொங் • ஆஸ்திரேலியா • தாய்லாந்து
• டுபாய் • தென்.ஆபிரிக்கா • ஐக்கியஇராச்சியம் • கம்போடியா

27,28,29 ஆம் திகதிளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும் வர்த்தகக் கண்காட்சியில் எமது சேவைகளை நாங்கள் வழங்கவுள்ளோம்.

உங்கள் எதிர்காலத்தை வளமாக்கி கொள்வதற்கு

மேலதிக விபரங்களுக்கு:
யாழ்ப்பாணத்தில் இருக்கும் டச்வுட் முதலீட்டு ஆலோசகர்களை அணுகலாம்.
எம். சிறஞ், 0777569615, எம். ரூபன் - 0785377683 (சி/5662213)


## மகளிர்தினவிழா

பருத்தித்துறை தெற்கு மாதர்சங்கத்தின் மகளிர் தினவிழா ஹற்றன் நஷனல் வங்கி அஸ்சுரன்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மாதர்சங்கத் தலைவி திருமதி எம்.பவானி தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக காப்புறுதி முகாமையாளர் எஸ். சசிதரன், சிறப்பு விருந்தினராக வெளிக்களமுகாமையாளர் வி. அலன் கியூமன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஒ-10-190)

## பரீட்சையும் வழிகாட்டல் வகுப்பும்

க.பொ.த. உயர்தர மாணவர்களின் நலன் கருதி ஆசிரியர் நாக. தமிழிந்திரன் நடத்தும் வெற்றிவழிப் பரீட்சையும் வழிகாட்டல் வகுப்பும் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவுள்ளன.

உயர்தர மாணவர்களுக்கான தமிழ் பாட வெற்றிவழிப் பரீட்சை நாளை காலை 7 மணிக்கும், வழிகாட்டல் வகுப்பு நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில், மக்கள் வங்கிக்கு அருகில் உள்ள [illegible] இல் நடைபெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஒஸ்லோவைக் கைவிட்டதால் வந்த வினை

இலங்கைத் தமிழர்கள் - குறிப்பாக வடக்கு, கிழக்குத் தமிழர்கள் - விசேடமாக நோக்க வேண்டிய ஒரு விடயத்தை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, அவர் தலைமையிலான அரசு தமிழ்த் தரப்பின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பல சுற்றுப் பேச்சுகளை நடத்தியது. அந்தப் பேச்சுகளின் பயனாக - தீர்வு முயற்சியில் எட்டப்பட்ட - முக்கிய இணக்கத்தையே ஒஸ்லோ அறிக்கை (Oslo Communique) என்று அழைக்கின்றார்கள். 2002 டிசம்பர் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் உள்ள 'எஸ்.ஏ.எஸ். பிளாஸா' ஹோட்டலில் நடைபெற்ற பேச்சுகளின் போது இந்த இணக்கம் காணப்பட்டது.

*''விடுதலைப் புலிகளின் தலைமை தெரிவித்த ஒரு யோசனைக்கு இசைவாக, உள்ளக சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ்பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகத்தில், ஐக்கியமான இலங்கைக்குள், சமஷ்டி ஆட்சி முறை தழுவிய தீர்வு ஒன்றை ஆராய்ந்து பார்ப்பதற்கு இரு தரப்புகளிலும் இணக்கம் காணப்பட்டது.''* - என்பதே ஒஸ்லோ அறிவிப்பாகும்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.கட்சி அரசே மேற்படி உடன்பாட்டுக்குத் தமிழர் தரப்போடு வந்திருந்தது.

ஆனால், தமிழர்களோடு உடன்பாடு காண்பதும், பின்னர் அதைக் கிழித்தெறிவதுமான தென்னிலங்கை ஆட்சிப் பீடத்தின் கடந்த அறுபது ஆண்டு காலப் பரவணிப் பழக்கப்படி - வழமையான பண்பியல்புகளின்படி - ரணிலும் அந்த உடன்பாடு இனிமேல் கருத்தில் எடுக்கப்படத்தக்கதல்ல என்பதை வெளிப்படுத்தி, அந்த இணக்கத்தைக் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசிவிட்டார்.

''புலிகளுடன் அந்த உடன்பாட்டுக்கு நாம் வந்தோம் என்பது உண்மைதான். ஆனால் எங்களுக்கு முன்னரே புலிகள் அந்த உடன்பாட்டைத் தூக்கி எறிந்துவிட்டார்கள். அந்த ஒஸ்லோ அறிக்கையை முன்வைத்துத்தான் 2005 ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பை நாம் அணுகினோம். அது பகிரங்கமான விடயம். ஆனால் அதை ஆதரிக்க மறுத்து, தமிழ்மக்களை எமக்கு ஆதரவாக வாக்களிக்க விடாமல் தடுத்ததன் மூலம் அந்த உடன்படிக்கை தொடர்பில் எமக்குள்ள கடப்பாட்டை எங்களிடம் இருந்து விலக்கச் செய்தவர்களே புலிகள்தான். அந்த இணக்கத்தில் நேரடியாக எம்முடன் சம்பந்தப்பட்ட புலிகளே பின்பு அதிலிருந்து விலகி, அதை நிராகரித்துச் சென்ற பின்னர், அந்த உடன்பாட்டுக்கு நாம் கட்டுப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.'' - என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

அதுமட்டுமல்ல. இந்த விடயத்தை ஒட்டி அவர் சுட்டிக்காட்டியுள்ள இன்னொரு அம்சமும் ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

''எமது அரசுடன் 'ஒஸ்லோ அறிக்கை' என்ற இணக்கத்துக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் வந்த போது அந்த உடன்பாட்டை முழு சர்வதேச உலகமுமே பெரும் சாதனையாக வரவேற்றது. குறிப்பாக மேற்குலகு இது விடயத்தில் புளகாங்கிதம் கொண்டது. ஆனால் புலிகள் இயக்கம் அதிலிருந்து வெளியேறி, அந்த இணக்க ஏற்பாட்டை முன்னெடுக்க விடாமல் முட்டுக்கட்டைபோட்டு, அந்த இணக்கத்தை நிராகரித்து, ஒருதலைப்பட்சமாகச் செயற்படத் தீர்மானித்த போதே சர்வதேசம் - குறிப்பாக மேற்குலகம் - விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதிராகக் கடுஞ் சீற்றத்துடன் திரும்பியது.'' - என்ற தகவலையும் ரணில் வெளியிடுகின்றார்.

சமாதான முயற்சிகளுக்குத் திரும்பிய புலிகள் இயக்கம் ஒஸ்லோ உடன்பாட்டைக் கைவிடத் தீர்மானித்ததை அடுத்தே சர்வதேச உலகு புலிகளுக்கு எதிராக மேலும் கோபத்தோடு திரும்பியது என்ற ரணிலின் கூற்று மறுக்கக் கூடிய ஒன்றல்ல. அதன் விளைவையே புலிகள் இயக்கம் மட்டுமல்ல, வடக்கு -கிழக்கின் ஒவ்வொரு தமிழனும் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கின்றான் என்பதும் கூடப் பொய்யல்ல.

கடைசிப் பற்றுக்கோடாகக் கிடைத்த ஒஸ்லோ அறிக்கையை, ஆயுத வலிமையோடும், அதனால் கிடைத்த அபரிமிதமான பேரம் பேசும் பலத்தோடும் திகழ்ந்த புலிகள் இயக்கம் - புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தமது புத்திசாதுரியத்தாலும் மிக நுட்பமான காய் நகர்த்தல்கள் மற்றும் தந்திரோபாய நடவடிக்கைகளாலும் தீர்க்கதரிசனமான சிந்தனைப் போக்காலும் உருவாக்கித் தந்த அந்தத் திட்டத்தை - உதாசீனப்படுத்தி, புறக்கணித்து, கைவிட்டு, நிராகரித்து, வெளியேறியமையின் விளைவுதான் இன்று தமிழர்களின் இந்த நிர்க்கதி நிலையாகும்.

ஆயுதம் தாங்கிய வலிமையோடும் செல்வாக்கோடும், உரிய தகைமைகளோடும் இருந்த புலிகள் இயக்கமே 'ஒஸ்லோ அறிக்கை' உடன்பாட்டை ஏற்க மறுத்ததால் இப்படி ஆகிப்போன நிலையில் -

ஆயுத பலமுமின்றி, பற்றுக்கோடுமின்றி, தமிழர் தரப்பு இன்று தள்ளாடும் சூழ்நிலையில் தங்களைத் தமிழர் தரப்பின் தலைமைகள் என்று சுயமாகக் கூறிக்கொள்ளும் சில சக்திகள், ஒஸ்லோ உடன்பாட்டையும் நிராகரித்து, அதற்கு மேல் வட்டுக்கோட்டைத் தீர்மானம் வரை பின்நகர்ந்து சென்று வெறும் வாயால் முழம் போட்டுக்கொண்டிருப்பது அர்த்தமற்றது; அபத்தமானது.

இந்தப் பொதுத் தேர்தலில் தமிழர்கள் தமது சிந்தனைக்கு எடுத்து, முன்னுரிமை அளித்துக் கவனித்து, தீர்மானம் எடுக்க வேண்டிய முக்கிய விடயங்களில் இதுவும் ஒன்று.

இன்றைய நிலையில் யதார்த்தமாக இயலாத கனவுலகக் கொள்கைகளைப் பற்றிப்பிடித்துப் பிதற்றிக்கொண்டு அலைவதை விட, யதார்த்தபூர்வ உலகில் சாத்தியமாகக் கூடிய இலக்குகளை நோக்கி, கனவுகளைத் திருப்புவதும், அவற்றை எட்டிய பின் அடுத்த கட்டமாக மேலும் முன்னேற இலக்கு வைப்பதுமே சிறந்ததாகும்.

# யாழ்.பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நேற்றுக் கோலகலமாக ஆரம்பமானது

## 3,972 பேர் பட்டம் பெறுகின்றனர்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

யாழ்.பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று வெள்ளிக்கிழமை காலை கைலாசபதி கலையரங்கில் கோலாகலமாக ஆரம்பமானது.

பட்டமளிப்பு விழாவில் முதலாவது அமர்வு நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமானது. முன்னதாக யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்துப் பட்டம் பெறும் மாணவர்கள் மங்கள வாத்தியம் சகிதம் அழைத்துச் செல்லப்பட, அதன் பின்னால் பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் அணிவகுத்துச் சென்றனர். இவர்களின் பின்னால் யாழ். பல்கலைக்[illegible]வேந்தர் பேரா சிரியர் ம.சிவசூரிய[illegible]துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் பாரம்பரிய முறைப்படி அழைத்துச் செல்லப்பட்டனர்.

கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய பட்டமளிப்பு விழாவுக்கான தனது உரையை வழங்கி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

அதன்பின்னர் துறைசார் பீடாதிபதிகள் தமது பீடங்களில் இருந்து பட்டம் பெறும் மாணவர்களின் பெயர்களை வாசித்தனர். அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக வேந்தர் ம. சிவசூரிய பதக்கங்களை அணிவித்துப் பட்டங்களை வழங்கிக் கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ். அரச அதிபர் கே.கணேஷ், யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

2005, 2006, 2007 ஆகிய மூன்று கல்வியாண்டுகளில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களில் ஒரு தொகுதியினருக்கே நேற்றைய முதலாம் நாள் அமர்வில் பட்டம் வழங்கப்பட்டது.

நேற்றுக்காலை முதல் மாலை வரை 5 அமர்வுகளாகப் பட்டமளிப்பு விழா இடம்பெற்றது. இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் இந்தப் பட்டமளிப்பு 5 அமர்வுகளாக நடைபெறவுள்ளது. தினமும் 5 அமர்வுகள் என்ற வகையில் 15 அமர்வுகளில் 3,972 பேர் பட்டம் பெறுகின்றனர்.

(50-16)

# இன்றைய நாள் உங்கள் வாழ்வில் திருநாள் உங்கள் உழைப்புக்கு ஆசிதரும் பெருநாள்

## நேற்றைய பட்டமளிப்பு விழா நிகழ்வில் துணைவேந்தர் வரவேற்புரை

யாழ்ப்பாணம்,மார்ச் 27

வல்லமைமிக்க, சமூக பண்பாட்டு உணர்திறன் மிக்க ஆளுமைகளாய் எழுந்திடுங்கள். மனித சமூக மேம்பாட்டின் மலர்ச்சிக்கான உங்கள் வெற்றிகளில் இனிதே மகிழ்ந்திருப்போம்.

யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு வைபவத்தில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வாழ்த்து வரவேற்புரையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர்மேலும் கூறியவை வருமாறு:

எங்கள் செழுங்கலை நியமத்து வீற்றிருந்து எங்களை வழிப்படுத்தும் பார்வதி சமேத பரமேஸ்வரன் பாதாரவிந்தங்களைப் பணிந்து இன்றைய 25ஆவது பட்டமளிப்பு வைபவத்தில் இணைந்துள்ள உங்கள் எல்லோரையும் எல்லையில்லாத மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

பட்டமளிப்பு வைபவம் பல்கலைக்கழக கல்வி மரபின் மேன்மையான தொடர்ச்சி.

அழியாத பெருஞ் செல்வமான கல்வி அழகுக்கு அணி செய்கின்ற பண்பாட்டு வைபவம்.

ஒரு நீண்ட இடைவெளிக்குப் பின் இந்தப் பாரம்பரியத்தைக் காக்கும் பெருமையை இந்நாள் எங்களுக்குத் தந்துள்ளது.

அன்பான பிள்ளைகளே! உங்கள் வாழ்வில் இது ஒரு திருநாள். சூழமையின் இடர்களிடை தளராத உங்கள் உழைப்புக்கு ஆசிதரும் பெருநாள்.

எங்கள் பல்கலைக்கழகத்தின் உயரிய இலக்குகள், கனவுகள் மெய்ப்பட, வல்லமைமிக்க, சமூக பண்பாட்டு உணர்திறன் மிக்க, அர்ப்பணிப்பும் ஆக்கத்திறனும் - அயார உழைப்பில் உறுதியும் கொண்ட ஆளுமைகளாய் எழுந்திடுங்கள். அழகான நாளையின் மனித சமூக மேம்பாட்டின் மலர்ச்சியிலே நீங்கள் காணும் வெற்றிகளில் இனிதே மகிழ்ந்திருப்போம். பட்டம் பெறும் அனைவருக்கும் எங்கள் இதயம் நிறைந்த வாழ்த்துக்கள் - என்றார்.

(ஒ-1)

# குருத்தோலை ஞாயிறு வழிபாடுகள் நாளை

கொழும்புத்துறை,மார்ச் 27

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தின் இறுதி வாரமான புனித வாரத்தை ஆரம்பிக்கும் குருத்தோலை ஞாயிறு வழிபாடுகள் அனைத்து தேவாலயங்களிலும் நாளை காலை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இயேசு பாடுகளை ஏற்பதற்கு முன் ஜெருசலேம் தேவாலயத்திற்கு வந்த போது மக்களால் அமைதியின் அரசன், விடுதலை வேந்தன் என வரவேற்கப்பட்டு அழைத்துச் சென்றதை நினைவு கூரும் வகையில் இந்த வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

குருத்தோலைகள் மந்திரிக்கப்பட்டு கைகளில் ஏந்தி 'ஓசன்னா' முழக்கமிட்டு இந்த வழிபாடுகளில் மக்கள் பங்கேற்பர். யாழ்.மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர். தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் காலை வழிபாடுகள் இடம்பெறும்.

(ஒ-135)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 14 | 28.03.2010 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி | : திரயோதசி |
| | பி.ப.12.53 வரை |
| நட்சத்திரம் : | பூரம் |
| | பி.இ.12.53 வரை |
| சுபநேரம் | : 09.14-10.44 வரை |
| ராகுகாலம் : | 04.44-06.14 வரை |

# படகுச் சேவையை அதிகரிக்காததால் நெடுந்தீவு மக்கள் நாளாந்தம் அவதி

## தற்போது ஒரு சேவை மட்டுமே நடக்கிறது

நெடுந்தீவு,மார்ச்27

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே சேவையில் உள்ள அரச படகு 'குமுதினி' பழுதடைந்ததைத் தொடர்ந்து நெடுந்தீவுக்கான பயணிகள் படகுச் சேவை தினமும் ஒரு தடவை மட்டுமே இடம்பெறுகின்றது.

நெடுந்தீவு பல நோ.கூ. சங்கம் கடற்றொழிலாளர் சமாசம் ஆகியனவற்றிடம் படகுகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் தனித்தனி இரு சேவைகளை நடத்தினால் பயணிகள் சிரமமின்றிப் பயணிக்கக் கூடியதாக இருக்கும் என்று பயணிகள் தெரிவிக்கின்றனர். எனினும் உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்காதமையால் தொடர்ந்து ஒரு படகு மட்டுமே சேவையாற்றி வருகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்தப் படகுகளைப் பயன்படுத்தி இரண்டு சேவைகளை மேற்கொள்ள முடியும் என்றும் கடந்த காலங்களில் அரச படகு பழுதடையும்போது மேற்படி படகுகளை வாடகைக்கு அமர்த்தி சம்பந்தப்பட்ட திணைக்களம் சேவைகளை நடத்திவந்துள்ளது என்றும் பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(ஒ-க-111)

### சாவகச்சேரி வடக்கு மருதடிப் பகுதியில்

# புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டதால் பிரதேச மக்களுக்குச் சீரான மின் விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்27

சாவகச்சேரி வடக்குப் பிரிவுக்கெனப் புதிய மின்மாற்றி பொருத்தப்பட்டதை அடுத்து அப்பகுதியில் மின்சார விநியோகம் சீரடைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அப்பகுதிக்குரிய மின்மாற்றி கடந்த சில தினங்களுக்கு முன்னர் பொருத்தப்பட்டதை அடுத்து மின் விநியோகம் சீரடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி வடக்கு மருதடிப் பகுதியில் இருந்த மின்மாற்றி யுத்த கால அனர்த்தங்களின்போது சேதமாக்கப்பட்டதால் வேறு இடங்களில் இருந்த மின்மாற்றிகள் மூலமே மின் விநியோகம் நடைபெற்று வந்தது.

இதனால் குறைந்த வலுக்கொண்ட மின்சாரமே இப்பகுதி மக்களுக்குக் கிடைத்து வந்த நிலையிலே பழைய இடத்தில் மீண்டும் மின்மாற்றி பொருத்தப்பட்டதை அடுத்து மின்விநியோகம் சீரடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-207)

# இலங்கை வங்கி அறிமுகம் செய்யும் மாகாண அபிவிருத்தி கடன் திட்டம்

## நிகழ்வில் மத்திய வங்கி ஆளுநரும் பங்குபற்றுவார்

யாழ்ப்பாணம்,மார்ச்27

வடபிராந்தியத்தைக் கட்டி எழுப்பும் நோக்குடன் இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண அபிவிருத்திக் கடன் திட்டம் வடக்கின் வசந்தம் திட்டம் என்பனவற்றின் கீழ் யாழ்.மாவட்டத்தின் இலங்கை வங்கிக் கிளைகள் ஒன்றிணைந்து கடன் திட்டங்களை வழங்கவுள்ளன.

இந்தக் கடன் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் மருதனார்மடத்தில் உள்ள இராமநாதன் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மத்திய வங்கியின் ஆளுநர் டாக்டர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கை வங்கிப் பிரதிப் பொதுமுகாமையாளர் ஐ.டி.வீரசேன ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதன்போது மத்திய வங்கியின் அனுசரணையுடன் புதிய கடன் திட்டமும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

நிகழ்வில் இலங்கை வங்கியின் வாடிக்கையாளர், நலன்விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார்.

(ஒ-10)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்ணாகம்
இரகுநாதன்-சர்வேஸ்வரி
தம்பதியினரின் சிரேஷ்ட
புதல்வன்
வைத்திய கலாநிதி
**இ.மணிவர்ணன்**
அவர்கள் இன்று
யாழ்.பல்கலைக் கழகத்தில்
நடைபெறும் பட்டமளிப்பு
விழாவில் B.S.M.S பட்டம் பெறுவதையிட்டு
மனதாரப் பாராட்டுவதுடன் வாழ்வில்
மென்மேலும் பல பதவிகளைப்
பெறவேண்டுமென வழக்கம்பரை அம்மனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*சித்திமார், சித்தப்பாமார், மாமாமார்,
மாமிமார், தம்பி குடும்பம்.* (C/566201)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**சூசைரட்ணம்
பற்றிக் ஜெராட்**
(SLTES Class III, B.A
(Eng.), PGDE,
TEACHER'S
TECHNOLOGIST, M.E.D
(Eng.Medium)



யாழ்.பல்கலைக்கழகத்தின் 25ஆவது
பட்டமளிப்பு விழாவில் முதுகல்வியியல்
மாணி (Eng.Medium) பட்டம் பெறும்
இவரை பாராட்டுவதுடன் இறையேசுவின்
அருளால் மேலும் பல பட்டங்கள் பெற்று சீர்
சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

981/13, முதலாம் ஒழுங்கை,
வளன்புரம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

*மனம் மகிழ்ந்து வாழ்த்துவோர்:*
மனைவி: கிறிஸ்டீன் நிர்மலா,
பிள்ளைகள்: பெரின், சபோன்,
மாமன்: எம்.என்.நவரட்ணராஜா,
மாமி: பொலின் வயலட் நவரட்ணராஜா
(95947)



## Computer Express
Institute of Information Technology

மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்கும்,
ஊழியர்களுக்கும் தொழில்சார்
கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன...
Duration:- 1week

**Diploma in Film Technology & Video Editing**

Adobe Photoshop
Cool 3D Studio
VCD Cutter
Capturing
Pinnacle Studio
Adobe Premiere
Internet & e mail

**Diploma in Hardware Engineering & Networking**

System Configuration, Hardware Devices
Assembling, Repairing, Trouble Shooting
Installation of Hardware & Software, Project Works
Internet & e mail

**Diploma in Graphic Designing & Adverdisement Marketing**

Photoshop ,Macromedia Flash
Corel Draw, Cool 3d Studio
Internet & e mail

உறுதியானதும் ஸ்திரமுள்ளதுமான எதிர்காலத்தை
வளமாக்கிக்கொள்ள இன்றே எம்நிறுவனத்துடன் இணைந்து
மேற்காணும் கற்கை நெறிகளை கற்றுக்கொள்ளுங்கள்.

No 167,Kasthuriyar Road,
Jaffna.
T.P-021 2228250

வகுப்புக்கள் ஆரம்பம்
29.03.2010 - 9AM


### ஸ்கந்தாவில் இன்று பாடசாலை அணிகளின் கிரிக்கெட் போட்டிகள்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் சுழிபுரம் விக்ரோறியா, இளவாலை ஹென்றியரசர், சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம், இணுவில் மத்தியகல்லூரி,மயிலணி ம.வி, ஸ்கந்தவரோதயக் கல்லூரி, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, சண்டிலிப்பாய் இந்து, நவாலி ம.வி, மல்லாகம் குளமங்கால் றோ.க.த.கலவன் பாடசாலை, வயாவிளான் ம.ம.வி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகிய பாடசாலைகள் விளையாடவுள்ளன. (ஒ-86)

### 30, 31இல் பரீட்சை

யாழ்.மார்ச் 27

பொதுச்சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 30ஆம், 31 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு பயிற்சி முடித்து வெளியேறிய மாணவர்கள் அனைவரையும் தவறாது தோற்றுமாறு பிராந்திய மலேரியாத் தடை இயக்க வைத்திய அதிகாரி க.தா.சிவபாதம் கேட்டுள்ளார். (ஒ-10)

### மதிப்பீட்டுப் பரீட்சை வினாத்தாள்கள்

யாழ். மார்ச் 27

துரித கற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தரம் 3முதல் 9வரையான மாணவர்களுக்கான மதிப்பீட்டுப்பரீட்சை தொடர்பான வினாத்தாள்களை இன்று காலை 9மணி தொடக்கம் 1மணி வரை கோட்டக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்று தீவக வலயப் பணிப்பாளர் அறிவித்துள்ளார் (ஒ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது நிறுவனத்தின் உதவி
வெளிக்கள முகாமையாளர்
**யோகச்சந்திரன்
பிரகலாதன்**
நாளை (28.03.2010)
ஞாயிற்றுக்கிழமை நுண்கலை
மாணிப் பட்டம் பெறுவதையிட்டு
மகிழ்ச்சியடைவதோடு மேலும்
பல பட்டங்களைப் பெற்றுச்
சிறப்புடன் வாழ இறையாசி
வேண்டி வாழ்த்துகின்றோம்.

*B.A. (Hons)
Fine Arts*

பிராந்திய முகாமையாளர்,
வெளிக்கள முகாமையாளர்கள்,
உத்தியோகஸ்தர்கள்.

**AVIVA NDB Insurance Plc,
Jaffna, Regional Office,
No. 62/6, Stanley Road,
Jaffna.**
(சி/566099)



## பட்டமளிப்பு வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்





| | | |
|---|---|---|
| **வீரசிங்கம் ரங்கநாதன்** | **சிங்கன் நேசலிங்கம்** | **தேனுகா திவ்யநாதன்** |
| BBA (Hons), Dip.in.Edu,M.Ed. | BA (Hons), Dip.in.Eng,M.A. | BA (Hons), Dip.in.Edu |

யாழ்.பல்கலைக்கழக 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுகலைமாணி பட்டத்தினைப் பெறுகின்ற வ/விபுலானந்தாக் கல்லூரி உப அதிபர் வீரசிங்கம் ரங்கநாதன் (M.Ed) அவர்களையும், முதுகலை மாணிப் பட்டம் பெறுகின்ற லண்டனில் முதுநிலை முகாமைத்துவமாணிப் படிப்பினை மேற்கொள்கின்ற சிங்கன் நேசலிங்கம் (MA) அவர்களையும், பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா பட்டம் பெறுகின்ற யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி தேனுகா திவ்யநாதன் (Dip.in. Edu)அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று இன்னும் பல சேவைகள் செய்ய எல்லாம் வல்ல இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

கௌரி கோட்டம்,
அல்வாய்.

(95931)

*தா.வீரசிங்கம்
குடும்பத்தினர்*



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.மரியதாஸ்
ரிறோன்**
B.B.A (F.M.Spl)

**செல்வி சுமனா
சோதிவடிவேல்**
B.B.A Hons (F.M.Spl)



இன்று (27.03.2010) சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறும் 25ஆவது பட்டமளிப்பு விழாவில் BBA (F.M.Spl) பட்டம் பெறும் எமது நிறுவன அலுவலர்கள் இருவரையும் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வு வளம் பெற இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவன சமூகம்**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

27.03.2010 அன்று



Mr.M.Anton
Niroshan
B.Sc (Agri.)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால்
நடத்தப்படும் 25ஆவது பட்டமளிப்பு
விழாவில் பட்டம் பெறும் எமது சக
ஆசிரிய நண்பர்களான இவர்களை
வாழ்த்துவதுடன் மேலும் பல
பட்டங்களைப் பெற்று வாழ்வில்
மென்மேலும் உயர வாழ்த்தி நிற்கும்
அன்பு நண்பர்கள்.

N.B.கஜிதரன், ஜனகன், நந்தி, கணேஷ், ரசிகாந்,
கோபி, கபிலன், அனிஸ், மயூரேஷ், அபிஷேகன்,
பாலகஜன், கஜருபன், பாலசபேசன்.

28.03.2010 அன்று



Mr.S. Thilipan
B.Sc.
(95805)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










யாழ்.பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. யாழ்.பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரிய, துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள், பட்டம்பெறும் மாணவர்கள் கைலாசபதி கலையரங்குக்கு அழைத்துச் செல்லப்படுவதை முதல் வரிசையில் உள்ள முதல் மூன்று படங்களில் காணலாம்.

வேந்தர், துணைவேந்தர், பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், மாணவர் ஒருவருக்கு வேந்தர் பேராசிரியர் எம்.சிவசூரிய பட்டம் வழங்கிக் கௌரவிப்பதையும், இந்த வைபவத்தில் கலந்துகொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதை அடுத்த வரிசையில் உள்ள படங்களில் காணலாம்.

*(படங்கள்: லக்ஸ்மன்)*

### யாழ்.செயலகத்தின் ஏற்பாட்டில்

# குடாநாட்டில் புத்தாண்டை முன்னிட்டு கிராமிய விளையாட்டுப் போட்டிகள்

வலி.வடக்கு, மார்ச் 27

யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் புத்தாண்டையொட்டி பல்வேறு கிராமிய விளையாட்டுக்கள் மாவட்ட மட்டத்தில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் புத்தாண்டு தினமான 13 ஆம், 14ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் இப்போட்டிகளை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் யாழ்.செயலக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பல்வேறு குழுக்களும் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், விளையாட்டு அலுவலர்கள் மற்றும் கல்வி வலயங்களின் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களை உள்ளடக்கிய குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கிராமிய விளையாட்டுக்களான முட்டி உடைத்தல் (ஆண்), சாக்கோட்டம் (ஆண்), தலையணைச் சண்டை (ஆண்), பலூன் ஊதி உடைத்தல் (பெண்), போர்த் தேங்காய் உடைத்தல் (ஆண்), கிடுகு பின்னுதல் (பெண்), தேங்காய் துருவுதல் (பெண்), கயிறு இழுத்தல் (ஆண்), யானைக்கு கண் வைத்தல் (12 வயதுக்குக் கீழ்)-

தேசிக்காய் கரண்டியில் கொண்டு ஓடுதல் (பெண்), பனிஸ் சாப்பிடுதல் (ஆண்), போத்தல் நீர் நிரப்புதல் (12 வயதுக்கு கீழ்), சங்கீதக் கதிரை மற்றும் விநோத உடைப் போட்டி (15 வயதுக்குக் கீழ்-15 வயதுக்கு மேல்) போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஒ-86)

## தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 27

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாக ''பொதுத் தேர்தல் 2010 உம் மீதிப் பாதையும்'' என்ற தொனிப்பொருளில் கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருப்பதாக யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச மார்க்சியக்குழு அறிவித்துள்ளது.

யாழ். வேம்படி வீதி 189 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள அகவிழிக் காரியாலயத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சொ.சிவபாலன் தலைமையில் ஆரம்பமாகவிருக்கும் இந்த நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்துகொள்ளுமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க)


### குடாநாட்டில் கடமையாற்றும்

# கிளிநொச்சி வலய ஆசிரியர்கள் புதுவருட முற்பணம் தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27

கிளிநொச்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்றுப் பணிபுரியும் ஆசிரியர்கள் தமக்குரிய புதுவருட பண்டிகைக்கால முற்பணத்தை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தம்மைப்போல தற்காலிக இணைப்பிலுள்ள முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களுக்கு முற்பணம் வழங்கப்பட்டபோதும் தமக்கு இதுவரை வழங்கப்படவில்லையெனவும், தமது மாதாந்த வேதனத்தை உரிய திகதியில் வழங்குமாறு அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-க)




## அதிபர்கள் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

இன்று நடைபெறுவதாக இருந்த அதிபர்களுக்கான கூட்டம் பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்படுவதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

# வீடுகள் விடுதிகளாகி விட்டனவா? உடன் அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்!

### வலி.கிழக்கு பிரதேச சபை செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

வலி.கிழக்கு பிரதேச சபையின் எல்லைப் பிரதேசத்தில் உள்ள வீடுகளை விடுதிகளாகப் பாவிக்கும் வீட்டு உரிமையாளர்கள் உடனடியாக அந்தப் பகுதி பிரதேச சபையின் உப அலுவலகங்களு டன் தொடர்பு கொண்டு அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என பிரதேச சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக உல்லாசப் பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருப்பதுடன் அவர்கள் யாழ். நகரப் பகுதியில் தங்குவதற்கு விடுதிகள் போதியளவு இல்லை என்ற காரணத்தினால் நகரின் வெளிப்புறங்களை நாடி வருகின்றனர்.

இதனால் கிராமப்புற விடுகளும் விடுதிகளாக மாறி வருகின்றன. ஆகவே அவ்வாறு மாறிவரும் விடுதிகள் வலி.கிழக்கு பிரதேச சபையில் அனுமதி பெறவேண்டும்.

அனுமதி பெறாமல் விடுதிகள் நடத்துவோர் மீது பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதேச சபை செயலாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

## மண்கும்பான் ஆலயத்தில் தேர்முட்டி இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

தீவகம் மண்கும்பான், வெள்ளைப் புற்றடி வீரத்தி விநாயகர் ஆலயத்தின் இரதோற்சவத்தின் (தேர் முட்டியின்) மண்டப திறப்பு விழா இன்று சனிக்கிழமை முற்பகல் 10.47 மணி தொடக்கம் 11.10 மணி வரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாடு, மூலமூர்த்தி அபிஷேகம், சாந்தி அபிஷேகம், விசேட பூசை என்பனவும் நடைபெறும். (204)

# யாழ்ப்பாண மக்கள் மிகவும் நாணயமானவர்கள்; அதனால்தான் இங்கு ஏராளமான வங்கிகள்

### திறக்கப்படுகின்றன என்கிறார் 'பான் ஏசியா' தலைவர்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாண மக்கள் கண்ணியமானவர்கள்; நாணயமானவர்கள். அவர்களின் நாணயத்தை அறிந்து கொண்டதனால் தான் குடாநாட்டில் பல்வேறு வங்கிகளும் கிளைகளை இங்கு போட்டி போட்டுக் கொண்டு திறந்து வருகின்றன. எத்தனை வங்கிகள் திறக்கப்பட்டாலும் அத்தனை வங்கிகளும் மக்களுக்குச் சிறந்த சேவையைச் செய்யக் காத்திருக்கின்றன.

இவ்வாறு 'பான் ஏசியா' வங்கித் தலைவர் ஏ.ஜி.வீரசிங்க ஆஸ்பத்திரி வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 'பான் ஏசியா' வங்கிக் கிளை திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும்போது கூறினார்.

யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் வங்கிக் கிளையைத் திறந்து வைத்தார்.

கிளை முகாமையாளர் ச.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் 'பான் ஏசியா' வங்கித் தலைவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் இலங்கை வங்கி கிளையில் எனது வங்கி வாழ்க்கை ஆரம்பமானது. இருபது கால வங்கிச் சேவையின்போது யாழ்.மக்களுக்குச் சேவை செய்யக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். 'பான் ஏசியா' வங்கியின் 37 ஆவது கிளை யாழ்ப்பாணத்தில் இன்று திறந்து வைக்கப்படுகின்றது.

இதன் மூலம் மக்கள் பயன் அடைவார்கள். இதே நேரம் வங்கியையும் அவர்கள் பயனடையச் செய்வார்கள் என்று நம்புகின்றேன். வறுமைப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் எமது வங்கி தொடர்ந்து சேவையாற்றும்- என்றார்.

இந்த வைபவத்தில் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி குளோட் பீரிஸ், [illegible] மங்கள கமகே, வங்கியின் மாகாணத் தலைவர் எஸ்.ஆனந்த ராஜா உட்பட பல வங்கி அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஒ-115)

## முன்பள்ளிகளுக்கு வாளிகள், தண்ணீர் 'கான்'கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் ஆகியவற்றுக்கு கடந்த வியாழக்கிழமை நகரசபை அலுவலகத்தில் வைத்து 'பிளாஸ்ரிக்' வாளிகளும் தண்ணீர் 'கான்'களும் வழங்கப்பட்டன.

'யுனிசெப்' நிறுவனமே இப் பொருள்களை நகரசபையிடம் விநியோகத்திற்காக வழங்கியது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Foreign Student Admission Officer Available Here

A/L 3 பாடங்களில் சித்தி உள்ளதா???

இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் கல்லூரிகளின் பிரதிநிதிகள் பங்குபற்றுகிறார்கள்.

Spot Admission

Free Advice

SONA COLLEGE OF TECHNOLOGY
SALEM, INDIA.
Prof.M.A .MANIKANDAN B.Sc(Hons), MCA, M.Phil, Ph.D
The Director,
International Admissions & Relations.

**28th & 29th March @ St.Patrick College**

**SONA COLLEGE OF TECHNOLOGY**
*Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India*
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED

V4 Educational Consultancy(Pvt)Ltd
"Catalyst for your higher studies"
T.P- 0773867257
0775936343
0217200999
Head Office-
#7-1/1, W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06,
Web: http://www.v4edu.com
Branch-
10, Palaly Road, Jaffna.
Email: mail@v4edu.com



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி

## வாசுகி இராமசாமி

(இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

BBA (Hons) fm Special

யாழ்.பல்கலைக்கழகத்தின் 25 ஆவது
பட்டமளிப்பு விழாவில் சிறப்பு நிர்வாகமாணி
பட்டம் பெறும் இவரைப் பாராட்டுவதோடு மேலும்
பல பட்டங்கள் பெற்றுச் சிறப்படைய
இறையாசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

வராகி கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

அம்மா, தாத்தா, அம்மம்மா,
மாமாமார், மாமிமார், தம்பி, தங்கை.


# பின்முற்றாக்கும் தீர்வை
## மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

வழ.இல: மணநீக்கம்/1003

சிவனேசன் செல்வறஞ்சிதமலர்,
இல.20, கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
- வழக்காளி -

எதிர்: சுந்தரம் சிவனேசன்,
மே/பா. எஸ்.தங்கராசா,
லவ்லேன், உடுவில் கிழக்கு, சுன்னாகம்.
- எதிராளி -

இவ்வழக்கு 2010.03.08ஆம் திகதி யாழ்ப்பாணம் கௌரவ மாவட்ட நீதிபதி அ.ஆனந்தலிங்கம் பிரேமசங்கர் அவர்கள் முன்னிலையில் இறுதிநடவடிக்கைக்காக வந்த போது வழக்காளி சமூகத்தில் சார்பில் சட்டத்தரணி இ. சபேசன் தோன்றியிருக்க எதிராளி சமூகமின்றியிருக்க சார்பில் தோற்றமின்றியிருக்க ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்டு பிராது மற்றும் வ1 ஆவணம் இதர சத்தியக் கூற்றுக்கள் வழக்காளியின் சாட்சியம் என்பவற்றில் மன்று திருப்தியடைந்து எதிராளி வழக்காளியை வன்ம உறவெறுப்புச் செய்துள்ளார் என்பதில் திருப்தியடைந்து இருவருக்கும் இடையே 22.06.1973 ஆம் திகதி இடம்பெற்ற 8280 ஆம் இலக்கத்தில் பதியப்பட்ட பதிவுத் திருமணத்தை இரத்துச்செய்து வெற்றும் வெறிதும் என விளம்பி இத்தால் கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

மேலும் இத் திருமணம் இரத்துச் செய்யப்பட்டதன் பேரில் வழக்காளி தனது கன்னிப்பெயர் ஆகிய ஆறுமுகம் செல்வறஞ்சிதமலர் என்ற பெயரைப் பாவிக்கவும் திருமணமாகாத பெண்களுக்குரிய உரித்துக்களையும் சலுகைகளையும் அனுபவிக்க உரித்துடையவர் என்றும் விளம்பி இத்தால் கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

மேலும் மேற்குறித்த பின்முற்றாக்கும் தீர்வையை உள்ளூர் பத்திரிகையான 'உதயன்' பத்திரிகையிலும் தேசிய பத்திரிகையான 'வீரகேசரி'ப் பத்திரிகையிலும் இட்டு பிரசுரிக்கவும் குறித்த பிரசுர திகதியிலிருந்து ஆட்சேபனைக்கென 45 நாள்கள் வழங்கப்பட்டு குறித்த 45 நாள்களுக்குள் பின் முற்றாக்கும் தீர்வைக்கு ஆட்சேபனை தெரிவிக்காதவிடத்து அது முற்றான தீர்வையாக்கப்படுமென விளம்பி இத்தால் கட்டளையிட்டு தீர்வை செய்யப்படுகின்றது.

2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் 08 ஆம் திகதி

மாவட்ட நீதிபதி,
யாழ்ப்பாணம்.

(95929)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்






| திரு C.A. மோகன்றாஸ் | திருமதி M. வசந்தமாலா | திரு N.இராஜேஸ்வரன் | செல்வி P.வசந்தி |
|---|---|---|---|
| பிரதேச செயலர் | கணக்காளர் | அபிவிருத்தி இணைப்பாளர் | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் |
| MA.in Regional planning | MA.in.Public Administration | MA.in.Development Studies | MA.in. Development Studies |






| செல்வி.S. வரதீஸ்வரி | திருமதி R.சுகிர்தா | செல்வி T.மதுரா | திருமதி J.சிவகௌரி |
|---|---|---|---|
| சிறுவர் உரிமை மேம்பாட்டு உதவியாளர் | முகாமைத்துவ உதவியாளர் | முகாமைத்துவ உதவியாளர் | முகாமைத்துவ உதவியாளர் |
| MA.in.Population Studies | Bachelor of Science | Bachelor of Science | Bachelor of Arts |

26,27,28,03,2010 திகதிகளில் யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறும் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுமாணி, இளமாணி பட்டங்கள் பெறும் எமது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மேலும் பல பட்டங்கள் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், கோப்பாய்.


# மரண அறிவித்தல்

## கந்தையா கிருஷ்ணகுமார்



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கிருஷ்ணகுமார் 25.03.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா மற்றும் கற்பகம் தம்பதியினரின் மூத்த புதல்வனும், செல்வராணியின் அன்புக் கணவரும், ஜெகதாவின் பாசமிகு தகப்பனும், கோகிலகுமார், நந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

(95022)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

அரசாங்க உத்தியோகம் பார்க்கும் குடும்பத்தினரின் சிறுபிள்ளையைப் பராமரிப்பதற்கும், மற்றும் வீட்டுத் தேவைகளைக் கவனிப்பதற்கும் வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் உட்பட ஏனையவைகளை நேரில் பேசிக்கொள்ளலாம்.

திருமதி ர.ஜெயகௌரி "துார்இல்லம்" உடுவில் தெற்கு, சுன்னாகம்
தொடர்பு : 0777714556
0213214954, 0214591101

## பிரத்தியேக வகுப்புகள்

உயிரியல் பிரத்தியேக வகுப்புகள்
2012 BATCH
(English medium and Tamil medium)
P.Aravinthan. B.sc, MEd
தொடர்பு: 0779228947
(95740)

## புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு

45 நாளில் பூரண நிறை வைக்கக்கூடிய தரமான புறொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு திங்களும் விநியோகிக்கப்படும்.

தொடர்பு : கிருஷ்ணா பாம்,
பொன்னாலை வீதி, மானிப்பாய்.
தொ.பே.0772338084
(95834)

## மேற்பார்வையாளர் தேவை

எமது நிறுவனத்திற்கு G.C.E O\L சித்தியடைந்த மேற்பார்வையாளர் தேவை.

தொடர்பு: 0778736759
(95952)

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள நிசான் சனி AC மொடல் HB - 310, 13 சிறி 56xx கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0113137404

இன்று பார்வையிடலாம்.

## விற்பனைக்கு

ஜப்பான் 300 -3 phase (தேவையேற்படின் single phase motor மாற்றித் தரப்படும்) கொம்பிரசர் டயர் கடை, வாகன சுத்திகரிப்பு நிலையத்திற்கு உகந்ததும், வாகனம் கழுவுவதற்கு பயன்படும் பிரஷர் பம்பும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 077 - 4030970


# 18 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
10 ★ 05 ★ 1926



மறைவு
15 ★ 03 ★ 1992

அமரர் **காசிப்பிள்ளை சபாரத்தினம்**

திதி: 27.03.2010

நெற்றியிலே மூன்று குறி அதன்
நடுவினிலே சந்தனத்திலக மிட்டு
வாயினிலே புன் சிரிப்புடன்
பார்வையிலே அன்பு வெள்ளம்
கொண்ட பப்பா உங்கள் நினைவுகளை
மறக்க முடியவில்லை.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(95904)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி தபால் அலுவலகத்தில் மக்கள் தொடர்பாடல் நிலையம்

## அஞ்சல் மா அதிபர் திஸாநாயக்க திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சாவகச்சேரி தபால் அலுவலகத்தில் அமைக்கப்பட்ட மக்கள் தொடர்பாடல் நிலையம் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை அஞ்சல் மா அதிபர் எம்.கே.பி. திஸா நாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

பிரதி அஞ்சர் மா அதிபர் (வடக்கு) வி.குமர குரு தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தொடர்பாடல் நிலையத்தில் முதல்நாள் விற்பனையை அஞ்சல் மா அதிபர் ஆரம்பித்து வைத்தார்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொடர் பாடல் நிலையத்தில் புகைப்படப்பிரதி, லெமனேட்டிங், புத்தகம் கட்டுதல், உள் ளூர் தொலைத் தொடர்புச்சேவை, பக்ஸ் வசதி, பாடசாலை உபகரணங்கள் போன்ற வற்றைப் பெறலாம் என்று தெரிவிக்கப் பட்டது.

இந்நிகழ்வில் தென்மராட்சி உதவி பிர தேச செயலர் செல்வி ரஞ்சனா நவரத்தி னம், இளைப்பாறிய பிரதிஅஞ்சல் மா அதிபர் (கிழக்கு) கே.பாலசுப்பிரமணியம், டாக்டர் அம்பிகைபாகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அஞ்சல் மா அதிபர் திஸாநாயக்க 'இலங்கை அஞ் சல் திணைக்கள சேவைகளில்' வடமா காண அஞ்சல் அலுவலர்கள் தொடர்ந்தும் முதல் நிலையில் (நவம்பர் 1) இருப்ப தற்கு அங்கு கடமையாற்றும் அனைவரி னதும் தன்னலமற்ற சேவையே காரணம் என்று புகழாரம் சூட்டினார்.

தற்போது கொழும்பில் உள்ள நான்கு நகரங்களில் மேற்கொள்ளப்படும் நான்கு மணிநேர கூரியர் சேவை (Four Hour Service) விரைவில் கொழும்பு- யாழ்ப்பாணத்திற் கும் விரிவுபடுத்தப்படவுள்ளன என்றும் குறிப்பிட்டார். (ஒ-207)

## நாடக அர[illegible] செயலமர்வு

யாழ்ப்பாணம், மார்ச்27

தீவக வலயப் பாடசாலைகளில் ஆரம்ப, இடைநிலை, சிரேஷ்ட வகுப்புகளில் ஆங்கில பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக் கான ஆங்கில நாடக ஆக்கத்திறன் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நாளை ஞாயிற்றுக் கிழமை யும் நாளை மறுதினம் திங்கட் கிழமையும் வண்ணை நாவலர் வித்தியாலயத்தில் காலை 8 மணி தொடக்கம் நடைபெறும் என தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி. இராமகிருஸ்ணன் தெரிவித்துள்ளார். இப் பயிற்சி நெறியில் அனைத்து ஆசிரியர் களும் தவறாது பங்குபற்ற வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (50-267)

## இலங்கை வங்கியின் சனிக்கிழமை வங்கிச்சேவை

யாழ்ப்பாணம், மார்ச்27

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் 2 ஆம் மேற்றரக்கிளை வாடிக்கையாளர் களின் நலன் கருதி பிரதி சனிக்கிழமை தோறும் காலை 8.30 மணி தொடக்கம் பிற் பகல் ஒரு மணிவரை வங்கிச்சேவை இடம் பெறவுள்ளது.

மேற்படி வங்கிச்சேவை இன்று சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது. இலங்கை வங்கியின் வட பிராந் திய பதில் உதவிப் பொதுமுகாமையாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சேவையை ஆரம்பித்து வைப்பார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கியின் மாவட்ட முகாமை யாளர் கே.பி. ஆனந்த நடேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (50-201)




## தொட்டிலடியில் மதுபானசாலை திறக்கும் முயற்சிக்கு எதிராக மக்கள் 'போர்க்கொடி'

சங்கானை, மார்ச் 27

சங்கானையிலுள்ள தொட்டிலடி முச்சந் திக்கு அருகில் மதுபானசாலை அமைப் பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து போர்க்கொடி தூக்கியுள்ளனர் பிரதேசவாசிகள்.

இந்த மதுபானசாலை குறிப்பிட்ட இடத் தில் திறக்கப்படுவதை எதிர்த்து பிரதேச செயலரிடமும், அரசாங்க அதிபரிடமும் நேரிலும் எழுத்து மூலமும் பொது மக்களால் முறையிடப்பட்டுள்ளது.

தினமும் ஏராளமான பொதுமக்கள் அரச அலுவலகங்கள், கல்விச்சாலைகள், மருத்துவ மனைகள், ஆலயங்கள் ஆகிய வற்றிற்குச் செல்வதற்கு தொட்டிலடிச் சந்திக் கூடாகவே தமது பயணத்தை மேற்கொள் கின்றனர்.

இந்த நிலையில் மதுபானசாலை அமைக் கப்படுமாயின் அவர்களுக்குப் பெரும் பாதிப் புக்களும் இடையூறுகளும் ஏற்பட வாய்ப்பிருப்பதாக மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஒ-க-29)

## குறிகாட்டுவான்-நயினைப் படகுகளுக்கு அறவிடும் வரியைக் குறைக்கக் கோரிக்கை

புங்குடுதீவு, மார்ச் 27

குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக் கும் இடையே சேவையிலீடுபடும் படகுக ளுக்கு அறவிடப்படும் கட்டண வரியைக் குறைக்குமாறு படகுகளின் உரிமையாளர் கள், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் ஆகியோருக்கு கோரிக்கை விடுத் துள்ளனர்.

தென்னிலங்கையில் இருந்து அதிக எண்ணிக்கையானோர் வரத்தொடங்கிய பின்னரே இந்த வரி பிரதேச சபையினரால் அறவிடப்படுவதாகத் தெரிவிக்கும் இவர் கள் படகுகளுக்கு இருவழிக்கட்டண வரி யாக நான்கு ரூபா அறவிடப்படு வதால் செலவுகளும், வரித்-தொகையும் போக சொற்ப வருமானமே தமக்குக் கிடைப் பதாகவும் கவலை தெரிவித்துள்ளனர். (க-188)

### மானிப்பாய் அரசினர் வைத்தியசாலையில்

## நாய்க்கடிக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரிப்பு

நவாலி, மார்ச்27

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்திய சாலையில் நாய்க்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெறுவதற்கு வருவோரின் எண் ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வரு கின்றது.

இப்பிரதேசங்களில் நாய்களின் பெருக் கம் அதிகரித்து கட்டாக்காலியாக வீதிகளி லும் வீடுகளிலும் அலைந்து திரிகின்றன.

இந் நாய்கள் வீதியால் செல்லும் மாண வர்கள் உட்பட ஏனையோரையும் கடித்து பதம் பார்க்கின்றன. இ[illegible] கடிக்கப் பட்டவர்கள் இந்த வை[illegible] சென்று சிகிச்சைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

கடந்த ஜனவரி மாதம் 16 பேரும் பெப் ரவரி மாதம் 27 பேரும், மார்ச் மாதம் 24 பேரும் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்திய சாலைப் பொறுப்பதிகா[illegible] பத்மராணி தெரிவித்துள்ளார். ([illegible])




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்


பொது வாழ்வில் உள்ளோர் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். தொழில் ரீதியான இடையூறுகள் விலகி நினைத்த காரியம் நிம்மதியாக முடியும். வீடு, மனை வாங்க மேற்கொண்ட முயற்சிகளில் எதிர்பாராத சிக்கல்களைச் சந்திக்கலாம். உறவினர்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நன்மை தரும்.

### இடபம்

உத்தியோகத்தர்கள் ஊக்கம், உற்சாகத்துடன் செயற்படுவர். பணப்பற்றாக்குறை அகன்று நிதி நிலைமை மேம்படும். உங்களின் யோசனைக்கு சக ஊழியர்கள் மத்தியில் மதிப்பு, மரியாதை இருக்கும். நண்பர் ஒருவருக்கு ஓடிச் சென்று உதவி செய்வீர்கள். தவறு எனத் தெரிந்தாலும், துணிச்சலாக சில வேலைகளைச் செய்வீர்கள்

### மிதுனம்

எதிலும் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். தேடிவந்த ஒருவருக்கு பிறரிடம் கைமாத்து வாங்கியாவது உதவி செய்வீர்கள். உறவினர்கள் சிலரின் பாச மழையில் நனைவீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள நேரிடலாம்.

### கடகம்

நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும் நாள். வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். காலை முதல் மாலை வரை காலில் சக்கரம் கட்டிக் கொண்டு செயற்படுவீர்கள். நெருக்கமான உறவினர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பாராத திடீர் பணவரவுகளைப் பெறலாம். செல்வாக்கு கூடும்

### சிங்கம்

நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். பணவரவுகளை எதிர்பார்த்து ஏமாந்து போகலாம். வீட்டுத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். உறவினர்களுக்காக சில செலவுகளைச் செய்யலாம். திடீர் பயணங்கள் செல்ல நேரிடலாம். உங்களின் அருமை, பெருமைகளைப் பற்றி மற்றவர்களிடம் பேசுவீர்கள்.

### கன்னி

நண்பர்கள் வழியில் மனதிற்கு இனிய உதவிகள் கிடைக்கும். தொழில் முன்னேற்றம் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் வரலாம். வெளிநாட்டுப் பயண முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பழைய பொருள்கள் சிலவற்றை மாற்றி புதிய பொருள்கள் வாங்க நேரிடலாம்.

### துலாம்

உறவினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். நேற்றே சில வேலைகளை முடிக்காததால் இன்று அவதிகளுக்கு ஆட்படலாம். தொழில் ரீதியாக சிலரின் சந்திப்பு நிகழும். கடன் பிரச்சினைகளை மாற்றி அமைப்பீர்கள். கணவன் - மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சனி வழிபாட்டின் மூலம் சங்கடங்கள் தீரும்.

### விருச்சிகம்

சந்தோஷமான, உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். இரண்டு நாள்களாக வராமல் இருந்த பணவரவுகள் இன்று வந்து சேரலாம். தந்தை வழியில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கும். பெரிய மனிதர்கள் உதவியால் நல்ல காரியம் ஒன்றைச் செய்வீர்கள். உங்களின் வேலை ஒன்றை மற்றொருவரிடம் ஒப்படைப்பீர்கள்.

### தனுசு

புதிய முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். விளையாட்டாக செய்த காரியங்கள் விபரீதமாக முடிவுக்கு வரலாம். அலுவலகப் பணிகளில் சிரமங்களைச் சந்திக்கலாம். வியாபாரிகள் கடும் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். குடும்பப் பொறுப்புகள், சுமைகளால் அவதிகள் உண்டு. மனக் குழப்பங்கள் கூடும்.

### மகரம்

உறவினர்களை நம்பி ஒப்படைத்த காரியங்கள் நல்லவிதமாக முடிவுக்கு வரலாம். வரவுகளை மிஞ்சிய செலவுகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். கொடுக்கல் வாங்கல்களில் சீரான நிலைமை காணப்படும். வெளியூர் பயணங்களின் போது சிலரை எதிர்பாராதவிதமாக சந்திக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.

### கும்பம்

வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருந்த சிலரை சந்திப்பீர்கள். நண்பர்களுடன் ஏற்பட்ட மனக்கசப்பு அகன்று பாசம் அதிகரிக்கும். கடந்த கால இழப்பு ஒன்றை ஈடுகட்ட முற்படுவீர்கள். கடன் வசூலிப்பு முயற்சிகளில் பலன் உண்டு. சுபகாரிய விடயங்களில் நினைத்தது நடக்கும் வாய்ப்பு உருவாகலாம். அனுகூலமான நாள்.

### மீனம்

குடும்பத்தினரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கையிருப்பு குறைந்து பணப்பற்றாக்குறையை சந்திக்கலாம். குழந்தைகள் வழியில் மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். உத்தியோகத்தர்கள் தொழிலில் அதிக கவனமுடன் செயற்பட வேண்டும். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும்.

# நீயும் துரோகியா?

"இயேசு அவர்களைப் பார்த்து பன்னிருவராகிய உங்களை நான் தேர்ந்து கொண்டேன் அல்லவா? ஆயினும் உங்களில் ஒருவன் அலகையாய் இருக்கின்றான். ஏனெனில் பன்னிருவருள் ஒருவனாகிய அவன் அவரைக் காட்டிக்கொடுக்கவிருந்தான்" (யோவா 6 : 70-71). ஏறத்தாழ மூன்று வருடங்கள் இயேசுவுடன் தங்கி அவர் செய்த அற்புதங்களைக் கண்டு, அவரின் போதனைகளைக் கேட்டு, அவரது நட்பை அனுபவித்த, ஒருவன் அற்ப காசுக்காகத் துரோகம் செய்வானா? அப்படிச் செய்ய மனம் வருமா? இவன் மனிதனா? அலகையா? வேதாகமத்தைப் படித்துப் பார்க்கின்றபோது ஆதிமுதல் இப்படியான துரோகங்கள் செய்யப்பட்டு வந்துள்ளதை அறியலாம்.

ஆதாமும், ஏவாளும் தேவனுக்கு விரோதமாய் துரோகம் செய்தார்கள். மிரியாமும், ஆரோனும் சகோதரரான மோசேக்கு விரோதமாக எழுந்தார்கள். யாக்கோப்பின் மகன்மார் தம் தந்தைக்கும், இளைய சகோதரரான யோசேப்புக்கும் துரோகம் செய்தார்கள். அப்சலோம் தன் தந்தையாகிய தாவீதுக்கு விரோதமாகத் துரோகம் செய்தான். பிரதானி களும், தேசாதிபதிகளும் தானியேலுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தார்கள். இப் படியே துரோகங்களையும், வஞ்சகமான செயல்களை யும் வேதாகமத்தில் வாசித்தறிவோம்.


தவக்காலச் சிந்தனை


இன்றுகூட எத்தனையோபேர் இப்படி அலகையைப் போல நடந்து கொள்ளு கின்றனர். இன்று உங்களை ஆராய்ந்து பாருங்கள். உங்கள்மேல் நம்பிக்கை வைத்த உற்றார், உறவினர், நண்பர், சக ஊழியர்களுக்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்து துரோகம் செய்து கொண்டிருக்கின்றீர்களா? இன்றே நிறுத்துங்கள். பாதிக்கப்பட்டவரின் கண் ணீரைக் கடவுள் காணுகின்றார். (தி.பா.56 : 8). ஆதாமும் ஏவாளும் ஏதேனை விட்டுத் துரத்தப்பட்டனர். மிரியாம் குஸ்ரரோகியாக மாறினாள். யாக்கோப்பின் மகன்மார் எத்தனையோ விதமான துன்பங்களை அனுபவித்தனர். அப்சலோம் வாலிபப் பராயத்தில் இறந்து போனான். தானியேலுக்கு எதிராக எழுந்தவர்கள் தங்கள் குடும்பத்தினரோடு சிங்கங்களுக்கு உணவானார்கள். "ஒருவர் தாம் விதைப்பதையே அறுவடைசெய்வர்" (கலாத்தியர் 6 : 7)

அருமையானவர்ளே! இவ்விதமான துரோகங்களை கடவுளுக்கும், தாய் தந்தையருக்கும், உடன் பிறப்புக்களுக்கும், அயலவர்களுக்கும் செய்திருப்பீர்களானால் கடவுளிடமும் உங்கள் துரோகச் செயலால் பாதிக்கப்பட்டவர்களிடமும் மன்னிப்புக் கேளுங்கள். இனிமேல் இப்படி நடக்கமாட்டேன் என உறுதியான தீர்மானத்தை எடுங்கள்.

க.அருள்நேசன், குருநகர்.


## G.A.Q. 1st IN Com, B.B.A

இலங்கை தென்.கிழக்குப் பல்கலைக்கழகம் வெளிவாரி

A/L இல் சித்தி அடையாதவர்களும் பட்டதாரி ஆவதற்கான அரிய வாய்ப்பு

* மேற்படி பல்கலைக்கழகத்தினால் பதிவுகள் கோரப்பட்டுள்ளன.

பதிவினை மேற்கொள்வதற்கான தகைமைகள் பின்வருமாறு

1. A/L இல் மூன்று பாடம் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

2. A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்து அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றில் ஒரு வருட கற்கை நெறியாக டிப்ளோமா or சான்றிதழ் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

3. அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றில் இரண்டு வருட கற்கை நெறியாக டிப்ளோமா (Diploma) or சான்றிதழ் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும். இதற்கு A/L பெறுபேறு அவசியமில்லை.

குறிப்பு: பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

* விரிவுரைகள் ஆரம்பம்: 03.04.2010 காலை (8 மணி)
* பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
* பதிவு முடிவு திகதி: 31.03.2010

விபரங்களுக்கு:

S.அருள்நங்கை (நிர்வாகி). புதிய உயர்கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(95972)


# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் யோகேஸ்வரன்



கரவெட்டி, தாளங்குழி, மத்தொனியைப் பிறப்பிடமாகவும் ஓமானில் மஸ்கற் (MUSCAT) விமானத்தளத்தின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றியவருமான வல்லிபுரம் யோகேஸ்வரன் 24.03.2010 புதன்கிழமை நெல்லியடியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் வல்லிபுரம் - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஐயாத்துரை - இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சோபனாதேவியின் அன்புக் கணவரும் நிசாந்தன், நிதர்சனா, நிதர்ஷிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகராணி (கனடா), பாலகுமார் (கனடா), யோகநாதன் (கனடா), வானதி (லண்டன்), வாகீசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சித்திரசேனன், சசிரேகா, பாமதி, சாந்தகுமார், சசிகலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆறுமுகம், கந்தப்பு அவர்களின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு லட்சுமி தியேட்டர் ஒழுங்கை, நெல்லியடியிலுள்ள அவரின் சிறியதந்தையார் சி.சத்தியமூர்த்தி அவர்களின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரவெட்டி சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லட்சுமி தியேட்டர் ஒழுங்கை, நெல்லியடி. T.P.No. 021 226 3610 (95907)

தகவல்: சி.சத்தியமூர்த்தி (சிறிய தந்தை).

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி பழைய மாணவனும் மன்./புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி ஆசிரியருமான

செல்வன் பாலகிருஷ்ணன் பார்த்தீபன்

B.com (Acc.Spl) P.G.Dip.in Ed.(1st Class)

நாளை (28.03.2010) ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் Diploma. in Education (1st Class) பட்டம் பெறுவதையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேன்மெலும் பல உயர்வுகளைப் பெற எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்திக்கிறோம்.

மாகாந்தனை, தெல்லிப்பளை.

மகேஸ்வரன் குடும்பம் (சித்தப்பா)
பிரகாஸ் குடும்பம்.


## கார் விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள டீசல் Morris Oxford கார் உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: 0773211379 22/2, கோண்டாவில் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.

(95975)

## வீடு விற்பனைக்குண்டு

நல்லூர்க் கோயில் சுற்றாடலில் யாழ். மாநகரசபை எல்லைக்குள், முத்திரைச்சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட அழகான வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777432645

* எனது பக்கம் தரகர் தேவையில்லை.

(95979)

## Piano/Violin NOTES

Organ, Guitar, வயலின், புல்லாங்குழல், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான 300 சினிமாப்பாடல்களின் Notes விற்பனைக்குண்டு. Organ Guitar, புல்லாங்குழல் பயிற்சி வகுப்புகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

[illegible] RAM

75, TEMPLE ROAD, NALLUR. T.P. No.0777031293


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகக்கோட்பாட்டுடனான சுயநிர்ணயத் தீர்வே தமிழ்மக்கள் அனைவரதும் ஏகோபித்த எதிர்பார்ப்பு

## அதிலிருந்து கூட்டமைப்பு விலகவில்லை- என்கிறார் வேட்பாளர் ஈ. சரவணபவன்

தமிழர்களின் தாய்கக் கோட்பாட்டை ஏற்று, தமிழ்த் தேசியத்தை அங்கீகரித்து, சுயநிர்ணய அடிப்படையிலான ஒரு தீர்வைச் சிங்களதேசம் முன்வைக்கவேண்டும். இதுவே தமிழர்கள் அனைவரினதும் அவா வாகும். இதற்காக உள்நாடுகளிலும், வெளி நாடுகளிலும் 'உதயனி'ன் குரலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குரலும் ஒருங்கே ஒலித்துக்கொண்டே இருக்கும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஈ.சரவணபவன்.

நேற்றுமாலை பருத்தித்துறையில் ஒழுங்கமைக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட் டத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்மக்களின் ஊடகப் பணியோடு அரசியற் பணியும் இணையும்போதுதான் அதன் பலம் இரட்டிப்பாகும். இதுவரை கால மும் பத்திரிகைமூலமாக உரிமைக் கோஷம் முழங்கிய நான், தற்போது இன்னும் ஒருபடி மேலே சென்று நாடாளுமன்றத்திலும் குரல் எழுப்பவேண்டும் என்று மூத்த அரசியல், சமூகப் பிரமுகர்களும் புலம் பெயர்ந்த உறவு களும் பொதுமக்களும் கேட்டுக்கொண்ட மையால் அதனை மறுக்க முடியாமல் தேர்தல் களத்தில் குதிக்க வேண்டிய வரலாற்றுக் கட மையை ஏற்றுள்ளேன்.

'உதயன்' பத்திரிகை தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையோடு அவர்கள் சார்புக் கருத்துக்களை மாத்திரமே வெளியிடுகின்றது என்று பேரினவாதிகளும் தேச விரோதிகளும் காலம் காலமாகச் சுமத்தி வரும் குற்றச்சாட்டை மறுத்து, 'உதயன்' தமிழ் மக்களின் தேசியக் குரல் என்ற உண்மையை நிரூபிப்பதற்கு நீங்கள் அனைவரும் என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்று உங்களிடம் உரிமையுடன் கேட்கின்றேன்.



கடந்த சில நாள்களுக்கு முன்னர் இலங்கை அரசும் அதன் புலனாய்வுப் பிரிவும் இணைந்து அரசுக்குச் சவாலாகச் செயற்படுபவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டிருக்கின்றன. அந்தப் பெயர்ப்பட்டியலில் தமிழர்களின் உரிமைப் போராட்டங்களை ஊடகங்கள் மூலம் முன்னெடுத்துச் செல்கின்றமைக்காக எனது பெயரும் எமது ஆசிரியரின் பெயரும் இடம்பெற்றிருப்பதை ஊடகங்கள் மூலம் நீங்கள் அறிந்திருப்பீர்கள். கொலை அச்சுறுத்தல்களும், தாக்குதல்களும் எங்களுக்குப் புதியவை அல்ல. எமது மக்களைப் போலவே உத யனும் தாக்குதல்களையும் இழப்புக்களையும் எதிர்கொண்டுதான் வளர்ந்து நிற்கின்றான்.

உலகிலேயே அச்சுறுத்தல் மிகுந்த - நெருக்கடி நிறைந்த - பத்திரிகையாக உங்கள் உதயனும் பட்டியல் இடப்பட் டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். பக்கச்சார்பாக, ஆளும் தரப்பின் எடுபிடிகளாக மாறியிருந்த ஊடகங்களின் மத்தியில் இவ்வளவு ஆபத்துகளுக்குள்ளிருந்தும் 'துணிச்சலான பத்திரிகை'க்கான விருது தொடர்ச்சியாக உதயனுக்குக் கிடைத்து வருகின்றமை உலகறிந்த உண்மை. வெறுமனே பணமும் புகழும்தான் தேவை என நினைத்திருந்தால், நான் எப்போதே உதயனின் பாதையை மாற்றி, கோடிக் கணக்கில் பணம் சம்பாதித்திருப்பேன். ஆனால், தமிழ்மக்களின் இலட்சிய வேட் கைகளுக்கு உரம் சேர்த்து, உரிமைக் கோஷம் முழங்கும் வரலாற்றுப் பணியில் இருந்து தடம்மாறி விடக்கூடாது என்ற உன்னத நோக்கத்திலேயே உதயனை நடத்தினேன்; இப்போதும் நடத்திக் கொண்டே இருக்கிறேன்.

கூட்ட மைப்புக்கு உங்களது வாக்குகளை அளித்து, அதனை அமோக வெற்றியடையச் செய் வதன்மூலம் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை நாடாளுமன்றிலும் உலக அரங்கிலும் பறைசாற்ற முடியும்.

தன்மானமுள்ள ஈழத்தமிழர்கள் ஒருபோதும் பதவிகளுக்காகவோ, அற்ப சொற்ப சலுகைகளுக்காகவோ விலைபோய் விடமாட்டார்கள் என்பதை சிங்கள தேசத்துக்கும் அவர்களது அடிவருடிகளுக்கும் மீண்டும் ஒரு தடவை முரசறைவதற்காக இந்தமுறையும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கே வாக்களிக்க வேண்டும் என்று நான் அன்பாக உங்களைக் கேட் டுக்கொள்கின்றேன். தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுக்கு வாக்களித்து, எங்களை அமோக வெற்றியுடன் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி, தென்னிலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் எமது அபிலாஷைகளை ஒரே குரலில் வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (5ா)

# உலக ஏகாதிபத்தியத்தின் ஒரு பகுதியாக இலங்கை முதலாளித்துவம் செயற்படுகிறது

## சோஷலிச சமத்துவக்கட்சி வேட்பாளர் விளக்குகிறார்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் ஒரு பகுதியாக இலங்கை முதலாளித்துவம் செயற்பட்டே தமிழினத்தை அழித்து வருகிறது என சோஷலிச சமத்துவக்கட் சியின் மத்தியகுழு உறுப்பினரும் யாழ். மாவட்ட வேட்பாளருமான நந்த விக்கிரம சிங்க தெரிவித்தார்.நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ப. நோ. கூ.சங்க கேட்போர் கூடத் தில் சோஷலிச சமத்துவக்கட்சி ஏற்பாடு செய்திருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

சோஷலிச சமத்துவக்கட்சி யாழ்ப்பாணம், நுவரெலியா, காலி, கொழும்பு ஆகிய நான்கு மாவட்டங்களில் மூவின மக்களின் தொழிலாள வர்க்கத்தினையும் அணி திரட்டியுள்ளது. உலக நாடுகள் ரீதியாகவும் சோஷலிச புரட்சியாளர்கள் இணைந்து முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராடி வருகின்றனர்.

எமது நாட்டில் இனரீதியான பிளவு ஏற்பட்டிருப்பதாக கூறுகின்றனர். அது அப்படியில்லை. தொழிலாளி, முதலாளி என இரு வர்க்கங்களாகவே துருவப்பட்டுள்ளனர். தொழிலாளி வர்க்கமாகவுள்ள மக்கள் எமது நாட்டில் பல்வேறு துன்ப,துயரங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.கடந்த கால வரலாறுகள் மூலம் தமிழ்மக்கள் நல்ல பாடம் கற்றிருப்பார்கள் என நினைக்கிறேன். அதாவது கொழும்பு அரசினால் இலங்கை தமிழ் மக்களுக்கு எவ்வித அரசியல் தீர்வும் கிடைக்காது என்பதாகும். இதன் வெளிப்பாடாக கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் மக்கள் தமது உணர்வை வெளிப்படுத்தியிருந்தனர்- என்றார். இந் நிகழ்வில் சோசலிச சமத்துவக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் ரி.சந்திர சேகர், சமூக சமத்துவத்துக்கான அனைத்துலக மாணவர் அமைப்பு பிரதிநிதி செல்வி ஆர்.பாலகௌரி ஆகியோர் உரை நிகழ்த்தினர். (1-14)




# ஆட்சி அமைந்ததும் 31நாள்களுக்குள் இடம்பெயர்ந்தோர் மீள்குடியேற்றப்படுவர்

## திருமதி விஜயகலா மகேஸ்வரன் உறுதி

தமிழ்மக்கள் துன்பதுயரங்களை அனுபவித்தபோது நாட்டைவிட்டுத் தப்பி ஓடியவர்களும் வாய்மூடி மௌனியாக இருந்தவர்களும் இன்று மீண்டும் வாக்குக்கேட்டு வந்துள்ளனர். இவர்களை இனம்கண்டு மக்கள் நல்ல பாடத்தினை கற்பிக்க வேண்டும். தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தமையினாலேயே எனது கணவரின் உயிர் பறிக்கப்பட்டது. எனவே படுகொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆட்சி மாற்றத்துக்கான ஆணையினை குடாநாட்டு மக்கள் வழங்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரனின் பாரியாருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

மானிப்பாயில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் துன்பங்களை, துயரங்களை அனுபவித்தபோது எனது கணவர் அவர்களுக்காக குரல் கொடுத்தார். இதனால்தான் அவர் படுகொலை செய்யப்பட்டார். யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் இன்றும் அவல வாழ்க்கை வாழ்கின்றனர்.

மீள்குடியேற்றம் என்ற பெயரில் கிளிநொச்சியில் குடியமர்த்தப்பட்டோருக்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.



பெரும் இழப்புக்களைச் சந் தித்த அவர்கள் இன்றும் உரிய வசதிகள் இன்றி வாழ்வது வேதனைய ளிக்கின்றது.

குடாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் மகேஸ்வரன் அணியாகப் போட்டியிடும் எம்மை மக்கள் வெற்றி பெறச் செய்வதன் மூலம் ஆட்சி மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தலாம்.

இந்த ஆட்சி மாற்றம் தமிழ் மக்களின் வாழ்வில் சுபீட்சத்தை ஏற்படுத்தும். இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்கள் எமது ஆட்சி ஏற்பட்டு 31 நாள்களுக்குள் மீளக் குடியமர்த்தப்படுவர்.

அதேபோல் 1990 ஆம் ஆண்டு முதல் வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களும் மீளக் குடியமர்த்தப்படுவர்.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு 10லட்சம் ரூபா நட்ட ஈடுவழங்கவும் நாம் நடவடிக்கை எடுப்போம். இதற்கான உறுதிமொழியினை எமது கட்சித் தலைவரும் அடுத்த பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார் - என்றார். (1)

# தமிழ் தலைமைகளின் ஒற்றுமையை சிதறடிக்கவே உதிரிக் கட்சிகள் களத்தில்

## சிவஞானம் இப்படிக் கூறுகின்றார்



யாழ்ப்பாணம், மார்ச் 27

தமிழ் தலைமைகள் ஒன்றுபட வேண்டிய சூழலில் அவற்றின் ஒற்றுமையை சிதறடிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள உதிரிக்கட்சிக ளைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார் முன் னாள் மாநகரசபை ஆணையாளரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரு மான சீ.வீ. கே. சிவஞானம்.

கடந்த திங்கட்கிழமை நீர்வேலியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். என்.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களானமாவை சேனாதிராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் வேட்பாளர்கள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இக்கூட்டத்தில் சிவஞானம் தொடர்ந்து பேசுகையில், எமது போராட்டம் சாத்வீக, ஆயுதப் போராட்டங்களாக நடைபெற்று வந்தாலும் அவை தோல்வி அடையவில்லை. எமது இச் சாத்வீகப் போராட்டம் எமது பிரச்சினைகளை இலங்கைக்கு வெளியே இந்தியா வரை கொண்டு சென்றது. அதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டமே எமது பிரச்சினையை சர்வதேசம் வரை கொண்டு சென்றுள்ளது.

ஆரம்ப காலங்களில் முன்னெடுக்கப்பட்டுவந்த சாத்வீக போராட்டங்கள் வெற்றி பெறாததைத் தொடர்ந்தே எமது ஆயுதப் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு கடந்த முப்பது வருடங்களாக நடைபெற்று வந்துள்ளன. ஆனால் தற்போது மீண்டும் இச்சமர் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து சாத்வீக, ஜனநாயக வழியிலான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.இப்பணியை நிறை வேற்றுவதற்கு ஏதுவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பேரம்பேசும் சக்தி வாய்ந்ததாக மாற்றுவதற்கு அனைவரும் எமக்குத் தங்கள் ஆதரவை நல்க வேண்டும்- என்றார். (1-16)

# தமிழ்த்தேசியத்தை சிதைப்பதற்காக களத்தில் ஏராளமான சுயேச்சைகள்

## வேட்பாளர் ஐங்கரநேசன் குற்றச்சாட்டு



அரசின்நிகழ்ச்சி நிரலைச் சிறப்பாக நிறைவேற்றக் கூடிய சிலரைப் பதவிக்கு கொண்டுவரவென அரசு முயன்று வருகின்றது. அதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குப் பலத்தை சிதைக்கவென 312 வேட்பாளர்கள் யாழ். மாவட்டத்தில் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.ஆறுகால் மடத்தில் இம்மாதம் 19 ஆம் திகதி இடம் பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேலும் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

இந்த வருடப் பொதுத்தேர்தலில் 324 பேர் வேட்பாளர்களாகக் களத்தில் இறங்கியுள்ளனர். இவர்களில் 12 பேர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக உள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கு எதிராகவே ஏனைய 312 வேட்பாளர்களும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்தை சிதைக்கவென அரசினால் திட்டமிட்ட முறையில் வெற்றிலைச் சின்னத்திலும், சுயேச்சையாகவும் அவர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தான் சொல்வதை ஏற்று தலையாட்டக் கூடிய சிலரை பதவிக்குக் கொண்டுவர அரசு திட்டமிட்டு அதனை நிறைவேற்ற முனைந்துள்ளது.

அதற்காகவே அதிகளவான பணத்தை வாரியிறைத்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வாக்குப் பலத்தை உடைக்கவென பலர் களமிறக்கப்பட்டுள்ளனர். எமது மக்களின் பணத்தை எமது மக்களிடம் வழங்கிக்கொண்டு தாமே மக்களுக்கு உதவி வழங்கி வருவதான [illegible] வருகின்றனர். இந்த [illegible] மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். மக்களுக்கு வழங்கப்படும் பணம் அரசினுடையது அல்ல. அரசு, தமிழ் மக்களுக்கு எந்த விதத்திலும் சாதகமாகச் செயற்படாது என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.மக்களாகிய நீங்கள் அவர்கள் வழங்கும் சலுகைகளைப் பெற்றாலும் பரவாயில்லை. தேர்தலில் வாக்களிக்கும்போது சுயபுத்தியுடன் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளுங்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பினை விமர்சிப்போர் தமிழ்மக்களுக்கு இதுவரை என்னத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவிடம் சோரம் போனதாக கூறுகின்றனர். அப்படி எதுவும் இடம்பெறவில்லை. இவ்வாறு குற்றம் சாட்டும் சிவாஜிலிங்கம், ஸ்ரீகாந்தா போன்றோரின் கட்சிக்கொடிதான் அ.தி.மு.காவினது போன்றுள்ளது. இவர்கள்தான் இந்தியாவிடம் சோரம் போயுள்ளார்கள். இவர்களாலேயே எமது போராட்டம் பின்னோக்கிச் சென்றுள்ளது - என்றார். (1-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மலர்வு 18 ★ 12 ★ 1932

உதிர்வு 27 ★ 03 ★ 2008



**டயனா சகுந்தலா சபாபதிப்பிள்ளை**

''கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார்,
கர்த்தருடைய நாமத்திற்கே ஸ்தோத்திரம்''

என்றும் மறவாத
குடும்பத்தினர்.

உடுவில் வீதி,
மானிப்பாய். (95893)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 27 ★ 03 ★ 1942

இறப்பு 27 ★ 03 ★ 2009



**பிரான்சிஸ் சேவியர் ஓர்த்தம்மா (தங்கமணி)**

என் அருமை அம்மாவே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது

உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கும்:
பிரான்சிஸ் சேவியர் குடும்பத்தினர்.

403, மாம்பழச் சந்தி,
கண்டி வீதி, அரியாலை.

(95971)

## பழைய தேர் பகிரங்க ஏல விற்பனை

காலம்: 04.04.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி

இடம்: வேரற்கேணிக் கந்தசாமி கோவில் முன்றில்.

குறிப்பு:

01. ஏலம் கூறி முடிந்ததும் பணம் செலுத்தப்பட வேண்டும்.
02. மூன்று தினங்களுள் ஏலம் பெற்ற பொருளை அகற்றிக் கொள்ளல் வேண்டும்.

தலைவர்,
பரிபாலன சபை,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(95981)

## 05ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 04 ★ 04 ★ 1945

இறப்பு 23 ★ 03 ★ 2005



அமரர்

**செல்லத்துரை யோகேஸ்வரநாதன்**

(செயலாளர்,வலி கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,நீர்வேலி)

அன்பு பாசத்துடனே எம்மை வளர்த்து
வழ்வில் சிறப்புற வாழ்ந்து பண்பாளன் என
ஊர் போற்ற வாழ்ந்த எங்கள் அப்பாவே!!
ஐந்து ஆண்டுகள் என்ன ஐம்பது ஆண்டுகள் சென்றாலும்
என்றும் மாறாது உங்கள் நினைவுகள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி,பிள்ளைகள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

வி.ரி.எஸ்.லேன்,
உரும்பிராய் தெற்கு. (95980)

## வேலை ஆள்கள் தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு வேலை ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். (சாப்பாட்டுடன் தங்குமிட வசதி உண்டு).

குறிப்பு: முன் அனுபவம் தேவையில்லை.

RASAM MILL,
POWER HOUSE ROAD, CHUNNAKAM (95778)

## வீடு வாடகைக்கு தேவை

திருநெல்வேலி, கொக்குவில் பகுதியில் 2பேர் வசிக்கத்தக்க சிறிய வீடு அல்லது Anex ஆகவும் வீடு வாடகைக்கு வேண்டும்.

தொடர்பு: 0774706307 (95978)

### குருநகர் குடியிருப்பாளர் கலந்துரையாடல்

வண்ணை, மார்ச், 27

குருநகர், கடற்கரைப் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்துள்ள வீடுகளின் குடியிருப்பாளர்களுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதற்கான ஏற்பாடுகளை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா செய்திருந்தார். 1996 ஆம் ஆண்டு மீளக் குடியமர்ந்த சமயம் குருநகர்கடற்கரையை அண்டிய 300 க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

சில வீடுகளின் சுவர்களும் சேதமடைந்த நிலைமையிலேயே காணப்படுகின்றன. மேற்படி வீடுகளைக் கட்டி முடிக்க அரசால் ஒரு லட்சம் ரூபா வீதம் வழங்க உத்தேசித்த மட்டில் முதல் பகுதி 25 ஆயிரம் ரூபா தற்சமயம் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (1-160)

### மெய்வன்மைப் போட்டி

நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலையத்தின் பாரதி முன்பள்ளி இல்ல மெய்வண்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறும்.

நிலையத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை வேலைகள் அத்தியட்சகர் கு.செல்வரத்தினம் கலந்துகொள்வார். (1-207)

### பெண்களுக்கு சுயதொழில் பயிற்சி

தேவைநாடும் மகளிர் அமைப்பானது பெண்களிற்கான சுயதொழில் பயிற்சிகளை வழங்கவுள்ளது.

இப்பயிற்சியில் பங்குபெற விரும்பும் பெண்மணிகள் தங்களின் பெயர்களை இம்மாத இறுதிக்குள் 35 ஏ, சோமசுந்தரம் அவன்யூ, சுண்டிக்குளி என்னும் முகவரியில் இயங்கும் எமது அலுவலகத்தில் கிழமை நாள்களில் தங்களின் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (1)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா ?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியுடன் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு உள்ளதா என பொதி செய்யப்பட்ட பெட்டியைத் திறந்து சரிபார்த்து வாங்குங்கள்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw
(Reg.No:- 6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

(C/564561)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கௌரவ அமைச்சர்
திரு.டக்ளஸ்
தேவானந்தா
அவர்களே!

போட்ட விதை முளைக்கும் இந்தப் பொன்னான பூமியிலே, வாட்டமில்லாப் பயிராக வந்து பிறந்த எம் தமிழினத்தின் இனிய தோழரே! அன்பு,பண்பு, ஆளுமையும் தோழமையும் கொண்டு அனைவரையும் அணைத்துக் காத்தவரே!

தங்களின் நீதியான கொள்கையும், நேர்மையான பாதையும், சோதனைகள், வேதனைகள், இழப்புகள் மத்தியில் வாழும் எமக்கு விடிவைத் தந்தது- உமதரும் பணிகளை நிறைவுறச் செய்தே துலங்கிடும் முத்தாக தமிழ் மக்களின் குறைதீர்க்கும் வள்ளலே எமது வாழ்வு மேம்பட அமைச்சர் அவர்கள் அமோக வெற்றிகளீட்டி பலம்பெற்று அதனால் நாம் நலமடைய இறைவரம் வேண்டிப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அ.உதயகுமார்
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(95967)

## நாடாளுமன்றத் தேர்தல் - 2010

யாழ்.தேர்தல் மாவட்டம் 10
சுயேச்சைக் குழு 02




மாற்ற முடியாதது எதுவும் இல்லை. மாற்றத்தை விரும்பி நீங்கள் மாற வேண்டிய விடயமும், இடமும், தருணமும் இதுதான்.



**உங்கள் பிள்ளைகளுக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள்.**

திரு.சண்முகநாதன்
மனோகரன்-10
முதன்மை வேட்பாளர்
சாவகச்சேரி.

உறுதியான எதிர்காலத்தை உருவாக்க மக்களாகிய நாம் ஒன்றாகநின்று ஒரே சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். இனிவரும் காலம் மலர்வதும், உதிர்வதும் நீங்கள் போடும் வாக்குகளில்தான் தங்கியுள்ளது.



திரு.வைத்திலிங்கம்
இராமச்சந்திரன்-9
சுன்னாகம்.

எமது சுயேச்சைக் குழுவிற்கு ஆதரவு நல்கி மூக்குக் கண்ணாடி சின்னத்திற்கு உங்கள் பொன்னான வாக்குகளை அள்ளி வழங்குவீர்கள்.


(95988)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஊடகத்துறையினரும் அரசியலும்


அரியநேத்திரன்


ஜெயானந்தமூர்த்தி


ஜோசப் பரராஜசிங்கம்


சிவராம்

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என வர்ணிக்கப்படும் ஊடகத்துறையினர் அரசியலில் பிரவேசிப்பது எவ்வளவு தூரம் ஆரோக்கியமானது என்பது விவாதத்திற்குரிய விடயம். ஒரு ஜனநாயக நாட்டின் நீதி, நிர்வாகம், சட்டவாக்கதுறையான நாடாளுமன்றம் என்ற மூன்று தூண்களுக்கும் நிகராக அந்த நாட்டை தாங்கி நிற்கும் நான்காவது தூணாக ஊடகத்துறை விளங்கிவருகிறது. ஊடகத்துறை பலவீனமடைகின்ற போது அல்லது பலவீனப்படுத்தப்பட்டு மௌனிக்கப்படுகின்ற போது ஏனைய தூண்களும் பலமிழந்து போகின்றமை தவிர்க்க முடியாததாகும்.

நீதி, நிர்வாக, சட்டவாக்க துறைகளை சரியாக பயணிக்க வைக்கும் ஊடகத்துறை எப்போதும் தனித்துவமாகவும் அரசியல் மயப் படுத்தப்படாமலும் இருப்பது அவசியமானதும் ஆரோக்கியமானதுமாகும்.

தற்போது இலங்கையில் நடைபெற இருக்கும் தேர்தல் களத்தில் கண்காணிப்பாளர்களாக இருக்க வேண்டிய ஊடகத்துறையினர் அந்த களத்திற்குள் இறங்கியிருக்கிறார்கள். இதன் சாதக - பாதக நிலைமைகள் தேர்தல் முடிவுகள் வெளிவரும் போது தெரியவரும்.

இலங்கையில் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தல் பல விடயங்களில் சாதனை படைத்திருக்கிறது. இலங்கையின் வரலாற்றில் அதிக வேட்பாளர்கள் போட்டியிடுவது, ஒரு மாவட்டத்தில் அதிக அணிகள் போட்டியிடுவது என பல விடயங்களில் இத்தேர்தல் சாதனை படைத்திருக்கிறது. அது போல கடந்த காலங்களை விட இத்தேர்தலில் ஊடகத்துறையைச்சேர்ந்த பலர் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள்.

இம்முறை ஊடகத்துறையைச் சேர்ந்த பத்துப் பேர் தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார்கள். இவர்களில் ஊடகவியலாளர்களுடன் ஊடக நிறுவனங்களின் நிர்வாக துறையில் இருந்தவர்களும் அடங்குகிறார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு, சுயேச்சைக்குழு என பல தரப்பிலும் இவர்கள் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள்.

பிரபல்யங்களுக்காகவும் ஊடகங்களின் ஆதரவை பெறுவதற்காகவும் ஊடகத்துறையினர் இம்முறை அதிகளவில் களமிறக்கப்பட்டிருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் 'ரூபவாஹினி' தொலைக்காட்சியின் முன்னாள் பணிப்பாளர் பரணவிதாரண, 'ஐ.ரி.என்.' தொலைக்காட்சி பணிப்பாளர் சுதர்மன் ரடலியகொடவும் , வன்னி மாவட்டத்தில் 'ரூபவாஹினி' ஊடகவியலாளர் உபுல் பாலசூரிய, ஐக்கிய தேசியக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் 'எம்.ரி.வி.' தொலைகாட்சியின் பணிப்பாளராக இருந்த கெடிலிப்பிட்டிய , 'வீரகேசரி' நாளிதழின் செய்தி ஆசிரியர் ஸ்ரீகஜன், 'சக்தி' தொலைக்கட்சியின் அரசியல் நிகழ்ச்சிப் பணிப்பாளர் ஸ்ரீரங்கா, ஊடகவியலாளர் புத்திக பத்திரண ஆகியோரும் போட்டியிடுகின்றனர். தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் பட்டியலில் 'உதயன்', 'சுடர்ஒளி' நிர்வாக இயக்குநர் சரவணபவன் போட்டியிடுகின்றார். கிழக்கு மாகாணத்தில் மஹிந்த அரசின் ஆதரவு பெற்ற சுயேச்சைக்குழுக்களிலும் இரு ஊடகவியலாளர்கள் போட்டியிடுகின்றனர். மட்டக்களப்பு மாவட்ட சுயேச்சை குழுவில் எல்.ஜப்வர்கானும், அம்பாறை மாவட்ட சுயேச்சைக்குழுவில் எம்.எம்.எஸ்.ஜஸ்ரினும் போட்டியிடுகின்றனர். இது தவிர யாழ் மாவட்டத்தில் தமிழ்தேசியக்கூட்டமைப்பில் போட்டியிடும் ஐங்கரநேசன் 'தினக்குரல்' பத்திரிகையின் ஊடகவியலாளர் என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அவர் 'தினக்குரல்' பத்திரிகையின் முழுநேர அல்லது பகுதி நேர ஊடகவியலாளர் அல்ல என 'தினக்குரல்' வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன. அவர் 'தினக்குரல்' பத்திரிகைக்கு சூழல், சுற்றாடல் தொடர்பான கட்டுரைகளை எழுதியிருக்கிறார். செய்தித்துறையில் அவர் பணியாற்றவில்லை என தெரிவிக்கப்படுகிறது. தமது பத்திரிகைக்கு அரசியல் சாயம் பூசுவதற்காகவே அவ்வாறு கூறுகிறார் கள் என்பது 'தினக்குரலின்' குற்றச்சாட்டு.

எனவே ஐங்கரநேசனைத் தவிர்த்து விட்டால் பத்துப் பேர் இம்முறை தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார். இவர்களில் ஸ்ரீகஜன் 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும் யாழ்.மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியில் போட்டியிட்டிருந்தார்.

பிரபல்யங்களுக்காக அல்லது ஊடகங்களின் ஆதரவை தேடிக்கொள்வதற்காக இவர்கள் களமிறக்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்து நிலவுகின்ற போதிலும் 'வீரகேசரி', 'சக்தி' போன்ற ஊடகங்கள் தங்களுடைய ஊடகவியலாளர்கள் தேர்தல் களத்தில் குதித்திருக்கின்ற போதிலும் அது தொடர்பான செய்திகள் எதையும் அவை வெளியிடவில்லை.

'வீரகேசரி' செய்தி ஆசிரியர் ஸ்ரீகஜன் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடுவது பற்றியோ அல்லது அவர் யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாடு பற்றியோ 'வீரகேசரி' முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அதேபோன்று ஸ்ரீரங்கா தேர்தலில் போட்டியிடுவது பற்றியோ அல்லது அவரின் தேர்தல் பிரசாரங்கள் பற்றியோ சக்தி தொலைக்காட்சி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை.

அதேபோன்று 'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகள் கூட சரவணபவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. விளம்பரங்களைத் தவிர்த்துப் பார்த்தால் செய்திகளில் அனைத்து வேட்பாளர்களுக்கும் அப்பத்திரிகைகளில் சம உரிமைகளே வழங்கப்பட்டு வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

ஊடகத்துறையினரின் அரசியல் பிரவேசம் என்பது இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதியதொன்றல்ல. கடந்த காலங்களில் தமிழர்கள் தரப்பிலிருந்து மட்டுமல்ல சிங்களவர்கள் முஸ்லிம்கள் தரப்பிலிருந்தும் ஊடகத்துறையிலிருந்து அரசியலுக்கு பிரவேசித்து அமைச்சர்களாக கூட இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களால் மீண்டும் ஊடகத்துறைக்கு பிரவேசிக்க முடியாமல் போய்விடுகிறது.

வேறு துறைகளிலிருந்து அரசியலுக்கு செல்பவர்களால் திரும்பவும் தங்களுடைய துறைகளுக்கு சென்று பணியாற்ற முடியும். ஆனால்

# பிரவேசங்களும் வெளியேற்றங்களும்

ஊடகத்துறையிலிருந்து அரசியலுக்கு செல்பவர்களால் திரும்பவும் ஊடகத்துறைக்கு வந்து பணியாற்ற முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது. அதுமட்டுமல்ல. அவர்களின் நடுநிலமை, நம்பகத்தன்மை என்பனவும் கேள்விக்குட்படுத்தப்படுகின்றமை தவிர்க்க முடியாததாகும்.

ஊடகத்துறையினரின் அரசியல் பிரவேசத்தின் சாதக - பாதக நிலமைகள் பற்றிப் பார்ப்பதற்கு முதல் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களாக இருந்து அரசியலுக்கு பிரவேசித்தவர்கள் பற்றி பார்ப்போம்.

ஊடகத்துறையிலிருந்து அரசியலுக்கு சென்றவர்களில் ஆரம்பகாலத்தை சேர்ந்தவராக இருப்பவர் எட்வின் விஜயரட்ணா ஆகும்.

சுவிஸிலிருந்து இரா. துரைரெத்தினம்

ஊடகவியலாளராக இருந்த இவர் பின்னர் செனட்டராக இருந்து டன் 1948ஆம் ஆண்டில் டி.எஸ்.சேன நாயக்கா அரசில் உள்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் ஐக்கிய தேசியக்கட்சி அரச காலத்தில் ஆர்.இரியகொல்ல கல்வி அமைச்சராக இருந்தார். இவரும் ஊடகத்துறையிலிருந்தே அரசியலுக்கு பிரவேசித்தார். அதேபோன்று தற்போது சிறிலங்கா ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவராக இருக்கும் அஸ்வரும் ஆரம்பத்தில் ஒரு பத்திரிகையாளராக இருந்தார். பின்னர் பிரேமதாஸாவின் மொழிபெயர்பாளராக கடமையாற்றிய பின் தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.


சரவணபவன்


ஸ்ரீகஜன்


ரங்கா

தென்னிலங்கையைப் பொறுத்தவரை வேறும் சிலரும் இந்த பட்டியலில் இருக்கலாம். ஆனால் என்னுடைய தேடலுக்குள் கிடைத்தவை இவைதான்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அஷ்ரப்பும் ஆரம்ப காலத்தில் 'தினகரன்' மற்றும் 'தினபதி' பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராகப் பணியாற்றியிருக்கிறார்.

தமிழர்களைப் பொறுத்தவரை ஊடகத்துறையிலிருந்து அரசியலுக்கு சென்றவர் என்ற வரிசையில் ஆரம்பகாலத்தவராக அன்டன் பாலசிங்கம் உள்ளார். 'வீரகேசரி' உதவி ஆசிரியராக பணியாற்றிய அன்டன் பாலசிங்கமே பிற்காலத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகராக இருந்தார்.

தமிழ் அரசியல்துறை என்பது சட்டத்துறை சார்ந்தவர்களாலேயே ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. க.பொ.இரத்தினம் ஊடகத்துறைக்கு பத்தி எழுத்தாளராகப் பங்குபற்றியவராக அறிய முடிகிறதே தவிர முழுநேர ஊடகவியலாளராக இருந்தமைக்கான தகவல்களை பெற முடியவில்லை.

'தினபதி' மற்றும் 'சண்' பத்திரிகைகளின் மட்டக்களப்பு மாவட்ட செய்தியாளராகவும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் தலைவராகவும் இருந்த பி.ஜோசப் 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் போட்டியிட்டார்.

அவர் தேர்தலில் போட்டியிடும் போது தன்னுடைய பெயரை ஜோசப் பரராஜசிங்கம் என்றே அறிமுகப்படுத்தியிருந்தார். ஜோசப் பரராஜசிங்கம் என்ற பெயர் பலருக்கு அறிமுகமாக இல்லாததால் ஏற்கனவே தமிழ் மக்களுக்கு பத்திரிகையாளர் என்ற முறையில் நன்கு அறிமுகமான சுகுணம் ஜோசப் என்ற பெயரையும் தன்னுடைய சுவரொட்டிகளில் குறிப்பட்டிருந்தார். 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளில் சுகுணம் ஜோசப் என்ற பெயரிலேயே அதிகமான கட்டுரைகளையும் அவர் எழுதி வந்தார். இத்தேர்தலில் அவர் தெரிவு செய்யப்படாவிட்டாலும் சாம் தம்பிமுத்துவின் மறைவையடுத்து 1990ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

இதன் பின்னர் 'தினகரன்' பத்திரிகையின் அலுவலக செய்தியாளராகவும் பின்னர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு செய்தியாளராகவும் இருந்த செழியன் பேரின்ப நாயகம் 1993ஆம் ஆண்டு நடைபெற்ற மட்டக்களப்பு மாநகரசபைக்கான தேர்தலில் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டு மாநகர முதல்வராக தெரிவு செய்யப்பட்டார். ஜோசப் பரராஜசிங்கத்திற்கு பிறகு இவரே கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் தலைவ ராக இருந்தார். நான் மிகவும் நேசித்த ஊடகத்துறை நண்பர்களான இவர்கள் இருவரும் அவர்கள் நேசித்த மண்ணில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்பதுதான் மிகச்சோகமான விடயம்.

(12 பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகத்துறையினரும் அரசியலும்......

(11 பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னர் 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் சார்பில் ஊடகவியலாளர்களான ஜெயானந்தமூர்த்தியும் அரியநேத்திரனும் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகினர். அப்போது கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் உபதலைவராக ஜெயாணந்தமூர்த்தியும், பொருளாளராக அரியநேத்திரனும் இருந்தனர்.

கிழக்கு மாகாணத்தில் செயற்பட்ட கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் தமிழ் மக்களின் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபாடு காட்டியதன் காரணமாகவோ என்னவோ கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தைச்சேர்ந்த பலர் ஊடகத்துறையிலிருந்து அரசியலுக்கு சென்றிருக்கிறார்கள்.

இது தவிர 'தினபதி', 'சிந்தாமணி' பிரதம ஆசிரியர் எஸ்.டி. சிவநாயகமும் அரசியலுக்கு பிரவேசிக்கும் ஆர்வம் கொண்டிருந்தார். தமிழரசுக்கட்சியின் ஆதரவில் வெளிவந்த 'சுதந்திரன்' பத்திரிகையில் பணியாற்றிய அவர் செனட்டர் நியமனம் தமக்கு வழங்கப்படவில்லை என்பதால் தமிழரசுக்கட்சியுடன் முரண்பட்டுக்கொண்டு அப்பத்திரிகையிலிருந்து விலகினார் என்று பரவலாக விமர்சிக்கப்பட்டது. அதன் பின்னர் 'தினபதி' 'சிந்தாமணி'ப்பத்திரிகையில் பிரதம ஆசி ரியராக பணியாற்றிவந்தார். இந்த முரண்பாடு காரணமாக தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் விடுதலைக்கூட்டணி தொடர்பாக கடுமையான விமர்சனங்களை அவர் எழுதி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்கு, கிழக்கை பொறுத்தவரை மட்டக்களப்பு பிரதேசத்திலேயே அதிகமானவர்கள் ஊடகத்துறையிலிருந்து அரசியலுக்கு பிரவேசிக்கும் தன்மை இம்முறை யாழ்ப்பா ணத்தையும் எட்டியிருக்கிறது.

தமிழ் ஊடகத்துறையில் பிரபல்யமாக இருக்கின்ற 'வீரகேசரி' மற்றும் 'உதயன்' 'சுடர்ஒளி'யைச்சேர்ந்தவர்கள் யாழ்ப்பாண தேர்தல் களத்தில் குதித்திருக்கிறார்கள்.

தேர்தல் களத்தில் போட்டியிடுகின்ற ஊடகவியலாளர்கள் மீண்டும் ஊடகத்துறைக்கு திரும்ப முடியுமா, அவர்களின் நடுநிலைமைத்தன்மை கேள்விக்குட்படுத்தப்படுமா என்ற கேள்விகளும் தவிர்க்க முடியாமல் எங்கள் முன் தொக்கி நிற்கின்றன.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகை உலகில் மிகவும் பழமை வாய்ந்ததும் பிரபல்யமானதுமான 'வீரகேசரி' பத்திரிகையின் செய்தியாசிரியர் ஸ்ரீகஜன் மீண்டும் ஊடகத்துறைக்கு வரும் பட்சத்தில் அவரால் நடுநிலைத்தன்மையாளராக தன்னை காட்டிக்கொள்ள முடியுமா என்ற, கேள்வி எழுகிறது. அது போல 'சக்தி' தொலைக்காட்சியின் 'மின்னல்' அரசியல் நிகழ்ச்சியின் தயாரிப்பாளராக இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற ஸ்ரீரங்கா மீண்டும் ஊடகத்துறைக்குத் திரும்பி முன்னரைப்போன்று ஊடகத்துறையில் பிரகாசிக்க முடியுமா என்ற கேள்வி களும் எழுகின்றன.

இதேவேளை, கணிசமானவர்கள் அரசியலிலிருந்து ஊடகத்துறைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் அரசியலில் இருந்த காலத்தை விட ஊடகத்துறைக்கு வந்து பிரகாசித்திருக்கிறார்கள். இருந்த போதிலும் அவர்கள் எவ்வளவுதான் நடுநிலைமையோடு செயற்பட்டாலும் கடந்த கால அரசியலை நினைவுபடுத்தி விமர்சனங்களும் எழுந்திருக்கின்றன.

ஈழவிடுதலைப்போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட பலர் பிற்காலத்தில் அதிலிருந்து விலகி ஊடகத்துறைக்கு வந்து பிரபல்யம் அடைந்திருக்கிறார்கள்.

இலங்கையின் ஊடகத்துறையில் ஜம்பவானாக திகழ்ந்த சிவராம் 'புளொட்' அமைப்பில் அரசியல் பிரிவிலிருந்து வெளியேறிய பின்னரே ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்ஸாவால் ஊடகத்துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். அது தவிர 'புளொட்' அமைப்பில் இருந்த பலர் ஊடகத்துறைக்கு வந்து பிரபல்யமான ஊடகவியலாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

'சரிநிகர்' ஆசிரியர் சிவகுமார், 'சூரியன்' எவ்.எம். பிரதம செய்தியாசிரியர் குருபரன், 'தினக்குரல்' பத்திரிகையின் சிரேஷ்ட உதவி ஆசிரியர் ரவிவர்மன், 'தினகரன்' பிரதம செய்தியாசிரியர் குணராசா, 'தினக்குரல்' பத்திரிகையின் மட்டக்களப்பு செய்தியாளரும் தற்போது சுவிட்ஸர்லாந்தில் வசித்து வரும் ஊடகவியலாளர் சண்.தவராசா, 'சரிநிகர்' பத்தி எழுத்தாளரும் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'விடிவானம்' பத்திரிகையின் ஆலோசகருமான தயாபரன் ஆகியோர் 'புளொட்' அமைப்பின் அரசியல் பிரிவிலிருந்து ஊடகத்துறைக்கு வந்தவர்கள்தான். அரசியல்துறையில் இருந்த காலத்தை விட ஊடகத்துறைக்கு வந்த பின்பே அவர்களின் ஆளுமையும் திறமையும் வெளிப்பட்டிருக்கின்றன.

இன்று தமிழ் ஊடகத்துறையின் முக்கிய பொறுப்புக்களில் 'புளொட்' அமைப்பிலிருந்து வெளியேறி ஊடகத்துறைக்கு வந்த பலர் உள்ளனர். ஆனாலும் எமது சமூகம் அந்த ஊடகவியலாளர்களை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பழைய அரசியலைச் சுட்டிக்காட்டி அவர்களின் நடுநிலைமை அல்லது உண்மைத்தன்மையை கேள்விக்குறியாக்கி வந்திருக்கிறது.

அது போல ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தில் இருந்த ரமேஷ் என்று அழைக்கப்படும் அற்புதராசா நடராசா, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் சிவகுமார், 'லேக்கவுஸ்' நிறுவனத்தால் வெளியிடப்பட்ட 'அமுது' சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் இருந்த பாஸ்கரன் ஆகியோரும் அரசியலில் இருந்து ஊடகத்துறைக்கு வந்தவர்கள் தான். ஈரோஸ் இயக்கத்தில் இருந்த பால நடராசாவும் அரசியலிருந்தே ஊடகத்துறைக்கு வந்தார்.

இதுதவிர என்.எல்.எவ்.ரி. இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பனரான மனோரஞ்சன் சந்திரிகா அரச காலத்தில் 'லேக்கவுஸ்' நிறுவனத்தின் தமிழ்வெளியீட்டுப் பிரிவின் முகாமைத்துவ ஆசிரியராகப் பணியாற்றினார்.

ஆங்கில ஊடகத்துறையில் பிரபல்யமாக திகழும் 'தமிழ்நெற்' இணையத்தளத்தின் ஆசிரியர் ஜெயா என்று அழைக்கப்படும் ஜெயச்சந்திரன் அரசியலில் இருந்தே ஊடகத்துறைக்கு வந்தார். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கிய பொறுப்பாளராக இருந்த ஜெயச்சந்திரன் 1987 காலப்பகுதியில் இலங்கையிலிருந்து வெளியேறினார். தற்போது நோர்வேயில் வசித்து வரும் அவர் 1997ஆம் ஆண்டு காலப்பகுதியில் டி.சிவராம் உட்பட சில நண்பர்களுடன் சேர்ந்து விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் 'தமிழ்நெற்' என்ற இணையத்தளத்தை ஆரம்பித்தார். தற்போதும் அவரே 'தமிழ்நெற்' இணையத்தளத்தின் ஆசிரியராக இருக்கிறார்.

மட்டக்களப்பிலிருந்து வெளிவந்த 'தினக்கதிர்', தினசரிப்பத்திரிகையின் நிறுவுனர்களாக இருந்த மனோ இராஜசிங்கம், சாந்தி சச்சிதானந்தம் ஆகியோரும் ஆரம்பகாலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தில் இருந்தவர்கள்தான்.

சிங்கள ஊடகத்துறையில் இன்று முன்னணியில் இருக்கும் பலர் ஜே.வி.பி. மற்றும் இடதுசாரி அரசியலில் இருந்து ஊடகத்துறைக்கு வந்திருக்கிறார்கள். ஊடகவியலாளர் விக்ரர் ஐவன். ஜே.வி.பியின் ஆயுதப் போராட்ட காலத்தில் அதில் இணைந்து செயற்பட்டவர். அதே போல சுனந்த தேசப்பிரிய ஜே.வி.பியின் அரசியல் பிரிவில் முக்கிய செயற்பாட்டாளராக இருந்தவர். பத்தி எழுத்தாளராக இருக்கும் குமார் ரூப்சிங்க கூட இடதுசாரி அரசியலிலிருந்து வந்தவர்தான்.

அரசியலிருந்து ஊடகத்துறைக்கு வந்தவர்கள் ஊடகத்துறைக்கு பலம் சேர்த்திருக்கிறார்கள். ஆனால் ஊடகத்துறையிலிருந்து அரசியல்துறைக்கு செல்பவர்கள் ஊடகத்துறையில் இருந்ததைவிட அரசியல்துறையில் பிரகாசித்திருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது.

ஒரு ஜனநாயக நாட்டில் அல்லது ஒரு சமூகத்தில் பலமான நிலையில் இருக்க வேண்டிய நான்காவது தூணாக கருதப்படும் ஊடகத்துறையினரின் அரசியல் பிரவேசம் என்பது ஊடகத்துறைக்குப் பாதிப்பென்றே சொல்ல வேண்டும். அவர்கள் வெளியில் இருந்து அரசியலை வழிநடத்துவதே ஆரோக்கியமாக இருக்கும்.

இதுதவிர ஊடகத்துறையை சேர்ந்த திறமைசாலிகள் அத்துறையை விட்டு செல்வது என்பது அச்சமூகத்திற்கு ஆரோக்கியமானதாக இருக்காது. ஒருவர் போனால் என்ன இன்னொருவர் அத்துறையை நிரப்புவார் என உங்களில் சிலர் கூறலாம். ஏனைய துறைகளுக்கு அது பொருத்தமாக இருந்தாலும் ஊடகத்துறையைப் பொறுத்தவரை ஒருவரின் இழப்பால் ஏற்படும் வெற்றிடத்தை இலகுவில் நிரப்பிவிட முடி யாது. இதை கடந்த காலங்களில் நாங்கள் பார்த்திருக்கிறோம்.

ஒருபுறம் துப்பாக்கி குண்டுகள் ஊடகவியாளர்களை துரத்துகின்றன.

மறுபுறம் இந்த அரசியலும், விமர்சனங்கள் என்ற போர்வையில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களும் ஊடகவியலாளர்களை ஒதுங்க வைக்கும் நடவடிக்கைகளாகவே காணப்படுகின்றன.

தமிழ் சமூகத்திற்காக கடந்த பல வருடங்களாக தங்களது உயிரையும் துச்சமென மதித்து செயற்பட்ட் ஊடகவியலாளர்கள் மீது அண்மைக்காலத்தில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் கூட ஊடகத்துறையை பாதித்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும்.

விடுதலை வேண்டி நிற்கும் தமிழ் சமூகம் தமிழ் ஊடகத்துறையை கடந்த காலங்களில் சரியாக கையாண்டிருக்கிறதா? இறந்ததன் பின்னர் வெறும் பட்டங்களை வழங்குவதல்ல முக்கியம்... அவர்கள் வாழும் போது எவ்வாறு அவர்களை நாங்கள் அணுகினோம் என்பதே முக்கியம். இந்த குற்ற உணர்வை காலம் கடந்தாவது இந்த சமூகம் உணர்ந்து கொள்ளுமா?

ஈழத்தமிழர்களின் ஊடகத்துறை வரலாறு எழுதப்படும் போது அல்லது தமிழ் ஊடகத்துறை பற்றிய சரியான பகுப்பாய்வை செய்யும் போது இதற்கான விடை எமக்கு கிடைக்கும் என நம்புகிறேன். ✱

**யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேச்சைக் குழு ஒன்றில் எழுத்தாளர் தெணியான் போட்டி யிடுவதாக கடந்த 23 ஆம் திகதி உதயனின் 11 ஆம் பக்கத்தில் சுவிஸிலிருந்து இரா.துரைரத்தினம் எழுதிய கட்டுரைத் தொடரில் வெளிவந்த தகவல் தவறானதாகும். தேர்தலில்தான் போட்டியிடவில்லை என தெணியான் அறிவித்துள்ளார்.**

கோழிக்குஞ்சு விற்பனைக்கு
➤ புறொயிலர் வகை சேவல் குஞ்சுகள்
➤ மாஸ் அவசியமில்லை
➤ கூட்டில் வளர்க்க வேண்டிய அவசியமில்லை
➤ 2 1/2 மாதத்தில் 2 kg வரை வளரக்கூடியது
➤ தொகையாக வாங்குவோருக்கு விசேட கழிவு
➤ உங்கள் வீடுகளுக்கே விநியோகிக்கப்படும்
➤ மிகக் குறைந்த விலை
பதிவுகளுக்கு அழையுங்கள்
021 7200616
23, கண்டி வீதி, சாவகச்சேரி

பட்டம் சூடுபவரை
பாராட்டுகின்றோம்
எம்மவர்களான முதுகலைமாணிப் பட்டம் பெறும்
செல்வி. பு.இளையதம்பி, திரு ஏ.அனுசாந்தன்,
முதுகல்வியியல் மாணிப்பட்டம்பெறும்
• செல்வி வ.வைத்திலிங்கம்
பட்டப்பின் நூலகடிப்ளோமாபட்டம் பெறும்
செல்வி பி.பத்மநாதன்
ஆகியோரை வாழ்த்தும் அதேவேளை இவர்கள் மேலும் பல உயர்வுகள் பெற்றிடவும் வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் கழகம்,
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

உடனடி வேலைவாய்ப்பு
எமது நிறுவனத்தில் கீழ்வரும் பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. தகுதியானவர்கள் தொடர்புகொள்ளுங்கள்.
1. கணினி திருத்துனர்கள்
2. Microsoft Office & DTP போன்ற கற்கைநெறிகள் பற்றிய அறிவுள்ளவர்கள்.
[சான்றிதழ்கள் அவசியமில்லை திறமையானவர்கள் சனி, ஞாயிறு தினங்களில் நேரில் வரவும்]
SCOT COMPUTER CENTRE
கண்டி வீதி, சாவகச்சேரி

பாராட்டி வாழ்த்துகின்றோம்

திரு. C.A. மோகன்றாஸ் (SLAS - I)
[பிரதேச செயலர், வலி-கிழக்கு, கோப்பாய்]
இன்று (27.03.2010) சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பொதுப் பட்டமளிப்பு விழாவில் பிராந்திய திட்டமிடல் பிரிவில் முதுகலைமாணிப்பட்டம் பெறும் எமது அன்பிற்கும் மதிப்புக்குமுரியவலி:கிழக்கு பிரதேச செயலர் திரு.சீ.ஏ. மோகன்றாஸ் அவர்கள் மென்மேலும் பட்டங்களும் பதவிகளும் பல பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: அலுவலக உத்தியோகத்தர்கள்-
இ.அனுராகாந்தன், ந.சத்தியரூபன், ப.பத்மகுமரா
சு.தயாளினி, கெ. ஜெயகௌரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுஜிந்தினியின் 'ஹட்ரிக்' சாதனையின் மூலம் வெற்றியைச் சுவைத்தது சுழிபுரம் விக்ரோறியா

## சிறந்த துடுப்பாளர்- பானுப்பிரியா ; சிறந்த களத்தடுப்பாளர்- நதீபனா



விக்ரோறியாக் கல்லூரி



அருணோதயாக் கல்லூரி

வலி.வடக்கு, மார்ச் 27

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வீராங்கனை சுஜிந்தினியின் 'ஹட்ரிக்' சாதனையின் மூலம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே முதல் தடவையாக நடைபெற்ற பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் அமரர் மகேஸ்வரன் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும், அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி 10 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பானுப்பிரியா 32 ஓட்டங்களையும், பிரணவி ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களையும், ரஜிதா, சுஜிந்தி தலா 13 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த பிரியா 2 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், காவேரி, சதீஸ்கா, நதீபனா முறையே 17,18,25 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

110 ஓட்டங்களைப் வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அருணோதயாக் கல்லூரி 10 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 71 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

தர்மினி 27 ஓட்டங்களையும், நதீபனா 11 ஓட்டங்களையும், காவேரி 10 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

விக்ரோறியாக் கல்லூரி சார்பில் பந்து வீசிய சுஜிந்தினி தனது முதலாவது ஓவரில் 4ஆம், 5ஆம், 6ஆம் பந்துகளில் அருணோதயாக் கல்லூரி முன்னணி வீராங்கனைகளின் விக்கெட்டுக்களைக் கைப்பற்றி 'ஹட்றிக்' சாதனையைப் படைத்தார்.

இவர் 2 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பானுப்பிரியா 2 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சோபிகா 2 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ரஜிதா 13 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஆட்டத்தில் விக்ரோறியாக் கல்லூரியைச் சேர்ந்த வி.பானுப்பிரியா சிறந்த துடுப்பாட்ட வீராங்கனையாகவும், ஆட்ட நாயகியாகவும் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த பந்து வீச்சாளராக கே.சுஜிந்தினி தெரிவு செய்யப்பட்டார்.

அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.நதீபனா சிறந்த களத்தடுப்பாளராக தெரிவு செய்யப்பட்டார்.

போட்டியின் சுற்றுத் தொடரில் ஒரு போட்டியில் 106 ஓட்டங்களைப் பெற்ற மானிப்பாய் மகளிர் கல்லூரி வீராங்கனை சர்மிலா விசேட பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

முதல் இரண்டு இடங்களையும் பெற்ற அணிகள் மாவட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (50-86)

# பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் பமிலியன்ஸ் வி.க. சம்பியனானது

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று சம்பியனாகியது.

கடந்த வாரம் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இதில் பமிலியன்ஸ் விளையாட்டுக் கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய இளங்கதிர் விளையாட்டுக்கழக அணியை 20:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிகொண்டு சம்பியனாகியது.

(50-23)

## 'ஜெற் லைனர்ஸ்' வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த வியாழக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் ஜெற்லைனர்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றிபெற்றது.

ஜெற்லைனர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து திருவள்ளுவர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஜெற்லைனர்ஸ் விளையாட்டுக்கழக அணி தன்னை எதிர்த்து விளையாடிய திருவள்ளுவர் விளையாட்டுக்கழக அணியை 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டது.

(50-23)

# கரபந்தாட்ட மத்தியஸ்தருக்கான பயிற்சிநெறி கொழும்பில்

யாழ்ப்பாணம், மார்ச் 27

சர்வதேச கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் அனுரணையுடன் கரப்பந்தாட்ட மத்தியஸ் தர்களுக்கான பயிற்சிநெறி கொழும்பில் இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பயிற்சி நெறியில் யாழ்ப்பாணத்திலிருந்து யாழ்.மாவட்டக் கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர். என்.சுரேஸ்குமார் கலந்துகொண்டுள்ளார். இந்த மத்தியஸ்தர்கள் பயிற்சிநெறிக்காக இலங்கை முழுவதி லும் இருந்து 37 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதில் யாழ்.மாவட்டத்திலிருந்து சுதேஸ்குமார் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.'

(50-23)

# தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கம் 2009 ஆம் ஆண்டு நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பண்டத்தரிப்புச் சாந்தை விளையாட்டுக் கழக அணி மோதுகின்றது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கலந்துகொள்வார்.

(50-23)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களின் ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு,

பிற்பகல் 4 மணிக்கு

சென்.நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி எதிர் ஜெற்லைனர்ஸ் விளையாட்டுக்கழக அணி.

பிற்பகல் 5 மணி

பாரதி விளையாட்டுக்கழக அணி எதிர் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி.


(50-23)



வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் பெண்கள் அணிகளுக்கு இடையே மகேஸ்வரன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிய மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியை முதல் படத்திலும்- வெற்றிபெற்ற அணிக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெற்றிக் கிண்ணத்தை வழங்குவதை இரண்டாவது படத்திலும்- இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு வீராங்கனைகள் அறிமுகம் செய்து வைக்கப்படுவதை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: நேசன், தமிழினியன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லலும்



## அமரர் சிவானந்தன் நதீஸ்

மலர்வு 07.05.1986

உதிர்வு 11.02.2010

கள்ளங் கபடமற்ற கண்மணியே!
கடமைகளை மறந்து
காலன் கை புகுந்தனையோ?
நம் குடும்பத் தலைமகனே!
நந்தா விளக்கணைய நதீஸே
ஆலமரமாய் நீர் வளர்ந்து
ஆறுதல் தருவீர் என்றிருக்க
ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்டீரோ!
ஆறாது எம் இதயம்
அவனியில் நாம் இருக்கும் வரை.

கடந்த 11.02.2010 வியாழக்கிழமையன்று
அகால மரணமடைந்த எமது அன்பு மகனின்
மரணச் செய்திகேட்டு வருகை தந்த உற்றார், உறவினர்,நண்பர்கள்,
யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்கள், தாதிய
உத்தியோகத்தர்கள்,
யாழ்.பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர்,
பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்,
கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் தொலைபேசி,
தந்தி, துண்டுப்பிரசுரம், பத்திரிகை இவை மூலம்
அஞ்சலி செலுத்தியோருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகள்.
அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.03.2010)
சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரின்இல்லத்தில்
(இல.38, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெறும்.
அந்நிகழ்வில் கலந்து அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து
அதனைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில்
யாழ். ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் இடம்பெறும் மதிய போசன
நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.
ஓம்சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

**மேற்படி அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்
கலந்து கொள்ளுமாறு அன்புடன்கேட்டுக் கொள்கிறோம்.**

**குடும்பத்தினர்.**

**தந்தை- இராமலிங்கம் சிவானந்தன்**
(கிராம அலுவலர், பெரியகடை,கோட்டை),
**திருமதி சிவானந்தன் சந்திரபிரேமா**
(தாதிய அலுவலர்,யாழ்.போதனா வைத்தியசாலை)

(அ/5060074)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி

## 2010 மார்ச் (27, 28, 29 இல்)

## வடக்கு, தெற்கு வர்த்தக நிறுவனங்கள் தமது உற்பத்திகளை அறிமுகப்படுத்தவும் சந்தைப்படுத்தவும் வழிசமைக்கும் கண்காட்சி

### யாழ். வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரம் கருத்து

வடபகுதி, தென்பகுதி உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்திகளை அறிமுகப்படுத்தவும் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் யாழ். வர்த்தகக் கண்காட்சி களம் அமைக்கும் என யாழ்ப் பாண வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் தெரிவித்தார்.



இந்தக் கண்காட்சி தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாண வணிகர் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சியைக் குடாநாட்டின் அனைத்துப் பாகங்களிலும் இருந்து வருகை தந்து மக்கள் பார்த்துப் பயனடைந்து கொள்ள வேண்டும். இது வர்த்தகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் மட்டுமன்றி பொதுமக்களுக்கும் நுகர்வோருக்கும் மிகப் பயனுடையதாக அமைந்திருக்கும்

நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்குபற்றும் இந்த நிகழ்வில் தகவல் தொழில்நுட்பம், உணவு வகை, மருந்துவகை, பாடசாலை காகிததாதிகள், விவசாயம், மரத்தளபாடங்கள், வாகன உற்பத்தி நிறுவனங்கள், புடைவை விற்பனை நிலையம், வங்கிகள் என்பவற்றின் காட்சியறைகள் இடம்பெறுகின்றன.

எமது உள்ளூர் உற்பத்திகளும் அதிகளவில் இடம்பெறுகின்றன. அவைகளுக்கும் சந்தை வாய்ப்புக் கிடைக்க வேண்டும். எமது உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் பணத்தை எமது மக்கள் ஆடம்பர செலவிற்கும் களியாட்ட நிகழ்விற்கும் பயன்படுத்துவதனைக் குறைத்து, உள்ளூர் உற்பத்திக்கு மூலதனமாக அவற்றைப் பயன்படுத்தி வாழ்க்கையில் மேம்பாடு காண வேண்டும்.

இந்தக் கண்காட்சி மூலம் எமது நாடும் மக்களும் பயனடைய வேண்டும். குறிப்பாக எமது பகுதியின் உற்பத்திகளுக்கு அதிக சந்தை வாய்ப்புக் கிடைக்க வேண்டும் - என்றார்.

## நாட்டின் வியாபார மையங்களில் யாழ்ப்பாணமும் ஒன்று; அதனால் இவ்வர்த்தகக் கண்காட்சி முக்கியம் பெறுகிறது

### செயலாளர் ஜனக்குமார் நம்பிக்கை

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் செயலாளர் ஜனக்குமார் கருத்து தெரிவிக்கும் போது குறிப்பிட்ட விடயங்கள் வருமாறு:



நடைபெறும் யாழ். வர்த்தகக் கண்காட்சி 2010 நிகழ்வானது மிகவும் பயனுடையதாகும். தென் பகுதி வர்த்தக சமூகத்தையும் வடபகுதி வர்த்தக சமூகத்தையும் ஒருங்கிணைப்பதற்காக இந்தக் கண்காட்சி இடம்பெறுகிறது.

பிரபல நிறுவனங்களின் உற்பத்திகள் மட்டு மன்றி உள்ளூர் உற்பத்திகளும் அறிமுகப்படுத் தப்படுவதோடு அவற்றுக்குச் சந்தை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதாக உள்ளது.

யாழ்.வணிகர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த கண்காட்சி இலாப நோக்கமற்றது. அதன் காரணமாகவே பொதுமக்கள் பார்வையிடுவதற்கான அனுமதி இலவசமாக்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமன்றி, தென்பகுதி நிறுவனங்களின் காட்சிப்படுத்தலுக்கான இடவசதிக்கென மூன்று நாள்களுக்குமாக 30 ஆயிரம் ரூபாவும், உள்ளூர் உற் பத்தியாளர்களுக்கு 5 ஆயிரம் ரூபாவும் அறவிடப்படு கிறது. இது மிகக் குறைந்தளவு கட்டணத்தொகையாகும்.

குறிப்பாக வலுவிழந்தோரின் உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்துவதற்கான இடவசதி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்காட்சி நிகழ்வினை நடத்துவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள சகல தரப்பினரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக இராணுவம், பொலிஸ், யாழ்.மாநகர சபை, வேம்படி, மத்திய கல்லூரிகளின் அதிபர் உள்ளிட்ட பாடசாலைச் சமூகம் வழங்கிய ஒத்துழைப்புகளுக்கு யாழ்.வணிகர் கழகம் நன்றி கூறிக்கொள்கிறது.

நாட்டின் வியாபார வர்த்தக மையங்களில் தற்போது யாழ்ப்பாணமும் முக்கியம் பெறுவதனால் பல நிறுவனங்கள் ஆர்வத்துடன் பங்கேற்றுள்ளனர்.

இன,மத,மொழி பேதமற்ற முறையில் இந்தக் கண்காட்சியில் பங் கேற்க வசதி செய்யப்பட்டுள்ளது. பல்வேறு வகையான உற்பத்திகள் காட்சிப் படுத்தப்படவுள்ளன. இந்தக் கண்காட்சி நிகழ்வில் கிடைக்கும் இலாபம் சமூக சேவைக்காக வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து மக்களும் பார்வையிட்டு பயனடைந்து கொள்ள வேண்டும் - என்றார்.


உதயன் ஊடக அனுசரணையுடன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAXXIS

100% Quality • 100% Service • 100% Trust




**BENEDICTSONS (PVT) LTD.,**

Telephone : 5445400, Fax : 5445415

Email : wimala@maxxistires.lk

# யாழ்ப்பாண வணிகர் கழகம் நடத்தும் மாபெரும் வர்த்தகக் கண்காட்சி - 2010

அனைவரையும் கலந்துகொண்டு கண்காட்சியை பார்வையிடுவதற்கு விஷேட கழிவு விலையில் பொருள்களை கொள்முதல் செய்யும் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இடம்:**
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி
யாழ்.மத்திய கல்லூரி

**காலம்:**
27, 28, 29 மார்ச் 2010
(சனி, ஞாயிறு, திங்கள்)

மூன்று தினங்களும் மாலை 6.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அனுமதி இலவசம்

ஊடக அனுசரணை

உதயன்

2010 மார்ச் 27, 28, 29ம் திகதிகளில் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறுகின்ற **"Jaffna Trade Fair 2010"** கண்காட்சிக்கு உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.




# அல்ட்ராடெக்

**சீமெந்து**

## இன்ஜினியரின் தெரிவு




அதி உயர் தரம் வாய்ந்த உற்பத்தி மற்றும் சேவையை வழங்குவதில் உறுதிகொண்டுள்ளோம்.

Quality management system certification — Product quality certification — Environmental management system certification — Occupational Health and Safety Management System

**அல்ட்ராடெக் சீமெந்து லங்கா தனியார் நிறுவனம்**

இல.81/11/1, புதிய நுகே வீதி, பேலியகொட, களனி.
தொ.பே.011-2908310 பக்ஸ்.011-2908313
e-mail: corporate@ultratechcement.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண வணிகர் கழகம் நடத்தும்
# மாபெரும் வர்த்தகக் கண்காட்சி 2010



காலம் :
27, 28, 29
மார்ச் 2010

தரமான மின்சார
இலத்திரனியல்
பொருள்களை குறிப்பிட்ட
மூன்று தினங்களிலும் எமது
கண்காட்சி அறையில்
அதிவிசேட விலைக்கழிவுடனும்
உத்தரவாதத்துடனும் பொருள்களைக்
கொள்வனவு செய்திட வாருங்கள்.
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில்
அமைந்துள்ள
எமது காட்சியறைக்கு....

## JAFFNA ELECTRICALS

LG Life's Good

Authorised Dealer For Abans

141,Power House Road, Jaffna.
T.P: 021 222 4566, 5766.

94 (6), Stanley Road, Jaffna.
021 222 2353

Cool Line: 0777725258



# யாழ்ப்பாண வணிகர் கழகம் நடத்தும்
# மாபெரும் வர்த்தகக் கண்காட்சி 2010

தரமான நவீன கணனிகள், உதிரிப்பாகங்கள்,
மற்றும் மின்சார இலத்திரனியல் பொருள்களை
குறிப்பிட்ட மூன்று தினங்களிலும் எமது
கண்காட்சியில் மட்டும் அதிவிசேட
விலைக்கழிவுடன் பொருள்களைக்
கொள்வனவுசெய்திட வாருங்கள்.
யாழ்.மத்தியகல்லூரியில்
அமைந்துள்ள எமது காட்சியறைக்கு....

காலம் :
27, 28, 29
மார்ச் 2010




World's No 1

Abans
நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன் இலவச
விநியோகசேவையைப் பெற்றிட

## Midea
Electro Mart

Authorized Dealer for Abans Ltd.

No: 1-I, 1-H, Stanley Road,
Jaffna,Sri Lanka.

e-mail: midea21@gmail.com Tel: 021-2224566 Fax: 021 222 1646


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதான அரசியல் கட்சிகள் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுக்கத் தவறினால் ஆபத்து தமிழ் மக்களுக்கே!



**எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை வேட்பாளராகப் போட்டியிடுபவரும் கூட்டணியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி உதயனுக்கு வழங்கிய செவ்வி இது.**

## எதற்கு வாக்குக் கேட்கின்றோம் என்று கூட தெரியாமல் சிலர் களத்தில் நிற்கின்றார்கள்

**செவ்வி கண்டவர்: கவிநேசன்**

**கேள்வி:** எதிர்வரும் நாடாளுமன்றத்தேர்தலில் போட்டியிடுவதன் நோக்கம்?

**பதில்:** நாடாளுமன்றம் செல்ல வேண்டும் என்ற ஆசை எனக்கில்லை. ஒரு காலத்தில் நாடாளுமன்றில் கௌரவமான கனவான்கள் அங்கத்துவம் வகித்தார்கள். அத்தகையவர்களோடு சேர்ந்திருந்தது பெருமையாக இருந்தது.

ஆனால் இன்று அப்பிடியல்ல சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர்கள்; கொலைகளுடன் தொடர்புடையவர்கள், தூள் ('குடு') வியாபாரிகள் போன்ற சமூக விரோதிகள் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கிறார்கள்.

நான் பல தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளேன். ஆனால் பண உதவியோ, மதுபானங்களோ, யாருக்கும் கொடுத்தது கிடையாது.

எனது சொந்தப்பணத்திலே தேர்தல் பிரசாரங்களினை மேற்கொண்டேன். ஆனால் கோடிக்கணக்கில் பணத்தைச் செலவழித்தவர்கள் தோற்றுப் போன வரலாறும் இருக்கிறது.

தேர்தல் காலமென்றபடியால் லொறிகளில் சைக்கிள்களை ஏற்றி வந்து மக்களுக்கு அன்பளிப்புச் செய்கிறார்கள். தைப்பதற்குக் கிழிந்த கந்தையைத் தவிர எதுவுமில்லாதவர்களுக்கு 'தையல் மெஷின்' கொடுக்கிறார்கள்.

இந்நிலையில் மக்களை ஏமாற்றிப் பிழைப்பவர்கள் நம்மத்தியில் உள்ளார்கள். இன்றைய சூழ்நிலையில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி தைரியமாகப் பேசுபவர்கள் எவருமில்லை. பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதற்கு தமிழ் மக்களின் நேர்மையான பிரதிநிதியொருவர் தெரிவு செய்யப்படவேண்டும்.

அந்தத்தகுதி எனக்கிருக்கிறது. ஆதலால் தான் தேர்தலில் போட்டியிடுகிறேன்.

**கேள்வி:** நீங்கள் மூத்த அரசியல்வாதி என்ற ரீதியில் அரசியல் அனுபவம் நிறையவே இருக்கிறது. இந்நிலையில் இன்றைய தேர்தல் கள நிலைமைகள் எவ்வாறிருக்கிறது?

**பதில்:** தேர்தல் களநிலைமை எவ்வாறிருக்கிற தென்பதைவிட இத்தகைய தலை கீழான நிலைக்கு யார் காரணம் என்பது ஆராயப்பட வேண்டிய விடயம்.

தமிழ்க் கட்சிகளில் எந்தக் கட்சிக்கும் இரண்டு பேருக்குமேலே உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படக் கூடாது என்ற சதித்திட்டத்திற்கு சிலர் தம்மையறியாமல் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். வந்தவர்கள், நின்றவர்கள் எல்லோரும் வேட்பாளர்கள்.

அவர்களில் சிலர் எதற்கு வாக்குக் கேட்கிறோம் என்று தெரியாமல் கேட்கிறார்கள். இத்தகைய கொள்கையற்ற வேட்பாளர்களுக்கு தேர்தலில் தமிழ் மக்கள் நல்ல பாடம் புகட்டவேண்டும்.

எது எப்படியிருப்பினும் பிரதான அரசியல் கட்சிகள் ஒன்றுபட்ட நிலைப்பாட்டை எடுக்கத்தவறின் வரலாறு காணாத அபத்தம் தமிழ் மக்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

**கேள்வி:** எதுவுமே தெரியாது, ஏன் போட்டியிடுகிறோம் என்று கூட தெரியாமல் தேர்தலில் வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் என்று கூறுகிறீர்களே! புத்திஜீவிகள், இலக்கியவாதிகள் எல்லாம் சுயேச்சையாக போட்டியிடுகிறார்களே?

**பதில்:** இலக்கியவாதிகள், புத்திஜீவிகள் இவர்களெல்லாம் யார்? எமது மண்ணிலே எத்தனையோ இடர்கள், அவலங்கள் இடம்பெற்றன.

மாணவர்கள், கல்விமான்கள் இளைஞர், யுவதிகள் எனப் பல்வேறு தரப்பினர் கொலைசெய்யப்பட்டும், கடத்தப்பட்டபோதும் இந்தப் புத்திஜீவிகள், இலக்கியகர்த்தாக்கள் எல்லாம் எங்கு போய் நின்றார்கள். மக்களின் அவலங்களைக் கண்டு கண்டிக்காது மௌனம் சாதித்துவிட்டு இப்போது வேட்பாளர்களாக எம் மக்கள் முன் வந்து நின்று வாக்குக் கேட்கிறார்கள். சலுகைகளைப் பெற்று செயற்படும் ஏவலாளர்கள்.

இந்த வேட்பாளர்கள் யாரோ ஒருவரிடத்தில் சலுகைகளைப் பெற்று ஏவலாளராகவே செயற்படுகின்றனர். இத்தகைய நபர்களுக்கு காலம் பதில் சொல்லிக்கொள்ளும்.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கொள்கைகளில் இருந்து விலகிவிட்டதாக பரவலாக கதை அடிபடுகிறதே. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** தேசியம், சுயநிர்ணயம், மரபுவழித் தாயகம் இவையெல்லாம் உளுத்துப்போன சுலோகங்கள். எந்தத் தமிழனும் இதற்கு மாறானவன் அல்ல. இருப்பினும் கூட்டமைப்பினர் இந்தச் சுலோகங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் வாக்குகளை வேட்டையாடுகின்றனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 22 ஆசனங்களைப் பெற்ற கூட்டமைப்பு எம்.பிமார் பல்வேறு நாடுகளுக்கும் சுற்றுலாப்பயணங்களை மேற்கொண்டுவிட்டு தமது மக்களைப்பற்றி சிறிதளவேனினும் சிந்திக்காது இருந்து விட்டு தேர்தல் வந்தவுடன் மீண்டும் அதே கோஷங்களுடன் மக்களிடம் வாக்குக் கேட்டுவந்துள்ளார்கள்.

காலத்துக்குக் காலம் பசப்பு வார்த்தைகளைக் கூறி இனியும் எம் மக்களை ஏமாற்றமுடியாது. அவர்கள் ஏமாறவும் மாட்டார்கள்.

### அழிவுகளுக்கு கூட்டமைப்பே பொறுப்பேற்க வேண்டும்

உரிய நேரத்தில் உரியவர்களுக்கு சரியான ஆலோசனைகளை வழங்கத் தவறியமையால் பல்லாயிரக் கணக்கான மக்களின் சொத்தழிவுகளுக்கும், உயிர் அழிவுகளுக்கும் முழுப்பொறுப்பையும் கூட்டமைப்பே பொறுப்பு ஏற்கவேண்டும்.

**கேள்வி:** கிளிநொச்சி தேர்தல் தொகுதிக்கு பிரசாரத்துக்கு சென்றிருக்றீர்கள்? அங்குள்ள மக்களின் நிலை எவ்வாறுள்ளது?

**பதில்:** மிகவும் பரிதாபமான முறையில் அங்குள்ள மக்கள் தமது வாழ்க்கையை ஓட்டுகிறார்கள். நண்பர்கள் பலரைக் காணவில்லை, அங்கவீனர்கள், ஏழைகள் என எமது மக்கள் ஏதிலிகளாக உள்ளனர்.

மீள்குடியேற்றம் என்பது பெயரளவிலேயே நடைபெறுகிறது. இன்றும் கூட மக்கள் முகாம்களிலும், தமது உறவினர்களின் வீடுகளிலும் தங்கி உள்ளார்கள்.

கறல்கட்டி உக்கிப்போன சைக்கிள்களைத்தான் அங்கு வழங்குகிறார்கள். அதைக்கூட மக்கள் விழுந்தடித்து வாங்குகிறார்கள்.

உக்கிப்போன அந்தச் சைக்கிள்களை வழங்குவதில் கூட பெருமை தேடிக் கொள்ள எமது மண்ணில் அமைச்சர்களும் இருக்கிறார்கள்.

### எமது நடவடிக்கைகள்

**கேள்வி:** வன்னி மக்களின் இத்தகைய அவலங்களை நீக்க நீங்கள் எத்தகைய நடவடிக்கைகளை எடுப்பீர்கள்?

**பதில்:** முதற் கட்டமாக வன்னியுத்தத்தில் இறந்தவர்கள் யார்? இருப்பவர்கள் யார்? என்ற விவரங்களைத் திரட்டுவேன். இழந்து போன உடைமைகளுக்கு முழு நஷ்ட ஈட்டையும் பெற்றுக்கொடுப்பது, தடுப்பு முகாமில் உள்ள இளைஞர், யுவதிகளின் விடுதலைக்குக் குரல் கொடுத்தல், காணாமற் போனவர்களின் விவரங்களை தேடிக்கண்டுபிடிப்பது, வருடக் கணக்கில் கல்வியை இழந்து நிற்கின்றவர்களின் வாழ்வை மேம்படுத்துவது,

அங்கவீனர்களின் குறைபாடுகளைத் தீர்க்க உரிய வசதிகளை மேற்கொள்ளல், மக்களின் மீள்குடியேற்றம் ஆகிய விடயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுப்பேன்; எடுக்கவுள்ளோம்.

### ஆளுநர் நியமனத்தை உடனடியாக நிராகரித்தேன்

**கேள்வி:** உங்களுக்கு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ வடமாகாண ஆளுநர் பதவியை வழங்கத் தீர்மானித்திருந்தாரே அதுபற்றி?

**பதில்:** வடமாகாண ஆளுநர் பதவிக்கு என்னைத்தெரிவு செய்துள்ளதாக ஜனாதிபதி தொலைபேசி ஊடாகத் தொடர்புகொண்டு சொல்லியிருந்தார்.

நான் அதனை உடனடியாக நிராகரித்தேன். இந்த ஆளுநர் பதவியைப் நான் பெற்றுக்கொள்வதால் அது தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வுகாண எந்தவகையில் உதவும் என்று ஒரு கேள்வியையும் கேட்டேன்.

அத்துடன் ஜாதிக ஹெல உறுமய எனக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தருவதாகக் கூறியிருந்தனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் என்னுடன் தொடர்புகொண்டு எனக்கு எம்.பி.பதவியும், அமைச்சுப் பதவியும் தருவதாகக் கேட்டிருந்தார். இவற்றையெல்லாம் நிராகரித்தேன்.

இத்தகைய பதவிகளை ஏற்றுக்கொள்வதால் அது தமிழர்களுடைய பிரச்சினைக்குத் எந்தவகையில் உதவும் என்று யோசித்தேன்; ஆராய்ந்தேன்; அதனால் எதுவுமே நடக்கப்போவதில்லை என்று முடிவுசெய்து அந்தப் பதவிகள் அனைத்தையும் தூக்கியெறிந்து விட்டேன்!

### இந்தியப் பாணியிலான தீர்வு

**கேள்வி:** எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் நீங்கள் தெரிவு செய்யப்பட்டால் எதிர்கால அரசியல் நகர்வுகள் எப்படியிருக்கும்?

**பதில்:** கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்னால் தீர்வுத்திட்டமொன்றை முன்வைத்திருந்தேன். அதாவது இந்த நாட்டில் சமஷ்டி ஆட்சிமுறை, ஒற்றையாட்சிமுறையை விரும்பாதவர்களுக்கு ஏற்புடையதான தீர்வாகும். அதாவது இந்தியப் பாணியிலானது.

அது சமஷ்டி முறையென்றும், ஒற்றையாட்சி முறையென்றும் விவரிக்கப்படுவதில்லை. இலங்கைப் பிரச்சினைகளில் அக்கறை கொண்டுள்ள தமிழ் நாட்டில் வாழும் ஆறு கோடி மக்களுக்கும் கூட ஏற்புடையதாக இருக்கும்.


நம் நாட்டு அரச சார்பிலும், எதிர்க்கட்சி சார்பிலும் செயற்படும் பல தலைவர்கள் பல்வேறு அரசியல் கட்சிகளிலும் கத்தோலிக்க உயர்பீடத்தினர், பௌத்த பீடாதிபதிகள், கல்விமான்கள், தமிழ்-சிங்கள புத்திஜீவிகள் அனேகரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வாகும்.

இத்தகைய அரசியல் தீர்வு அடிப்படையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு அமையவேண்டும் என்று எதிர்காலத்தில் குரல் கொடுப்போம்.

### தயவுசெய்து வாபஸ் பெறுங்கள்

**கேள்வி:** தற்போதைய யாழ்ப்பாண அரசியல் நிலைவரங்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்...?

**பதில்:** நாடு பற்றி எரிகிறது. நாடு எதிர்நோக்கும் ஆபத்துகளை உணராமல், சிந்திக்காமல் பதவிகளுக்காகவும், அற்ப சலுகைகளுக்காவும் போட்டியிடுகின்ற




சுயேச்சைக் குழுக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்.

சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த அன்பர்களே! உங்களை மன்றாட்டமாகக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், நீங்கள் தேர்தலில் போட்டியிடுகின்ற எண்ணத்தைக் கைவிடுவது பற்றி யோசியுங்கள். எம் மக்களை இக்கட்டான நிலையில் இருந்து காப்பாற்றுங்கள். இன்னும் காலம் கடந்து விடவில்லை. அதில் இருந்து வாபஸ் பெறுங்கள்.

இதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெறுவீர்கள். அத்துடன் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் தமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து இனத்தைக் காப்பாற்ற ஒன்றுபட்டு செயற்பட வருமாறும் அன்புடன் அழைக்கிறேன். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாடகமும் அரங்கக் கலைகளும்
**T.தர்மலிங்கம் (தர்மா)**
இன்று (27.03.2010)
சனிக்கிழமை
யாழ்.பல்கலைக்கழகத்தின்
**B.A. (Hons) 1st Class Special degree**
கலைமாணிப்பட்டம்
பெறுவதையிட்டு
மகிழ்ச்சியடைவதுடன் மேலும் பல பட்டங்களைப் பெறுவதற்கும் பாராட்டிவாழ்த்துகிறோம்.

பாராட்டுபவர்கள்:
திருமதி சர்வேஸ்வரலலிதா காலநாதன்
சர்வேஸ்வரசெல்வேன் ஜனேசன்,
உமாஜினி.

ஐயனார் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (95918)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (27.03.2010)
சனிக்கிழமை
யாழ்.பல்கலைக்கழக
25 ஆவது
பொதுப்பட்டமளிப்பு
விழாவில்
முதுகலைமாணிப்பட்டம்
பெறும் கொழும்பு
இரத்மலானை இந்துக்
கல்லூரி ஆசிரியை
**திருமதி சத்தியபவானி செபமாலைதாசன்**
**(Master of Arts in Population Development Studies)**
அவர்களைப் பாராட்டிவாழ்த்துவதுடன் மேலும்
பலபட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ
யாழ். வண்ணார்பண்ணை காட்டுத்துறை பிள்ளையார்
20, B.A. தம்பிரிஸ்ரீ வேண்டி வாழ்த்துகின்றோம்.
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். **குடும்பத்தினர்.**

## ஓராயிரம் நாட்கள் ஓடினவோ...



திருமதி. இராஜேஸ்வரி கருணை ஆனந்தன்

கண்ணில்: 04.03.1950, நெஞ்சில்: 27.03.2007
**திதி : 24.03.2010**

கண்ணில் மறைந்து சென்று
மூன்றாண்டில் போனாலும்,
விண்ணில் பறந்திருந்து உன் பார்வை
மட்டும் நீங்காது,
எண்ணில் அடங்கா துயரத்தால்
வாடுகின்றோம்,
மண்ணில் வந்திறங்கி வாராயோ
தேற்றாயோ!

என்றும் உனது நினைவுடன்.....
கணவன், மக்கள்,
பருமக்கள், பேரன்.

14 - A/6, Dickman's Road,
Colombo - 04.
T.P : 2555108.

## கொடிகாமத்தில் நிரந்தர தபாலகம் அமைக்க காணி தருமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27

கொடிகாமத்தில் நிரந்தர தபால் அலுவலகம் அமைப்பதற்கு ஏ-9 வீதியுடன் அண்டிய காணி வழங்கி உதவுமாறு பரோபகாரிகளை அஞ்சல் மா அதிபர் கோரியுள்ளார்.

அஞ்சல் சேவையை விரைவுபடுத்த ஏ-9 வீதியுடன் அஞ்சல் அலுவலகம் அமைந்திருப்பது அவசியம் என்பதால் மக்களை உதவி செய்யுமாறு அவர் கேட்டுள்ளார்.

ஏ-9 வீதியுடன் உள்ள காணி கிடைக்குமாயின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விரைவில் வசதிகளுடன் கூடிய அஞ்சல் அலுவலகம் கொடிகாமத்தில் அமைக்கப்படும் என்றும் அஞ்சல்மா அதிபர் தெரிவித்தார். (ஒ-207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.வாரித்தம்பி சந்திரதேவன்**
**[Sp.Tr. maths, B.A.; Dip in Ed., M.Ed.]**
[பிரதி அதிபர், யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்]
இன்று (27.03.2010) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் முதுமாணிப்பட்டம் பெறும் இவரைப் பாராட்டுவதுடன் மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ வேம்படி விநாயகனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

யா/மீசாலை வீரசிங்கம்
மகா வித்தியாலயம்,
மீசாலை. (95935) **பாடசாலைச் சமூகம்.**


## பாராளுமன்றத் தேர்தல் 2010 யாழ் மாவட்டம்

அரச ஊழியர்களின் மேம்பாட்டினை கருத்தில் கொண்ட "மகிந்த சிந்தனையின்" முன்னோக்கிய திட்டத்தில் சில......
வாழ்க்கை செலவைக் கருத்தில் கொண்டு அரச ஊழியர்களின் சம்பள உயர்வு.
- வாகன கொள்வனவின் போது முற்றாக வரி நீக்கம்...
- காப்புறுதி திட்டம்....
- வீடற்ற ஊழியர்களுக்கு (10 Perches / பரப்பு) காணி ஒதுக்கீடு..
- மிக குறைந்த வீதத்தில் வீட்டு கடன் வசதி.

எதிர்கால வளர்ச்சியும், மகிழ்ச்சியும் எங்கள் கையில் சிந்தித்து வாக்களிப்போம்.




அங்கஜன் இராமநாதன்
Angajan Ramanathan B.ENG(HON) MBA
இளமை-துடிப்பு-செயற்றிறன்



## யாழ் மாணவர்களே! நகரில் மீண்டும்
## Engineering Council (UK), City & Guilds (UK) Programmes.

- A/L, O/L தகுதியோடு நீங்களும் நாளைய உலகில் British Qualified Chartered Engineer / Quantity Surveyor ஆகலாம்.
- குறுகியகாலத்தில் UK பல்கலைக்கழகங்களில் M.Eng / B.Eng பட்டப்படிப்புக்களை பயில்வதற்கான அரியவாய்ப்பு.
- APSS இல் படித்த மாணவர்கள் அதிகமானோர் UK பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**இலவச கருத்தரங்கு**
யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்
காலம் : March 29ம் திகதி
நேரம் : காலை 9.00 மணி

**EC U.K May. 2011**
Graduate Diploma Equivalent to B.Eng
Entry Qualification
HNDE/ NDT/ IESL
BTEC HND
B.Sc. Physical Science

**City & Guilds UK Dec. 2010**
Entry Qualification
Diploma
G.C.E (A/L)-Maths / Bio
Advanced Diploma
HNDE/ NDT/ IET/ NCT/ Open university/ BCS/ IT Based Diploma Students

**Programmes**
- Telecommunication Engineering
- Electrical and Electronics Eng.
- Civil Engineering
- Quantity Surveying
- Computer Engineering

Meet Apss International Personnels, Senior Lecturers and City & Guilds Country Office Personnels and Get Clarified All your Doubts

யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.

Seminar இல் கலந்து கொண்டு கல்வி பயில விரும்பும் A/L மாணவர்களுக்கு தகுதி அடிப்படையில் 20% Discount வழங்கப்படும்.

APSS INTERNATIONAL Networks (Pvt) Limited
5, Harmers Avenue, Colombo 6. Tel:- 011-2361587
Hot Lines :- 0772306[illegible]
077-3867965 075-83[illegible]
Approved Centre By City & Guilds No. 84022


## முடிவில்லா நினைவலைகளின் ஓராம் ஆண்டு

### சிவராசா வனேஸ்



இன்பத்தின் ஆரம்பம் 26.09.1989
துன்பத்தின் ஆரம்பம் 18.03.2009

ஐயா, வனோஜ் குட்டியே கரைகாணா
சோகத்தில் நாம் இங்கு தவித்திட
மண்ணிலே வாழும்வரை மறைந்திடாது என்
துயரமடா. எங்கள் அன்புத் திவியனே
உன் பூமுகம் எங்கேடயா, கண்ணைக்
கவரும் புன்னகை எங்கேயடா தேடித்
தவிக்கிறோம். உன்னை ஈன்றவள் தினமும்
கதறித்துடிக்கிறாள் உன்னை அணைத்திட்ட
உனது உடன்பிறப்புக்கள் ஏங்கித் தவிக்கிறோமடா நீ இல்லா
எமதில்லம் ஒளியிழந்து போனதடா
நட்பிற்கு இலக்கணமானவனே உன்னைத்
தேடும் விழிகளுக்கு என்ன பதில் சொல்வோம்
ஐயா. நீ நடந்த பாதையில் புற்கள் கூட
மடியாதடா நயவஞ்சகர் உன் உயிர்
குடித்த கதையினால் கற்களும் கசியுதடா
உன் பூ முகத்தை நெஞ்சில் வைத்து
மறக்கமுடியாமல் ஏங்கித் தவிக்கிறோமடா
இப்பூமியில் நாம் வாழும் வரை
உன் நினைவுகளுடன் என்றும் வாழ்ந்திருப்போம்.

சொந்த முகவரி:
[illegible]
[illegible] புங்குடுதீவு.

தற்காலிக முகவரி:
110/2, இராசாவின் றோட்,
அத்தியடி, யாழ்ப்பாணம். (சி/566092)

உன் குடும்பத்தினர்.
தாய் - விமலா
அண்ணா, தங்கைமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்



கல்விப்பணியில் நற்சேவை புரியும் எங்கள் விரிவுரையாளர்கள்
**சந்திரமௌலீசன் லலீசன்** அவர்கள்
இலங்கை கல்வியியலாளர் சேவை (தமிழ்ச் சிறப்பு முதுமாணி பட்டமும் (M.A.-Tamil) முதுகல்விமாணி (M.Ed)பட்டமும்,

**தங்கராசா கோபால கிருஷ்ணன்** அவர்கள்
இலங்கை கல்வியியலாளர்
முதுகல்விமாணி (M.Ed.) பட்டமும்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பெற்றுக் கொள்வதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இவர்கள் இருவரதும் கல்விப்பணி சிறக்க பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள் வட்டம்,
(சி-566202) கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கிருஷ்ணபிள்ளை குகநாதன்** (அதிபர்)
(SP.Sc.Trd, B.A., Dip.in Edu., M.Ed)




எமது பாடசாலையின் அதிபர் அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் 25ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் இன்று (27.03.2010) முதுகல்வியியல்மாணிப் பட்டம் பெறுவதையிட்டு அவரைப் பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்வில் சிறப்படைய இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பாடசாலை,
(சி-566209) கரவெட்டி.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மீசாலை விக்கினேஸ்வர
மகாவித்தியாலயத்தின் உப அதிபராகிய
**நாகலிங்கம் ஜானககுமார்**
(B.Sc. Dip.in.Ed.)



அவர்கள் இன்று (27.03.2010) சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இருபத்தைந்தாவது பட்டமளிப்பு விழாவில் (M.Ed.) முதுகலைமாணிப் பட்டம் பெறுகின்றார். அவர்களை மனம் திறந்து பாராட்டி வாழ்த்துவதுடன், மேலும் பல பட்டங்களைப் பெற்று சகல செல்வங்களுடன் வாழ்வில் சிறப்புற இறையாசி வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துபவர்கள்:
*அதிபர், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள், மாணவர்கள்.*
யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேசச் செயலாளராக சிறப்பாகப் பணிபுரிந்துவரும் பிரதேசச் செயலாளர்
**C.A.மோகன்ராஸ்** (SLAS-I)
அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் பிராந்தியத்திட்டமிடல் முதுமாணி பட்டம் பெறும் இந்நன்னாளில் மேலும் பல சிறப்புக்கள் பெற்று தொடர்ந்தும் மக்களுக்கு நற்சேவையாற்ற எல்லாம் வல்ல ஆண்டவரை வேண்டி வாழ்த்துகின்றோம்.

கட்டுப்பாட்டுச்சபை
உறுப்பினர்கள்,
(சி-566203) வலயம் I, கோப்பாய்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்.



இம்முறை (2010) யாழ்ப்பாணம் பல்கலைக்கழத்தின் 25 ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் கல்வி முது தத்துவமானி (MED) பட்டத்தினைப் பெறும் எமது கல்லூரியின் அதிபர்
**க.கிருஸ்ணகுமார்**
அவர்களையும்
பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா (PGD) பட்டத்தினைப் பெறும்
ஆசிரியர் **த. விஜயகுமார்**
அவர்களையும் எமது கல்லூரிச் சமூகம் வாழ்த்திப் பாராட்டுவதுடன், மேன்மேலும் இவர்கள் பல சாதனைகள் புரிந்து வாழ்வில் உயர்வுபெற இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்திப் பாராட்டுவோர்:
உத்தியோத்கதர் நலன்புரிச் சங்கம்,
யா/ சிதம்பரக் கல்லூரி.
(9566212) வல்வெட்டித்துறை.

## முதலாம் ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

'கெயர்' சர்வதேச நிறுவனத்தின் 'லிவ்ற்' திட்டம் 2 இன் முதலாவது சுழற்சிக் காலத்தில் 'சீடா' நிறுவனத்தின் நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட தென்மட்டுவில் கிராம அபிவிருத்தி சங்கத்தினூடான சமூக முன்னெடுத்தல் குழுவின் முதலாம் ஆண்டு நிறைவு விழா இன்று நடைபெறவுள்ளது.

தென்மட்டுவில் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இன்று பி.ப. 2 மணிக்கு சமூக முன்னெடுத்தல் குழுத் தலைவர் திருமதி லூயிஸ்மன்றேசா சிவாஜினி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி நவரத்தினம் ரஞ்சனா கலந்து கொள்வார்.

இறுதியாக கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

(ஒ- 10)

## விற்பனைக்கு

**ASHOK LEYLAND**
டிப்பர்(4 கியூப்)
விற்பனைக்குண்டு.
தொடர்பு - 0771754667
(95908)

## தேவை

திருநெல்வேலியிலுள்ள கணக்காளர் நிறுவனமொன்றுக்கு கணக்கியல் அனுபவமுடையவர்களும் பயிலுநர்களும் தேவை. 140, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். அல்லது ஞாயிறு காலை நேரில் வரவும். தொடர்பு - 0779530469

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**நவரத்தினம் நவகிருஸ்ணராசா**
[B.B.A.(Hons) Spl. in Financial Management]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் இன்று (27.03.2010) சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும் 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் வியாபாரத் தொழில் நிர்வாகமாணி -நிதி முகாமை சிறப்புப் பட்டத்தைப் பெறும் நவரத்தினம் நவகிருஸ்ணராசாவை பாராட்டி மகிழ்வதோடு அவர் மேன் மேலும் பற்பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வேண்டுமென மனமார வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்.
அத்தான் - ரவிச்சந்திரன்
அக்கா - ருக்மணிதேவி
மருமக்கள் - விதுஷன், லோஜன், டனுசன்

இல. 6, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(94810)

## காணி விற்பனைக்கு உண்டு

மானிப்பாய் பழைய தபால் கந்தோருக்கும் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கும் அருகில் உள்ள 30 பேர்ச் காணி விற்பனைக்கு உள்ளது.

தொடர்பு கொள்க:
0112 424891, 011 2508365
*மின்அஞ்சல்:*
anusuya@attorneygeneral.gov.lk
(95923)

## வேலை ஆள்கள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் பிரபல உணவகத்திற்கு சமையல் வேலை தெரிந்த (ஆண்/பெண்), கொத்து றொட்டி தயாரிப்பாளர், தேநீர் தயாரிப்பாளர், உணவு பரிமாறுபவர்கள் தேவை. உணவு, தங்குமிட வசதியுடன் நல்ல சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும்.

தொடர்பு:
**S.K.உணவகம்**
இல. 25, கண்டி வீதி, சாவகச்சேரி
(95942)

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி, கணக்கர் சந்திக்கும் ஈச்சமோட்டைச் சந்திக்கும் இடையில் 1 பரப் புக்காணியுடன் கூடிய வீடும் 1½ பரப்புக் காணி யுடன் கூடிய வீடும் 4½ பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0776146434
(95910)

# VACANCIES

APSS International இன் கிளைநிறுவனம் யாழ் நகரில் மே மாத முதற்கிழமையில் ஆரம்பிக்க இருப்பதால் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1) கிளை முகாமையாளர்
2) வரவேற்பாளர்கள்
3) கணனி இயக்குனர்கள்
4) விரிவுரையாளர்கள்

- Telecommunication
- Electrical and Electronics
- Civil Engineering
- Quantity Surveying

யாழ்/இந்துக்கல்லூரியில் 29-03-2010 அன்று இலவச கருத்தரங்கு நேரத்தில் விண்ணப்பங்களை நேரடியாக ஒப்படைக்கலாம். அல்லது apsseng@yahoo.com மின்னஞ்சலூடாக விண்ணப்பிக்கலாம்.

விபரங்களுக்கு
**APSS INTERNATIONAL**
No. 55, Hampden Avenue, Colombo 06.
Tel: 011 2361587, 077 3867695 Hotline: 077 2306642

# மனமுவந்த பாராட்டு



வ.கி.கிழக்கு பிரதேச செயலர்
C.A.**மோகன்ராஸ்**
SLAS - I

கோடி மக்கள் போற்றிடும் கோப்பாயின் செயலர் அவர்
கோணாத மனம் படைத்தோன் கொள்கையது உடையவராம்
யாழ். அன்னை புகழ்பரப்பும் பல்கலை வளாகமதில்
முத்தான விருததுவாம் முதுகலைமாணி என்னும் பட்டம்
பெறுகின்றார் எம் ஐயா, எம் நெஞ்சம் கொள்ளை கொள்ள
இவ்விருது பெற்றதுபோல் இனிவரும் நன்நாளில்
பட்டங்கள் பல பெற்று பதவிகளும் பல பெறவே
வாழ்த்துகின்றோம் எந்நாளும்.

(சி-566210) **நண்பர்கள்.**

# 2010 YEAR STUDY IN UK

Minimum Qualification
G.C.E (O/L)
APRIL, MAY SEPTEMBER NOVEMBER

UK சென்று கல்விகற்க விரும்பும் மாணவர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. யாழ்பாணத்துக்கு முதன்முறையாக லண்டன் கல்வி நிறுவனம் ஒன்று நேரடியாக வருகை தருகின்றது

## மாபெரும் இலவச கருத்தரங்கு

- புதிய சட்ட முறையின் மூலம் விசா பெறுவது எப்படி
- CAS நம்பர் முறைமையின் முழு விபரங்கள் வழங்கப்படும்
- UK செல்லும் மாணவர்களுக்கான அனைத்து சந்தேகங்களும் தெளிவுபடுத்தப்படும்

காலம் : 28 - 03 - 2010
இடம் : வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்
நேரம் : காலை 10.00 தொடக்கம் மாலை 04.00 வரை

**SPOT ADMISSION**

பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
தொடர்புகளுக்கு : 0771919192 - 0113056888
**WESTMINSTER**
INSTITUTE OF HIGHER STUDIES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆள் தேவை

கிழக்குக் கோண்டாவில் சந்தியில் இயங்கும் குரு அரைக்கும் ஆலைக்கு (கிறைன்டிங் மில்) உடனடியாக வேலை ஆள் தேவை.

தொடர்பு : சிறிதரன்
0776154941, 0779563011


# பஸ் தரிப்பிடம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நிர்மாணிக்கப்பட்ட பஸ்தரிப்பிடம் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரியைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகராஜா நினைவாக அமைக்கப்பட்ட பஸ் தரிப்பிடத்தை ஈ.பி.டி.பியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் சூ.அலெக்சாண்டர் (சாள்ஸ்) திறந்துவைப்பார்.

வைத்தியசாலை முன்பாக பஸ்தரிப்பிடம் இல்லாததால் வைத்தியசாலைக்கு வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதை அடுத்தே அங்கு பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-207)

# பரிசில் தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 27

மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை பரிசில் தின நிகழ்வுகள் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் ச.கிருஸ்ணன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி லியோன் புஷ்பராணி கலந்து கொள்வார். (ஒ-207)

# குடாநாட்டில் கடும் வரட்சி

யாழ்குடாநாட்டில் கடும் வரட்சி நிலவி வருகிறது. இப்பிரதேசத்திற்கு சூரியன் நேரடியாக உச்சம் கொடுக்கும் காலமானதால் இந்த வரட்சி நிலை நீடித்துக் காணப்படுகின்றது.

குளங்களில் நீர் அடியோடு வற்றியதால் கால் நடைகள் நீருக்காக அலைவதைக் காணமுடிகிறது. கிணறுகளில் நீர் மட்டம் விரைவாக குறைந்து வருகிறது.

வெப்ப நோய்களான அம்மை, சின்னமுத்துபோன்ற வற்றால் மக்கள் பீடிக்கப்பட்டுள்ளனர்.

சிறுதானியப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-135)


## காணவில்லை



JOKTER TERRIER என்ற சிறிய நாய் (25.03.2010) வியாழக்கிழமையிலிருந்து காணவில்லை. அதைக் கண்டுபிடித்து தருபவர்களுக்கு 1000/= சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: இ.ஶ்ரீஸ்கந்தராஜா
இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
(95928) T.P.: 021 4905874, 0775798974



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் (27.03.2010) இன்று இடம்பெறுகின்ற 25 ஆவது பட்டமளிப்பு விழாவில் இரண்டாம் வகுப்பு மேற்பிரிவில் விவசாய மாணிச் சிறப்பு பட்டம் பெறுகின்ற

**கந்தையா பகீரதன்**
**B.Sc in Agri.(Hons)**
**2nd Class upper division**

மேன்மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா,
அக்கா, தம்பி.

பத்தர்கேணி,
காரைநகர்.


## வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 812 திகதி: 25.03.2010

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | | | | போனஸ் இல: |
|---|---|---|---|---|---|
| Y | 03 | 33 | 54 | 69 | 37 |

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 13,575,774.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 2,000,000.00 | - |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 276 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 14024 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 197088 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. **6,296,160.00**

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை **14,391,121.00**

ஐந்து லெட்சம் அல்லது அதற்குக் கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 701315767 முதல் 701331841 வரை. சீட்டிழுப்பு இல. 634 திகதி 25-03-2010

வெற்றி எண்கள்

13 15 36 59 U (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 13,761,430/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,761,430/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 2,000/= | 22,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 348 | 1,000/= | 348,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 527 | 1,000/= | 527,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14132 | 60/= | 847,920/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6767 | 40/= | 270,680/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 165868 | 20/= | 3,317,360/= |
| | | மொத்தம் ரூ. | 6,132,960/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ஆலிந்தயே வாசனா வெற்றியாளர்கள்
தங்கக்காசு வெற்றியாளர் - K.A.விமலசிறி - பாதுக்கை.
கையடக்கத் தொலைபேசி வெற்றியாளர் - K.A.குமாரசிறி எட்மண்ட் - பியகமை.

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 701328926-2-22 |
| இரத்தினபுரி | 701325769-1-01 |
| மொணராகலை | 701315869-8-17 |
| பொலன்னறுவை | 701316145-7-18 |
| புத்தளம் | 701325241-1-24 |
| காலி | 701329491-1-41 |
| கொழும்பு | 701331647-4-39 |
| பதுளை | 701317397-3-14 |

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.
தொ.பே. 2333546/7

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,532,960/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 14,210,860/=

தொடர் இல. 601361393 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2010 மார்ச் 29 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்


யாழ். வர்த்தகக் கண்காட்சி - 27,28,29 ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரி "என்" கட்டடத்தில் (N Block) 4ஆம் இலக்க அறையில் பார்வையிடலாம்

# தங்க ஆபரணங்களின் தரத்தை கணிக்கும் உபகரணம்
# இப்போது நாடு முழுவதும் 1800 உபகரணங்கள் பாவனையில்!
# அல்பா மிராஜ் GK-300




- 100% நுணுக்கமானது. துரித செயற்பாடு.
- செறிந்துள்ள தங்கத்தின் வீகிதாசாரத்தைக் காட்டும்.
- 300கிராம் வரையிலான ஆபரணங்களை பரிசோதனை செய்யலாம்.
- ஒரு வருட பூரண உத்தரவாதம், நம்பகத்தன்மை, விற்பனையின் பின்னரான பராமரிப்பு சேவை.
- 9K முதல் 24K வரை கணிக்கலாம்.



போலிகளுக்கு ஏமாறவேண்டாம்

**100% நம்பகமானது**
உள் நாட்டில் வடிவமைக்கப்பட்டது அல்ல.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

cba சிலோன் பிஸ்னஸ் அப்ளையன்சஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
112, ரீட் அவென்யூ, கொழும்பு 4.
தொலைபேசி: 2589908, 2589909, 2589913
தொலைநகல்: 2503121
உடனடி அழைப்பு: டெக்ஸ்டர்-0777 736280
ரொபின் - 0777 260794

நம்பகமான நிறுவனம்
நம்பகமான உபகரணம்
நம்பகமான சேவை



# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து




நீராவியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
**ஜனார்த்தனன் ரஜினி**
தம்பதியரின் ஏக புத்திரி
**சதுர்ஷனா** அவர்கள்

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (27.03.2010) சனிக்கிழமை பி.ப. 4.30 மணியளவில் ஆனைப்பந்தி இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை விநாயகர் அருள்பெற்றுப் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்தும்

அன்புள்ளங்கள் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், மாமா, சித்திமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
சி.ஜனார்த்தனன் (ஜனா) - அப்பா
இல. 330, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒஸ்லோ அறிக்கையை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் தீர்வு காண எனது அரசு முன்வந்தது.

ஆனால் அந்த இணக்கப்பாட்டில் இருந்து நாம் முதலில் வெளியேறவில்லை. மறு தரப்பான புலிகளே வெளியேறினார்கள்.

ஒஸ்லோ அறிவிப்பு ஏற்பாட்டிலிருந்து புலிகள் வெளியேறியமையாலேயே சர்வ தேசம் - குறிப்பாக மேற்குலகு - புலிகள் இயக்கத்துக்கு எதிரான கடும் நிலைப் பாட்டை எடுக்கும் கட்டத்துக்குத் தம்மை மாற்றிக்கொண்டது.

புலிகள் அந்த இணக்கப்பாட்டை மீறிய பின்னரும் நாம் அதைப் பற்றி நின்றோம். 2005ஜனாதிபதித் தேர்தலில் கூட அதையே எமது திட்டமாகத் தமிழர் முன்வைத்து தமிழர்களின் அங்கீகாரத்தையும் கேட்டோம். ஆனால் புலிகள் தமிழ் மக்களை வாக்க ளிக்க விடாமல் தடுத்து நிலைமையை மாற்றினர்.

### மாறியுள்ள சூழலுக்கு ஏற்ற தீர்வுகளை தேட வேண்டும்

இப்போது புலிகளும் இல்லை. நிலைமை மாறிவிட்டது. மாறியுள்ள இந்தச் சூழ் நிலைக்கு ஏற்ப நாம் தீர்வுகளைத் தேட வேண்டிய தேவை உள்ளது.

எந்த அடிப்படையில் தீர்வு என்பதல்ல பிரச்சினை. தீர்வுக்கான நல்லிணக்கம் - புரிந்துணர்வு -சம்பந்தப்பட்ட தரப்புகள் மற்றும் இனங்கள், குழுமங்கள் இடையே ஏற்பட வேண்டும் என்பதுதான் பிரதான விவகாரம். அது எட்டப்படுமானால் தீர்வு எந்த அடிப்படையிலும் வரலாம். நல்லி ணக்கம் ஏற்பட்டால் தீர்வை எட்டுவது கஷ்டமான காரியமே அல்ல.

அதற்குத்தான் சகல தரப்பினரையும் அரவணைக்கும் தென்னாபிரிக்கத் தலை வர் நெல்ஸன் மண்டேலாவின் சுலோகத்தை நான் முன்வைக்க விரும்புகிறேன். அவர் பெரும்பான்மையினத்தவர்களான கறுப்பர்கள், சிறுபான்மையினரான வெள்ளையர்களின் மனதை வெல்ல வேண்டும் என்றார். அதற்குத் தீவிரமாக முயன்றார்; வென்றார். அதுபோலவே சிங்களவர்களா கிய நாங்கள் பெரும்பான்மை இனத்தவர் கள், இந்த நாட்டின் சிறுபான்மை இனத்த வர்களான தமிழ்ப்பேசும் மக்களின் - தமிழ், முஸ்லிம் மக்களின் - மனங்களை வெல்ல முயலவேண்டும்.

யுத்தத்தில் தாம் வென்றார் எனப் பீற் றிக்கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவால் தமிழர்கள் மற்றும் முஸ்லிம் களின் மனங்களை வெல்ல முடியவில்லை. நல்லிணக்கத்தையோ, புரிந்துணர் வையோ ஏற்படுத்த முடியவில்லை. அதற் கான நேர்மையான - உண்மையான - முயற் சிகளை அவர் ஆரம்பிக்கவே இல்லை. அதுதான் இன்றைய பிரச்சினை.

### புதிய பாதையில் செல்லத் தயாராகவேண்டும்

புரிந்துணர்வு ஏற்பட வேண்டுமானால் பழைய கசப்புணர்வுகளை - பகைமையை - நாம் மறந்து புதிய பாதையில் செல்லத் தயாராக வேண்டும்.

பழையவற்றை மறப்பது என்றால் இழைக்கப்பட்ட தவறுகளை - பிழைகளை - குற்றங்களை மூடிமறைப்பது என்றோ, அவற்றுக்குப் பொறுப்புக் கூறவேண்டியோர் பொறுப்புக் கூறாமல் தப்பிச் செல்ல வாய்ப்பளிப்பது என்றோ அர்த்தம் அல்ல.

தவறுகள் எல்லாத் தரப்புகளினாலும் இழைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பக்கம் பார்த்தால், யாழ். பொது நூலகம் எரிக்கப் பட்டிருக்கின்றது. மறுபக்கம் பார்த்தால், புனித தலதா மாளிகை தாக்கப்பட்டிருக்கின்றது.

யுத்தக் குற்றங்கள் பற்றியும் அதிகம் பேசப்படுகின்றது. ஐ.நா.செயலாளர் நாயகம் பான் - கீ - மூனும் இது குறித்தெல் லாம் பேசுகின்றார். இதற்காக அவருடன் முரண்பட வேண்டும் என்று நான் கருதவில்லை. அவருடன் இது குறித்து நாம் உரையாடலாம். தொடர்பாடல்களில் ஈடு படலாம்.

ஏதேனும் தவறுகள், குற்றங்கள் கடந்த காலத்தில் இழைக்கப்பட்டிருந்தால் அவற்றை மூடி மறைக்க எத்தனிப்பதில் அர்த்த மில்லை. மூடி மறைப்பதனால் பயனுமில்லை. அத்தகைய மூடுமந்திரங்களின் மீது உண்மையான புரிந்துணர்வை - நல்லிணக் கத்தை - நாம் கட்டியெழுப்ப முடியாது.

தவறிழைத்தோர் அடையாளம் காணப் படலாம். ஆனால் எவரையும் - எத்தரப்பிலும்- தண்டிக்காமல், மன்னித்து, புதிய சந்ததியின் அமைதியான வாழ்வுக்கு நாம் வழி செய்யலாம்.

அதுதான் நெல்ஸன் மண்டேலா காட்டிய வழி. அதுவே இன்று இலங்கைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது என நான் நினைக்கிறேன்.

### உண்மைகளை மூடி மறைக்காமல் அம்பலத்துக்குக் கொண்டு வரவேண்டும்

ஆட்சித் தரப்பிலும் தவறிழைக்கப் பட்டிருக்கின்றது. புலிகள் தரப்பிலும் தவறிழைக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்களுக்கு உள்ள ஆதங்கங்கள், விசனங்கள், கோபதாபங்கள், எரிச்சல்கள், சீற்றங்கள் போலவே சிங்களவருக்கும் உண்டு. முஸ்லிம்களுக்கும் உண்டு.

எனவே உண்மைகளை மூடி மறைக்காமல் அவற்றை அம்பலத்துக்குக் கொண்டு வருவோம். ஆனால் கடந்த காலத் தவறுகளுக்காக ஆட்களைத் தண்டிப்பதை விடுத்து, அடுத்த சந்ததியின் அமைதி வாழ்வுக்கான அத்திவாரமாக அவற்றை மறந்து, மன்னித்து, புதுவாழ்வுக்கு நம்மை வழிப் படுத்துவோம்.

இதுவே, அமையப் போகும் ஐ.தே.க. அரசின் திட்டமாக இருக்கும்.

ஒஸ்லோ இணக்கத்தைப் பொறுத்தவரை அதனைப் புலிகள் மட்டும் இடை நடு வில் கைவிட வில்லை. புலிகளை அடியொற்றி நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட கை விட்டு, பிற வழிகள் பற்றி இடை யில் பேசியதுண்டு.

எனினும் இன்று தமது பேரம் பேசும் வலிமையை மீள ஸ்திரப்படுத்துவதற்காகத் தந்திரோபாயமாக - சமயோசிதமாக - ஒஸ்லோ அறிவிப்பு என்ற துரும்பை அவர்கள் பற்றி நிற்கின்றனர். அதனைத் தவறு என நான் கருதவில்லை.

### தீர்வுக்கான முயற்சிக்கு பல வாசகங்கள் உள்ளன

எனினும், தீர்வு முயற்சியின் போது அவை பற்றியெல்லாம் நாம் பரிசீலிக்கலாம். தீர்வுக்கான முயற்சிக்கு நமக்கு பல வாசல்கள் உள்ளன.

பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம், திஸ்ஸ விதாரண குழுவின் தற்போதைய அறிக்கை, சிங்கள மகாசபையின் திட்டம் என்று ஏராளமானவை உள்ளன.

எது, எப்படியென்றாலும் தீர்வை எட் டும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உண்டு. அங்கு திறந்த மனதுடன் அணு கிப் பேசுவோம்.

தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்புடைய அதிகாரப் பகிர்வுத் திட்டம் ஒன்றை நாம் எட்டுவோம்.

தீர்வுக்கான விவகாரத்தில் 85 வீத மானவற்றுக்கு சுமுகமான முடிவுகளை எட்டுவதில் எந்தச் சிக்கலும் - பின்னடைவும் - இருக்காது என நான் நம்புகிறேன். எஞ் சிய 15 வீத விடயங்கள் குறித்தே நாம் ஆழ மாக - கடுமையாக - தீவிரமாக - விவாதிக்க வேண்டி யிருக் கும் எனவும் நான் கரு துகின்றேன்.

அவ்விடயங்களையும் பேசி நாம் இறுதி முடிவை எட்டும் போது இறுதியாக சர்வ ஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் முழு மக்களினதும் அங்கீகாரத்தையும் நாம் அதற்கு ஒரேயடியாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

- இப்படிக் குறிப்பிட்டார் ரணில்.

([illegible] மேலதிக விவரங்கள் பின்னர் பிரசுரமாகும்)


## யாழ்.மத்திய கல்லூரியில் 27, 28, 29ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் வர்த்தக கண்காட்சியில்

இந்திய நிறுவனமான DIP ILITE INDUSTRIES LTD இலங்கை முகவரான COLOUR CRAFT (Acron) மாணவர்களுக்கும், தையல் கற்பவர்களுக்கும் தேவையான பொருள்களை பெற்றுக். கொள்ளலாம். இங்கு பார்வையிடமுடியும் என்பதையும் உற்பத்தி தொடர்பான விளக்கங்களை நிறுவனத்தில் இருந்து நேரடியாக வருகை தந்துள்ள நிறுவனத்தின் தேர்ச்சி பெற்ற நிபுணர்களால் விளக்கமளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ பொருள்களை கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும்.

யாழ்மாவட்ட முகவர்:
சிறிகரன் புக் சென்டர், 75, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம். 0215210960 (சி/566098)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தின் 25ஆவது பட்டமளிப்பு விழாவில்

திருமதி துஸ்யந்தி கௌசிகன்

தொழில் நிர்வாகமாணி சிறப்புப் பட்டம் (B.B.A Hons) Special in Financial Management பட்டம் பெற்றுக் கொள்வதை முன்னிட்டு மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

கணவன்: கௌசிகன், தந்தை: துரைரட்ணம், தாய்: ஜெயகுமாரி, சகோதரன்: துஜீவன், மாமன்: சண்முகநாதன், மாமி: உமாதேவி, மைத்துனர், சகோதரி குடும்பத்தினர், கோபகன், துரைராசா குடும்பத்தினர், நாகலிங்கம் குடும்பத்தினர்.



## றிச்சாட் றேடிங் கொம்பனி - குருநாகல்

யாழ்.ஆசிரியர்களே! மாணவர்களே

டிலானி பி.ஜெயதிஸ்சவின்

பாலர் வகுப்புக்களுக்கான வெளியீட்டுப் புத்தகங்கள்.

Richard Copy Writing Books (English), Richard Copy Writing Biginners (English), Richard My First ABC Learining Book, Richard Learn and Write, தமிழ் எழுதுவோம் பகுதி 1, பகுதி 2, பகுதி 3 மற்றும் பல சிறுவர்களுக்கான கதைப் புத்தகங்கள். (English), O/L வகுப்புக்களுக்கான Maths (English Medium), O/L வகுப்புக்களுக்கான Health Scince Model Paper (English Medium), Grade 6 Mathamatics (English Mediun), A/L வகுப்பு Combined Maths (English Mediun), மிகவும் தரம் வாய்ந்த டிஸ்னி அப்பியாசப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் யாவையும் யாழ்.நகரில் உள்ள கடைகளிலும். பாடப்புத்தகங்கள்.

அன்னை புத்தகசாலை, இல: 7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ்.ஏக விநியோகஸ்தர்: ஆசீர் வணிக நிலையம், கே.கே.எஸ். [illegible]

டிலானி பி.ஜெயதிஸ்ச, றிச்சாட் றேடிங் கொம்பனி, குருநாகல். (95949)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையில் கணித ஆசிரியராகக் கடமையாற்றி அதிபர் தரம் 3 இற்கு பதவியுயர்வு பெற்று யா/உடுவில் மல்வம் றோ.க.த.க. பாடசாலையின் அதிபர் கடமையை ஏற்றுள்ள க.த.வரதராஜா அவர்களை மனம் மகிழ்ந்து பாராட்டுவதோடு மென்மேலும் பல பதவியுயர்வுகள் கிடைக்க இறைவன் அருளையும் வேண்டுகிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க.பாடசாலை.


## கண்ணீர் அஞ்சலி



எமது செயலகத்தின் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சரவணப்பெருமாள் லோகேஸ்வரன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சரவணப்பெருமாள் அருந்தவநாயகி

23.03.2010 அன்று இறைபதம் எய்தியமையால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலகம்,
பச்சிலைப்பள்ளி. (95852)

பிரதேச செயலரும், அனைத்து அலுவலர்களும்.

## மரண அறிவித்தல்கள்

### சச்சிதானந்தன் இரவீந்திரநாதன்

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும், திகிரி லேன், தும்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற பண்டிதர் க.சச்சிதானந்தத்தின் சிரேஷ்ட புத்திரன் இரவீந்திரநாதன் நேற்று (26.03.2010) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2010) சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை,
பருத்தித்துறை.

தகவல்:
திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தம்.

### திருமதி கந்தையா கனகம்மா



புத்தூரைப் பிறப்பிடமாகவும் கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா கனகம்மா நேற்று (26.03.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நன்னியர்-அபிராமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, பொன்னம்மா, கிருஷ்ணர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கராசா (ஓய்வுபெற்ற மின்சார சபை ஊழியர்), ஜெகராசா (பிரான்ஸ்), இராசமலர், சிவமலர், செல்வராசா (டென்மார்க்), சிவரூபராசா (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு தாயும் நல்லலிங்கம் ( ஓய்வுபெற்ற சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்), து.ஸ்ரீஸ்கந்தராசா( ஓய்வுபெற்ற சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்), த.கமலாதேவி, ஜெ.நாகேஸ்வரி (பிரான்ஸ்), செ.இரத்தினேஸ்வரி (டென்மார்க்), சி. விவிதா (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு மாமியும் த.கஜதீபன், த.சஜீவன், த.பகீரதி, த.ஜெகதீபன் (யா/ வசாவிளான் ம.ம.வித்தியாலய மாணவன்), ஜெ. குபேந்திரன் (பிரான்ஸ்) , ஜெ.அபிவர்ணா (பிரான்ஸ்), ஜெ.அரவிந்தன் (பிரான்ஸ்), ஜெ. அபிராமி (பிரான்ஸ்), ம.உஷாந்தினி, ந.நிஷாந்தினி (ஆசிரியை, யா/ எழுவை தீவு றோ.க.த.க.பாடசாலை), ந.துஸ்யந்தினி, ந.தர்சிகா, ந.அபிஷாயினி, ஸ்ரீ. விதுஷன், ஸ்ரீ.நித்துயா, செ.சோபியா (டென்மார்க்), செ.ஜோஸ்வா(டென்மார்க்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.03.2010) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை. (94813)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி உதயலட்சுமி சிவகுரு

தும்பளையைப் பிறப்பிடமாகவும், மீசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்டு பின்னர் இறுதி நாள்களில் தும்பளையில் வசித்தவருமாகிய திருமதி உதயலட்சுமி சிவகுரு அவர்கள் நேற்று (26.03.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தும்பளை மேற்கு காலஞ்சென்றவர்களான ப.க. சுப்பிரமணியம் (மணியம் சுப்பர்) - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகளும், மீசாலை தெற்கு காலஞ்சென்றவர்களான தம்பையா - பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சிவகுருவின் (முன்னாள் உரிமையாளர், தேநீர்ச்சாலை, பழைய புகையிரத நிலையத்தடி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கந்தையா, அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2010) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் தும்பளையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாஸ்திரியார் ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

தகவல்:
திருமதி நிமலா ஸ்ரீஸ்கந்தராஜா, (பேரமகள்). (94812)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, மார்ச் 27

தேசிய லொத்தர் மஹஜன சம்பத 2221ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் "O" என்ற ஆங்கில எழுத்தும் 8/9/2/2/7/1 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் இடமிருந்து வலமான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை. 8/9/2/2/7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாக இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/2/2/7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கும்.

2/2/7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 126 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கும்.

2/7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1287 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

7/1 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,091 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கும்.

1 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,29,346 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும்.

வலமிருந்து இடமான அமைப்பில் 8/9/2/2/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15 பேருக்கு ஏழாம் பரிசாக தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

8/9/2/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 127 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும்.

8/9/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,300 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

8/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 13,005 பேருக்கு பத்தாம் பரிசாக தலா ஐம்பது ரூபா கிடைக்கும்.

"O" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 51,720 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (10)

# பொன்சேகாவின் துணைவியார் கொழும்பு ஆயரைச் சந்தித்தார்

கொழும்பு, மார்ச் 27

ஜெனரல் சரத் பொன்சேகா மிக விரைவில் விடுதலையாகி இந்த நாட்டுக்குச் சேவையாற்றவேண்டும் என்று கொழும்பு மறைமாவட்ட ஆயர் வண. மெல்கம் ரஞ்சித் பிரார்த்தித்துள்ளார்.

பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா, ஜே.வி.பியின் எம்.பி. சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் ரிரான் அலஸ் ஆகியோர் நேற்று கொழும்பு மறைமாவட்ட ஆயரைச் சந்தித்து பொன்சேகாவின் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக ஆயரிடம் விளக்கிக் கூறினர். இந்தச் சந்திப்பின்போதே மறைமாவட்ட ஆயர் பொன்சேகாவின் விடுதலைக்காகத் தாம் பிரார்த்திக்கிறார் எனத் தெரிவித்தார்.

இது தொடர்பாக சுனில் ஹந்துன்நெத்தி கூறியவை வருமாறு:-

கொழும்பு மறைமாவட்ட ஆயர் வண. மெல்கம் ரஞ்சித்தைச் சந்தித்து 'மனிதாபிமானத்தின் உடன்படிக்கை' என்ற எமது தேர்தல் விஞ்ஞாபனம் குறித்து அவரிடம் விளக்கிக் கூறினோம்.

விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல், ஜனநாயகம் மற்றும் நல்லாட்சியை ஏற்படுத்துதல், நாட்டை அவிருத்தி செய்தல், கல்வி, மீன்பிடித் தொழில் போன்றவற்றை முன்னேற்றுதல் பேன்ற விடயங்கள் தொடர் பாக நாம் அவருக்கு விளக்கிக் கூறினோம். அவர் இவை தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்டார்.

பொன்சேகாவின் உடல் நலம் தொடர்பாக அவர் எம்மிடம் விசாரித்தார். பொன்சேகா விரைவில் விடுதலையாகி இந்நாட்டுக்கு சேவைசெய்யவேண்டும் என்று அவர் பிரார்த்தனை செய்தார் - என்றார்.

## யாழ்.வணிகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 8 மணி வரை இடம்பெறும்.

கண்காட்சியை ஒட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் கலை, கலாசார நிகழ்ச்சிகள் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை இடம்பெறும்.

உடுப்பிட்டி எஸ்.ஜெயநாதனின் நாதஸ்வரக் கச்சேரி, வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் காவடி நடனம், திருமதி அகல்யா இராஜபாரதியின் மாணவர்கள் வழங்கும் நிருத்தியாஞ்சலி நடன நிகழ்வு என்பன நடைபெறும்.

இக்கண்காட்சியில் சிறப்பு அம்சமாக இந்திரா றேடேர்ஸ் நிறுவனத்தின் வாகனங்கள் கண்காட்சியும், விற்பனையும் இடம்பெறவுள்ளன. புதிய, மறுசீரமைக்கப்பட்ட கார், வான், ஹைஏஸ் வான், பிக்கப் ஆகியன காட்சிப்படுத்தப் படவுள்ளன.

(சிறப்புமலர் I - IV பக்கங்களில்)

(1)

## யாழ்.நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துரையப்பா விளையாட்டரங்கை நவீன மயப்படுத்துவது தொடர்பாகவும் யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான வளங்கள் மற்றும் வசதிகள் தொடர்பாகவும் குழுவினர் அரச அதிபருடன் கலந்துரையாடினர்.

யாழ்.திறந்த வெளியரங்கில் கலாசார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பாக வும் குழுவினர் ஆராய்ந்தனர். அந்த இடங்களையும் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

விஸா அலுவலகம், கலாசார மத்திய நிலையம் ஆகியவற்றை அமைப்பது, துரையப்பா விளையாட்டரங்கை நவீன மயப்படுத்துவது ஆகிய திட்டங்கள் குறித்து கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. குறிப்பிட்ட திட்டங்களை விரைவுபடுத்தும் நோக்கில் இடங்களைத் தெரிவு செய்வதற்காக இக்குழு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது - என்று அரச அதிபர் கே.கணேஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கும் அவர்கள் விஜயம் செய்தனர். (ஒ-1-16)

## தபால்மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


நேற்றுமுன்தினம் ஆரம்பமான தபால் மூல வாக்களிப்பில் கலந்துகொள்ள முடியாதவர்கள் தொடர்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமிருந்தும் தகவல்கள் கிடைத்துள்ளன.

இத்தகைய பிரச்சினையை எதிர்கொண்டுள்ள - தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடி பொதுத்தேர்தல் தினத் தன்று தேர்தலில் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள முடியுமெனத் தேர்தல்கள் செயலகத்தின் ஆலோசகர் கூறினார். (அ-சி)


தகவல் தொழில் நுட்பத்தில் நீங்களும்
BIT
விஞ்ஞானமாணி தகவல் தொழில்நுட்பம்
Bachelor of Information Technology
University of Colombo
DIT ⇨ HDIT ⇨ BIT
Year 1 Year 2 Year 3
3 Pass A' Levels? → Register for BIT
No Pass A' Levels? → FIT
BIT பட்டமளிப்பில் சிறப்பு விருது பெற்ற நிறுவனம்
விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும் நேரில்
Closing Date 10.04.2010
25 Students Only
324, Palaly Road, Jaffna.
Call Today-772395895

'தைரொயிட்' நோயாளிகளுக்கான இலவச மருத்துவ முகாம்
Abbott நிறுவனத்தின் அனுசரணையுடன்
Lava Hospital நடத்தும் வைத்திய முகாமில்
தைரொக்ஸின் குறைபாட்டைக் கண்டறியும்
இரத்தப் பரிசோதனை (TSH) மேற்கொள்ளப்படும்.
மற்றும் இதர நோய்களுக்கான
வைத்திய ஆலோசனைகளும் வழங்கப்படும்.
இடம் : சென்.ஜேம்ஸ் பாடசாலை
காலம் : நாளை (28.03.2010) 8.30 a.m

மரக்கறி வியாபாரிகளின் கவனத்துக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு ஏற்றுமதியாகும் வெண்காயம், பீற்றூட், உருளைக்கிழங்கு போன்ற மரக்கறி வகைகளை கொமிசன் அடிப்படையில் நியாயமான விலையில் விற்றுக் கொடுக்கப்படும்.
தொடர்பு:
Rupa Trading (Pvt) Ltd.
ரூபா றேடிங் கொம்பனி
116, 4 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு -11
தொ.பே.: 0112326719, 0112447329, 0750814789

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சங்கரப்பிள்ளை உருத்திரகுமார்
(B.Sc.)
அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தின் 25ஆவது பட்டமளிப்பு விழாவில் M.Ed. பட்டத்தினைப் பெறுவதையிட்டு மனங்குளிர பாராட்டி வாழ்த்துகின்றோம்.
துன்னாலை மத்தி, கரவெட்டி.
கோவிற்கடவை நண்பர்கள்.

Oriflame முற்றிலும் இலவசம் Oriflame
27, 28, 29 ஆம் திகதிகளில் மத்திய கல்லூரியில் இடம் பெறும் கண்காட்சியில் எமது நிறுவனத்தில் தமது பெயர்களைப் பதிவுசெய்து அழகுசாதனப் பொருள் களைக் கொள்வனவு செய்பவர்களுக்கு!
★ 10 விதமான பேசியல் வகுப்புக்கள் இலவசம்
★ வகுப்புகள் (31.03.2010) ஆரம்பம்.
அட்சயா, 461, நாவலர் றோட், அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
Oriflame, Indipendent Manager, Reg.No : 111765
சதீஸ்குமார் - அபராஜிதா

ஐக்கிய தேசியக் கட்சி X
1

பிஞ்சுப்பாலகனும் உணர்ந்து கொண்டான்
தியாகராஜா துவாரகேஸ்வரனின்
வருகையை
மக்கள் துயர் துடைக்க
மீண்டும் ஒரு மகேஸ்வரன்
தியாகராஜா துவாரகேஸ்வரன்

SM CONSULTANT SERVICES
GOLDEN OPPORTUNITY FOR STUDENTS
HIGHER STUDIES AT UNITED KINGDOM[UK], INDIA, POLAND, UKRAINE.
JAFFNA EDUEXPO 2010
AT
St. Patrick's college Auditorium, Jaffna.
On 28th & 29th March 2010.
SPOT ADMISSION
மேற்படி கல்விக்கண்காட்சியில் கலந்து கொள்ளும் எமது நிறுவன கண்காட்சிக்கூடத்தில், இந்திய பல்கலைக்கழகங்களிற்கு பதிவு செய்யும் மாணவர்கட்கு பதிவு கட்டணம் ரூபா. 15,000 இல் (33.3%) கழிவு வழங்கப்படும்.
குறிப்பிடப்பட்டுள்ள நாடுகளுக்கான விபரங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளிற்கு:
021 222 3818
021 567 3818
077 452 8818
இல: 148, கோயில்வீதி, (யூனிசெவ் முன்பாக) யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org